பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-137

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 19 Vol : 19	இதழ் : 07 Issue : 07	www.ncbhpublisher.in	அக்டோபர் 2026 October 2026	விலை Price ₹ 45/-	ஆண்டு சந்தா Annual Subscription ₹ 540/-



பெற்றோர் பொறுப்பும் ஆசிரியர் கடமையும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம்

டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி வளாகம், கோயம்புத்தூர்.

2026ஆம் ஆண்டுக்கான விருதுகள் பற்றிய அறிவிப்பு

உ.வே.சா. தமிழறிஞர் விருது

(தமிழ் மூதறிஞர் ஒருவருக்கு)

பெரியசாமித் தூரன் தமிழ்ப் படைப்பாளர் விருது

(தமிழ்ப் படைப்பாளி ஒருவருக்கு)

டாக்டர் நல்ல பழனிசாமி பிறதுறைத் தமிழ்த் தொண்டர் விருது

(அறிவியல் அல்லது பிறதுறை வல்லுநர் ஒருவருக்கு)

டாக்டர் தவமணி தேவி மகளிர் மணி விருது

(பெண் படைப்பாளர் ஒருவருக்கு)

2026ஆம் ஆண்டில் இத்தகுநிலை பெற்ற சான்றோர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உறுதுணையாக மேற்குறித்த விருதுகளுக்கான பரிந்துரைகள், அவர்தம் நூல்கள், படைப்பிலக்கியங்கள் ஆகியவற்றைச் சாதனைச் சான்றுகளுடன் கீழே குறித்துள்ள முகவரிக்கு அனுப்பி உதவ, தகைசால் வல்லுநர்கள், பதிப்பாளர்கள், நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இது பற்றிய முழு விவரங்கள் : www.worldcenterfortamilculture.com என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

பரிந்துரைகளை உரிய இணைப்புகளுடன் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :

பரிந்துரைகள் பெற இறுதி நாள்

10.11.2026

டாக்டர் நல்ல பழனிசாமி

தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம்

டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி வளாகம்

காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர் – 641 048

மின்னஞ்சல் : ctc@kmch.ac.in

தொலைபேசி : **0422 2369321, 2369132.**

செயலர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம்



கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

திருவள்ளுவராண்டு 2057

மலர். 19 இதழ். 07. அக்டோபர் 2026

ஆசிரியர்

த. ஸ்டாலின் குணசேகரன்

ஆசிரியர் குழு

க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண். 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை. 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ். 45. 00. ஆண்டு சந்தா. 540. 00
மாணவர்களுக்கு. 500. 00
ஆயுள் சந்தா. 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா). 4050. 00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai. 600 050
A/c. No. 1035249018
IFSC Code. CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். (பி) லிட்.,
41-பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்.
அம்பத்தூர். சென்னை. 600 050.
தொலைபேசி எண். 044-26251968, 26258410



1 பெற்றோர் பொறுப்பும் ஆசிரியர் கடமையும்
ஆசிரியர் குழு 04

2 படித்துப் பாருங்களேன்...
ப.கு.ராஜன் 06

3 பேராசிரியர் ந.முத்துமோகன்
மார்க்சியம் - தமிழ்ச்சூழல்
வீ.அரசு 19

4 பேச்சையே பேராயுதமாக்கிய பேராசிரியர்!
த. ஸ்டாலின் குணசேகரன் 27

5 வளவில் வாழ்தல் - ஓர் இலக்கியக் குறுக்கீடு
இரா. காமராசு 33

6 லியோ டால்ஸ்டாய் - காந்தியின் வாத்தியார்
பாரதிபாலன் 37

7 காதல், இயற்கை, புரட்சி மற்றும் வெங்காயம்
பாப்லோ நெருடா வாழ்வும் கவிதைகளும்
அஜயன் பாலா 43

8 தகவமைத்துக் கொள்ளுதலே வாழ்க்கை
விசித்திரக்கவி (எ) லோகேஷ்வரன் 47

9 குணங்குடி மஸ்தான் சாகிபின்
இறைத்தேடலும் சமய ஒருமைப்பாடும்
பேராசிரியர் உ. அலிபாவா 49

10 சேட்டுக்கழித்தல் எனும் பள்ளத்துப் பொங்கல்
முனைவர் சி. முத்துகந்தன் & பெ. கோவிந்தசாமி 55

11 பெயரில் மட்டுமின்றி, செயலிலும் மாணிக்கமாக
வாழ்ந்த மாமனிதர்!
சா.ஜெயராஜ் 61

12 புரட்சியாளர் லெனின் எழுதிய தேர்வு நூல்களை
ஏன் வாசிக்க வேண்டும்?
இந்திரா 65

13 A Lexical Analysis of Nationhood and Patriotism
in the Select Poems of Alfred Lord Tennyson
B. Thangamarimuthu & Dr. C.S. Jeyaraman 68



பெற்றோர் பொறுப்பும் ஆசிரியர் கடமையும்

பெற்றோர் பலர் தங்களது குழந்தைகளை மிகச் சிறுவயதிலிருந்து புத்தகத் திருவிழாவிற்கு அழைத்து வருகின்றனர். உலகம் தெரிவதற்கு முன்பே குழந்தைகளுக்குக் கடைகளில் பொம்மைகள் வாங்கித் தருவதைப் போல, தீபாவளிச் சமயத்தில் அவர்களுக்கு ஏற்ற எளிய பட்டாசு வகைகளை வாங்கித் தந்து மகிழ்விப்பதைப்போல சிறு சிறு சிறார் நூல்களை வாங்கித் தருவதை வழக்கமாக்கி வருகின்றார்கள்.

சில வீடுகளில் ஐந்து, ஆறு வயதுக் குழந்தைகள் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக நூற்றுக்கும் மேற்பட்ட சிறார் நூல்களைச் சேகரித்து வைத்திருப்பதைப் பார்க்க முடிகிறது. குழந்தைகளை ஊக்குவிக்கும் விதத்தில் ஒரு சிறு நூலகம் போன்ற அமைப்பை வீட்டில் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இத்தகைய முயற்சிகள் யாவும் அக்குழந்தைகளுக்கு அவர்களுக்கே தெரியாமல் விளையாட்டாய் நூல்களின் மீதும் வாசிப்பின் மீதும் நாட்டமும் ஈடுபாடும் ஏற்பட ஏதுவாக அமைகின்றன.

திணிப்பு என்ற வகையில் அல்லாமல், குழந்தைகள் மகிழ்வுடன் ஈடுபடும் விதத்தில் இவ்வாறு தொடக்கத்தில் பெற்றோரால் எடுக்கப்படும் இப்படிப்பட்ட இயல்பான முயற்சியால் காலப்போக்கில் பள்ளிக் காலத்திலேயே வாசிப்புக்கு ஆட்படுகிற குழந்தைகளாக வளர்கின்றனர்; வளர்க்கப்படுகின்றனர்.

இத்தகைய குழந்தைகள் பண்டிகைக்கால உணர்வுடன் ஆண்டுதோறும் புத்தகத்திருவிழாவிற்குப் பெற்றோரால் அழைத்து வரப்பட்டு எட்டாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்புகளுக்கு வருகிறபோதே தாங்களே நூல்களைத் தேர்வு செய்து வாசிக்கிறவர்களாக உருவெடுக்கின்றனர்.

'வேறு புத்தகங்களைப் படிக்கும் குழந்தைகள் பாடப் புத்தகங்களின் மீது கவனம் செலுத்தமாட்டார்கள், அதன் காரணமாக மதிப்பெண்கள் குறைவாகப் பெற வாய்ப்புண்டு' என்று எண்ணியிருந்த பல பெற்றோரின் கண்ணோட்டம்


படிப்படியாக மாறிவருகிறது. வேறு நல்ல பொதுப்புத்தகங்களை வாசிக்கும் குழந்தைகளுக்கு ஆசிரியர் நடத்தும் பாடங்கள் நன்றாகப் புரியும்; அதன் காரணமாக படிப்பு சுலபமாவதோடு, புரிந்து படிக்கவும் - அதிக மதிப்பெண்கள் பெறவும் வாய்ப்புள்ளது. இவற்றோடு சிறு வயதிலேயே வாசிப்புக்கு வசப்பட்ட குழந்தைகளுத்குத் தன்னம்பிக்கை தானாக வளரும். தான் படிக்கும் பாடம் தொடர்பாக மட்டுமல்லாது உலகத்தைப் பற்றியும், வாழ்வியல் குறித்தும் ஒரு தெளிவு கிடைக்கும்; பொது அறிவு மட்டுமல்லாது, சமூக அறிவும் வளரும்.

இவை அனைத்தும் பொதுவாகச் சொல்லப்படும் அறிவுரைகள் அல்ல; பல்லாண்டுகளாக நடத்தப்பட்டு வரும் புத்தகத் திருவிழாக்களை ஊன்றிக் கவனித்தும், அவற்றில் கிடைக்கப்பெற்ற அனுபவங்களை அடிப்படைகளாக வைத்து ஆய்ந்து பார்த்தும், குழந்தைகளின் உளவியலையும் பெற்றோரின் அணுகுமுறையையும் உற்று நோக்கியும் - இவ்வாறு வளரும் குழந்தைகள் பலர் இப்போது கல்லூரி மாணவர்களாக உயர்ந்துள்ள நிலையில் அவர்களின் பரிணாம வளர்ச்சியை நேரில் கண்டும் சொல்லப்படுபவை; அத்தகைய மாணவர்களின் தனித்தன்மையை உணர்ந்து உரைப்பவை.

குழந்தைகளின் - மாணவர்களின் அறிவை விரிவு செய்ய வைக்கும் அரிய வாய்ப்பு ஆசிரியர்களுக்கே கிடைக்கப்பெறுகிறது. இதை ஆசிரியரின் 'கடமை' என்று சொல்வதை விட ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற 'நல்வாய்ப்பு' என்றுரைப்பதே சாலப்பொருத்தமாகும்.

தன்னுடைய பாடங்களை மிகச் சிறப்பாக நடத்தி நூறு சதவிகித மதிப்பெண்கள் பெற வைக்கிற ஆசிரியர்கள் இன்று அதிகம் பேர் உள்ளனர். அது பாராட்டத்தக்கதுதான் என்றாலும், அதற்கும் மேல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை சிறந்த குடிமக்களாக - தன்னம்பிக்கை உள்ளவர்களாக - பொது அறிவு மிக்கவர்களாக - சமூகச் சிந்தனையுள்ளவர்களாக – தனித் திறன்கள் பெற்றவர்களாக – தலைமைத் தகுதியுள்ளவர்களாக - ஆளுமை மிக்கவர்களாக வார்த்தெடுப்பதும் வளர்த்தெடுப்பதும் ஆசிரியர்களின் கடமை.

பாடங்களை நடத்துகிறவர்களாக மட்டுமல்லாது, பாடங்களாகவே திகழ்பவர்களே தலைசிறந்த ஆசிரியர்கள். பாடநூல்களுடன், தலைசிறந்த பொது நூல்களை வகுப்பறைக்கே எடுத்து வந்து, அதனை நேரடியாக மாணவர்களிடம் காட்டி, அதன் சாரத்தை




எளிய வகையில் புரிந்து கொள்ளத்தக்க வடிவிலும் அந்நூலை வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளத்திற்குள் ஊற்றெடுக்கத்தக்க வகையிலும் உரைக்கும் கடமையும், ஆசிரியர்களுக்கு உண்டு. நூலகங்களைப் பயன்படுத்தத் தூண்டுவதும், புத்தகத் திருவிழாக்களுக்குப் பள்ளியின் வழியாக அனைத்து மாணவர்களையும் உணர்வுப்பூர்வமாக அழைத்துச் சென்று அங்குள்ள நல்ல நூல்களை அறிமுகப்படுத்துவதும் ஆசிரியர்களின் கடமையாகும்.

ஆசிரியர்களை நேரடியாக மாணவர்களோடு அல்லாத பிற வேலைகளில் ஈடுபட வைப்பதை அரசு அவசியம் தவிர்க்க வேண்டும். சிறந்த குழந்தைகளை உருவாக்கும் சிற்பிகளாக ஆசிரியர்கள் திகழ வேண்டும். அதற்கான மன நிலையும் சூழ்நிலையும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். ஆசிரியர் சங்கங்களும் இத்தகைய திசைவழியில் தங்களது சங்க உறுப்பினர்களாக விளங்கும் ஆசிரியர்கள் அனைவரும் உருவெடுக்க உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

பொறுப்புணர்வுமிக்க பெற்றோரும், கடமையுணர்வுமிக்க ஆசிரியர்களும், புரிதலுள்ள அரசும் ஒரே நேர்கோட்டில் அமைந்தால் சமூக முன்னேற்றமும் மாற்றமும் சாத்தியப்படும் என்பதில் சந்தேகமில்லை.

- ஆசிரியர் குழு

மரபணுக்கள்,
மக்கள் தொகுதிகள்,
மொழிகள்
லூகி லுக்கா
காவள்ளி
ஸ்ஃபோர்ஸா
Genes, Peoples
and Languages
Luigi Luca
Cavalli-Sforza



திராவிட இந்தியாவில் யாதும் ஊரே யாவரும் கேளிர்!



ப.கு.ராஜன்

நூல் ஆசிரியர்

லூகி லுக்கா காவள்ளி-ஸ்ஃபோர்ஸா *(1922-2018)* இத்தாலியில் பிறந்தவர். இத்தாலியின் பாவியா *(Pavia)*, பார்மா *(Parma)* பல்கலைக்கழகங்களிலும் பிறகு கேம்பிரிட்ஜிலும் கல்வி கற்றவர்; கற்பித்தவர். அடிப்படையில் மருத்துவர். சில நோய்கள் பரம்பரை நோய்களாக தொடர்வது குறித்த ஆய்விற்காகத்தான் மரபணு ஆய்வில் இறங்கினார். பிறகு மருத்துவராக பணியாற்றுவது நின்றுபோய் முழுநேர மரபணு ஆய்வாளராக மாறிப் போனார். மரணத்தின் போது அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் மதிப்புறு பேராசிரியராக இருந்தார். அவர் கல்விப் புலம் சார்ந்து எழுதிய பெரும் பனுவலான *'மானுட மரபணுக்களின் வரலாறும் புவியியலும்' (The History and Geography of Human Genes)* மரபணு அறிவியலில் ஒரு தலையாய படைப்பாக இன்று வரை கருதப்படுகின்றது. 'மக்கள் தொகுதி மரபணுவியல்' *(Population Genetics)* என அழைக்கப்படும் என்ற அறிவியல் புலத்தின்


பிதாமகன் காவல்லி-ஸ்ஃபோர்ஸா. 'மனிதனின் பயணம்' (The Journey of Man) என்ற ஆங்கில புத்தகத்தின் ஆசிரியரும் உலகம் முழுவதும் மக்கள் பரவிய பயணப் பாதையை ஆணின் ஒய் (Y) குரோமோசோம் மரபணு மூலம் கண்டறிந்து, வரைந்தளித்தவருமான **ஸ்பென்ஸர் வெல்ஸ்** இவரது மாணாக்கர். அதுபோல பெண்ணின் கருமுட்டை கொண்டிருக்கும் மித்தோகோன்றியா டிஎன்ஏ ஆய்வுகளின் மூலம் உலகம் முழுவதும் மக்கள் கூட்டங்கள் பரவியப் பயணப் பாதையை வரைந்து அளித்தவரும் 'ஏவாளின் ஏழு பெண்மக்கள்' (Seven Daughters of Eve) நூலின் ஆசிரியருமான பிரையான் சைக்ஸ்ஸும் இவர் வழி வந்தவர்தான். மரபணுவைப் பயன்படுத்தி பரம்பரை நோய்களின் மூலத்தைக் கண்டறிதல், மக்கள் கூட்டங்களின் நகர்வை கண்டறிதல், பரிணாம வரலாற்றைக் கட்டமைத்தல், குற்றப் புலனாய்வில் உதவுதல் என்று இன்று ஆழமும் விரிவும் ஆகியுள்ள மரபணுவியல் உட்பிரிவுகளுக்கு எல்லாம் அடித்தளம் இட்டவர் காவள்ளி-ஸ்ஃபோர்ஸா.

நூலின் நோக்கம்


முன்னுரையில் இது குறித்து காவள்ளி-ஸ்ஃபோர்ஸா எழுதியுள்ளார். நூல் மானுட பரிணாமம் குறித்து பல்வேறு புலங்களில் நடைபெற்றுள்ள ஆய்வுகள் குறித்து ஒரு பறவைப் பார்வையைத் தருவதற்கு முயற்சிக்கின்றது. கடந்த ஒரு லட்சம் ஆண்டுகள் இதனுடைய வரலாறு. அந்த வரலாற்றை தொல்பொருளியல், மரபணுவியல், மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் பார்ப்பதுதான் இந்த நோக்கம். இந்த வெவ்வேறு மாணுட அறிவுப் புலங்கள் ஏராளமான தரவுகளையும் விளக்கங்களையும் அளித்துள்ளன. அவற்றை ஒன்று கூட்டுவது அல்லது ஒன்றுபட்ட விளக்கம்தான் இந்த மானுட பரிணாமத்தின் வரலாறு. ஏனெனில் ஒவ்வொரு புலமும் தனியாக செய்யும் ஆய்வு பல போதாமைகளையும் குறைபாடுகளையும் கொண்டதாக இருக்கிறது. இவற்றோடு கலாச்சார மானுடவியல், மானுடப் பரப்பியல் (demography), பொருளாதாரம், சூழலியல், சமூகவியல் ஆகியவையும் இணையும் பொழுது இந்த வரலாறு குறித்த விளக்கம் முழுமை அடையும் என்று காவள்ளி-ஸ்ஃபோர்ஸா கூறுகின்றார். அந்த நோக்கத்தில் கல்வி வளாக சிறப்புப் புலம் தாண்டி அக்கறை கொண்ட அனைவரும் வாசிக்கத் தக்கவகையில் எழுதப்பட்டதே இந்த நூல். நூல் எழுத மற்றொரு நோக்கம் இனவெறி பிரச்சாரங்கள் அறம் சார்ந்தவையும் அல்ல; அறிவியல் சார்ந்தவையும் அல்ல என்பதை விளக்குவது ஆகும் என்கின்றார் ஆசிரியர்.

வெளிப்படையானதும் உள்ளார்ந்திருப்பதுமான வேறுபாடுகள்

மக்கள் தொகுதிகளுக்கு இடையே சில வெளிப்படையான எளிதில் கண்டுணரக்கூடிய வேறுபாடுகள் உள்ளன. அவற்றில் சில மரபணு அடிப்படை கொண்டவை என்பது உண்மையே. தோல் நிறம், கண்களின் வடிவம், தலைமுடியின் தன்மை போன்றவை எல்லாம் ஓரளவுக்கு மரபணு அடிப்படை கொண்டவை. இவைதான் நம் முன்னோர்களின் (இன்றும்கூட பலர்) இன வேறுபாடுகளை உணர்ந்து கொள்வதற்கான வழியாக இருக்கிறது. சில கலப்புகளை புறம் ஒதுக்கி விட்டால் ஒரு ஐரோப்பியரை அல்லது



லூகி லுக்கா காவள்ளி–ஸ்ஃபோர்ஸா



ஆப்பிரிக்கரை அடையாளம் காண்பது சாதாரணமாக எளிதாகத்தான் இருக்கிறது. இதுபோன்று சில எளிதில் புலப்படக்கூடிய வேறுபாடுகள் 'தூய இனம்' என்று ஒன்று இருக்கிறது என்ற தவறான கருத்தை விதைக்கின்றது. இவை மானுட வரலாற்றில் சமீப காலத்தில் பரிணமித்த மாற்றங்கள்தான்; நவீன மானுட இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லது தொடக்க கால மனிதர்கள் பெருமளவுக்கு வேறுபடுத்திக் காண முடியாதவர்களாகத்தான் இருந்தார்கள் என ஆசிரியர் விளக்குகின்றார்.

ஆப்பிரிக்காவிலிருந்து...

மானுட இனம் முதலில் ஆப்பிரிக்காவில் உருவாகி பிறகு அங்கு எண்ணிக்கை அதிகமானபோது அவர்கள் அனைவருக்குமான வாழ்விடமும் தேவைகளும் எளிதில் நிறைவு செய்யப்படாதபோது அங்கிருந்து நகர்ந்து ஏனைய கண்டங்களுக்கும் பரவியது நன்கு நிறுவப்பட்ட கருத்து. ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறிய மானுடகுலத்தினர் பல்வேறு விதமான சூழல்களை எதிர்கொள்ள, தகவமைய வேண்டியவர்களாக இருந்தார்கள். இது போன்ற சூழல்கள் ஏற்படுத்திய தாக்கம், அதற்குத் தகவமைந்தது குறித்து பல எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குகின்றார். ஐரோப்பியர்களுக்கு கருப்பு நிறத் தோல் வெள்ளையாக ஆனது, கிழக்கு ஆசியர்களுக்கு கண்களின் மீது இரண்டாவது இரைப்பை சவ்வுப் படலம் உருவானது, உடலின் பருமன் அல்லது வடிவு மாறியது ஆகியவற்றை எல்லாம் அவற்றைக் கொணர்ந்த சூழல் காரணங்களோடு காவள்ளி-ஸ்ஃபோர்ஸா காட்டுகின்றார். சுமார் 25 பக்கங்களில் இந்த உலகப்பந்தின் ஆறு கண்டங்களில் வாழும் சுமார் 800 கோடி மக்களையும் அவர்களின் ஒற்றுமை, வேறுபாடு ஆகியவற்றோடு நம்ப முடியாத ரசவாதமாக ஒற்றைச் சட்டகத்தில் காட்டிவிடுகின்றார்.

மானுட பரிணாம வரலாறும் மரபணு அடிப்படையிலான மீள்கட்டமைப்பும்

மானுடம் காலங்காலமாக பயணத்திலும் குடிபெயர்விலும் ஈடுபட்டு வந்துள்ளதைக் கூறும் காவள்ளி-ஸ்ஃபோர்ஸா, அவை எவ்வாறு சில மரபணு அடையாளங்களின் இருப்புகதியை (Frequency) மாற்றுகின்றன என்பதையும் விளக்கி நமக்கு மரபணு அடையாளங்கள், மரபணு கலப்புகள் என்பவை குறித்த ஒரு அடிப்படை புரிதலை உருவாக்குகின்றார். அவை, அவருக்கு பின்னால் வந்த பல மரபணு நிபுணர்களும் விளக்கி எழுதியுள்ளவைதான். அவை இருக்கட்டும். நாம் இந்த நூலில் ஸ்ஃபோர்ஸா அவர்களுடைய தனித்துவமானதும் சிறப்பானதுமன சில விளக்கங்கள் குறித்து மட்டும் பார்ப்போம். அவை மரபணுக்கள், மக்கள் தொகுதிகள் மற்றும் மொழிகளுக்கு இடையிலான உறவு என்பதே. மரபணு ரீதியாக மக்கள் தொகுதிகள் கிளை பிரிவது போல ஒரு குடும்ப மொழிகள் கிளை பிரிந்து வேறு வேறு மொழிகள் உருவாவது குறித்தும் ஆப்பிரிக்காவுக்கு வெளியில் வந்த மானுடக் கூட்டம் கிளை பிரிந்தபோது ஆதி ஆப்பிரிக்க மொழிக் குடும்பத்தில் இருந்து வேறுவேறு மொழிக் குடும்பங்கள் கிளை பிரிந்தது குறித்தும் அவர் விளக்குவது போல வேறு எந்த மரபணு நிபுணரும் விளக்கியுள்ளதாகத் தெரியவில்லை. எனவே அவருடைய சிறப்புப் புலமான அது குறித்து மேலே பார்க்கலாம்.

மொழியின் தோற்றம்

மானுட கூட்டங்கள் ஆப்பிரிக்காவைவிட்டு வெளியேறிய காரணம் இன்றுவரை விவாதத்திற்குரிய ஒரு வினாதான். காலநிலை மாற்றம், மக்கள் தொகை அடர்த்தி அதிகரிப்பு, தொழில்நுட்பங்களின் முன்னேற்றம் போன்ற பல காரணங்கள் விவாதிக்கப்படுகின்றன. ஆனால் இவை எல்லாம் போதுமானதல்ல என்று கருதுகின்ற காவள்ளி-ஸ்ஃபோர்ஸா, மொழியின் உருவாக்கம் இந்த பழைய கற்கால மானுட கூட்டம் ஆப்பிரிக்காவில் இருந்து இடம்பெயர்வதற்கு வழி வகுத்த ஒரு முக்கியமான மேம்பாடு என்று கருதுகின்றார். மானுட இனத்தின் தொல்முந்தையரான ஹோமோ ஹாபிலிஸ் இனத்தவரே சில ஆரம்பகட்ட மொழித் திறன்களை பெற்றிருப்பார்கள் என்பதற்கு புதைபடிமச் சான்றுகள் இருக்கின்றன என அவர் கூறுகின்றார். ஒருவரோடு ஒருவர் உணர்வுபூர்வமாகத் தொடர்பு கொள்வதற்கு தேவைப்படுகின்ற இந்த அற்புதமான கருவியான மொழி, மானுடக் கூட்டங்கள் தாம் முன்னர் அறிந்திராத புதிய இடங்களுக்குப் பரவி அந்த இடங்களைக் குறித்து நுணுகி நோக்கி அறிந்து அங்கு புதிய சமூகங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் அந்த புதிய இடத்தின் சூழலுக்கு தம்மை தகவமைத்து கொள்வதற்கும் அதற்குத் தேவைப்படுகின்ற புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கிக் கொள்வதற்கும் வழி வகுத்திருக்கும் என்று அவர் உறுதியாக நம்புகின்றார்.

தொழில்நுட்ப வளர்ச்சியும் இடப்பெயர்வும்

சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மானுட இனம் பழைய கற்காலத்திலிருந்து புதிய கற்காலத்துக்கு மாறிய புள்ளியில் வேளாண்மை தொழில்நுட்பம் உருவானது. இன்றைக்கும் வேடுவர்களாகவும் சேகரிப்பாளர்களாகவும் இருப்பவர்களுடைய எண்ணிக்கையையும் அவர்களுடைய அடர்த்தியையும் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது 10 ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்பு உலகமெங்கும் இருந்த மானுட கூட்டத்தினுடைய எண்ணிக்கை சுமார் 50 லட்சம் அளவில் இருக்கும் என்று லூகி லுக்கா கருதுகின்றார். மானுடம் முழுமையும் ஆப்பிரிக்காவில் இருந்தபோது சுமார் 50 ஆயிரமாக இருந்த கூட்டம், ஒரு லட்சம் ஆண்டுகளில் 50 லட்சம் என்று மாறியது மிகவும் மந்தமான வளர்ச்சி விகிதம் ஆகும். வேளாண்மை தொழில்நுட்பம் கைவந்த பிறகு கடந்த பத்தாயிரம் ஆண்டுகளில் 50 லட்சம் என்ற அந்த எண்ணிக்கை இன்று 800 கோடி ஆகியுள்ளது. பழைய கற்காலத்தில் இருந்த மானுட வளர்ச்சி விகிதத்தை போல சுமார் 14 மடங்கு அதிகம் எனச் சுட்டிக்காட்டி, தொழில்நுட்ப வளர்ச்சியும் மானுட மக்கள் தொகை பெருக்கமும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதை விளக்குகின்றார்.

சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கூர்மையான காலநிலை மாற்றம் ஏற்பட்டது. அது எங்கர் டிரையாஸ் எனக் குறிப்பிடப்படுகின்றது. அது 'வளமிகு பிறை' (Fertile Crescent) என்று அழைக்கப்படும் (இன்றைய இஸ்ரேல், பாலஸ்தீனம், லெபனான்...) பகுதியில் மானுட கூட்டங்களை, அதுவரை வேட்டை மற்றும் உணவுப் பொருள்களை சேகரித்து வாழ்வதைத் தாண்டி சில புதிய முறைபாடுகளை பின்பற்ற வைத்தது. உணவை அவர்களே உற்பத்தி செய்வது என்பதை வேட்டை, சேகரிப்பு ஆகியவற்றோடு இணைத்து செய்யப்பட வேண்டிய ஒரு முறைபாடாக மாற்றியது. தங்கள் பகுதிகளில் வனப் பயிர்களாக இருந்த தாவரங்களை சாகுபடி பயிர்களாக மாற்றுவது தங்கள் பகுதியில் இருந்த வன விலங்குகளை வளர்ப்பு விலங்குகளாக மாற்றுவது அதாவது வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் உருவெடுத்தன. இவை கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகள், சீனா, மெக்ஸிகோ அதனை அடுத்த பெரு ஆகிய பகுதிகளிலும் ஆப்பிரிக்காவின் சாஹேல் பகுதியிலும் உருவாகி வளர்ந்தன. இந்த ஒவ்வொரு பகுதியும் தமது சூழலுக்கு ஏற்ற உணவு பயிர் வேளாண்மை என்பதற்குரிய முறைபாடுகளை கண்டறிந்து வளர்த்திருக்கின்றது. இந்த மாற்றங்கள் எல்லாம் ஒரே காலகட்டத்தில் நடந்தது, சில பொதுவான உலகு தழுவிய காலநிலை மாற்றம் போன்ற புறநிலை அழுத்தம் தொழில்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

மக்கள் இடம் பெயர்வதும் இத்தோடு இணைந்து நடந்துள்ளது. மக்கள் இடம் பெயர்வது நடக்காமல் பண்பாடு பரவுவதும் நடந்துள்ளது. மரபணு தரவுகள் தெளிவாகவும் அதிகமாகவும் இருக்கக்கூடியதும் மிக நீண்ட காலத்துக்கு தொடர்ச்சியான ஆவணப் பதிவுகள் இருப்பதுமான ஐரோப்பாவை ஒரு எடுத்துக்காட்டாக ஸ்ஃபோர்ஸா எடுத்துக் கொள்கிறார். அங்கு வேளாண்மை பரவியது குறித்து இருக்கக்கூடிய தரவுகளும் மானுடக் பரவல் குறித்து இருக்கக்கூடிய மரபணு தரவுகளும் ஒத்துப் போவதை விளக்குகின்றார். ஐரோப்பாவில் இருக்கக்கூடிய மரபார்ந்த மானுட கூட்டங்களில் 95% மரபணுக்களில் ஐந்து முதன்மையான அடையாளக் கூறுகள் இருப்பதை அவர் எடுத்துக்காட்டுகின்றார். அவற்றை உருவாக்கிய ஐந்து பரவல்களையும் இன்றைய மரபணு கதிகளில் உள்ள வேறுபாட்டையும் எடுத்துக் கூறி எளிய வரைபடங்களின் மூலம் தெளிவாக்குகின்றார்.

இதுபோன்று மத்திய கிழக்கு பகுதியில் இருந்து வேளாண்மை பல திசைகளிலும் பரவியிருக்கின்றது என்பதை காண முடிகின்றது. பிற்காலத்தில் வேளாண்மை நடந்த இடங்களாகக் கருதப்படும் இடங்களில் எல்லாம் இங்கிருந்து வேளாண்மை பரவியதற்கு சான்றுகள் இருக்கின்றன. ஈரான் மற்றும் இந்தியா நோக்கி விவசாயம் பரவியதை ஆசிய பகுதிகளின் மரபணு பரவல் வரைபடங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அதேபோன்று ஒரு பரவல் அலை அரேபியா, வடக்கு ஆப்பிரிக்கா பகுதிகளை நோக்கியும் சென்றுள்ளது. உலகின் பல இடங்களில் போல அரேபிய மற்றும் வடக்கு ஆப்பிரிக்க பகுதிகள் பிற்காலத்தில் பாலைவனம் ஆகியதால் அங்கிருந்த மக்கள் கூட்டங்கள் அங்கு தொடரவில்லை. அங்கிருந்து நகர்ந்த மக்கள் இன்றைய சகாரா பாலைவனத்தில் தென் பகுதியான சாஹெல் பகுதியில் 3000-4000 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறி அங்கு சோளம் மற்றும் ஏனைய சிறு தானியங்கள் ஆகிய உணவு தானியங்களையும் வேறுசில விவசாய பயிர்களையும் சாகுபடி செய்ததோடு மாடுகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் ஆகியவற்றையும் வளர்த்துள்ளார்கள் என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. மாலி, பர்கினோஃபாஸோ ஆகிய இன்றைய நாடுகளில் இவ்வாறு அவர்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டதற்கு சான்றுகள் உள்ளன. இன்னும் தெற்கே அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு வேறு பல புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்த வேண்டி இருந்தது. ஏனென்றால் இந்த வடக்கு பகுதியில் மானுட வயப்படுத்தப்பட்ட தானியங்கள், மத்திய நிலநடுக்கோட்டுப் பகுதியில் சாகுபடி செய்வதற்கு ஏற்றவை அல்ல. அந்தப் பகுதியில் முற்றிலுமாக புதிய பயிர்கள் பெரும்பாலும் வேரில் உருவாகும் காய்கள் அந்தப் பகுதியின் காடுகளிலிருந்து மானுட வசப்படுத்தப்பட்டு சாகுபடியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

மேற்காப்பிரிக்காவில் மாலி, நைஜீரியா பகுதிகளிலிருந்து தெற்கேயும் கிழக்கேயும்

வேளாண்மை மானுடக் கூட்டங்களும் பரவின. இதற்கு மொழியியல் ரீதியாக சான்றுகள் இருக்கின்றன. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு அல்லது அதற்கு முன்பும் கூட புதிய கற்காலத்தின் இறுதி பகுதியிலேயே இந்த இடப்பெயர்வுகள் நடந்துள்ளன. சுமார் கிமு 500 வாக்கில் இரும்பு பயன்பாட்டுக்கு வந்தது, இந்த குடிப்பெயர்வுகளை இன்னும் அதிகமாக்கி உள்ளது இந்த குடிப்பெயர்வுகள் **பாண்டு (Bantu)** விரிவாக்கம் என்று அழைக்கப்படுகின்றன. மக்கள் பேசிய முக்கியமான மொழிக் குடும்பம் அந்தப் பெயரைத் தந்தது. அவை மொழியியல் வல்லுனர்களால் **நைஜர்-கொரடோஃபானியன்** என்று அழைக்கப்படும் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் அதன் பிறகு கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியைச் சேர்ந்த **நைலோடிக்** மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோடும் தெற்கே **கொய்ஷான்** மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோடும் ஒன்று கலந்தது தெரிகிறது.

அதுபோல சீனாவில் கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில் சீனாவின் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கு பகுதியிலும் தனித்தனியே விவசாயம் தோன்றி வளர்ச்சி அடைந்திருக்கின்றது. வடக்கு புறத்தில் மில்லட் எனப்படும் சிறுதானிய வேளாண்மையும் பன்றிகளின் வளர்ப்பும் மிகவும் வெற்றிகரமாக பரவியுள்ளது; அதே காலகட்டத்தில் தெற்கு சீனாவில் நெல் சாகுபடியும் எருமை வளர்ப்பும் உருவாகி அதுவும் பரவியுள்ளது.

ஆனால் கடந்த பல ஆயிரம் ஆண்டுகளில் ஆக முக்கியமான மானுட பரவல், மத்திய ஆசிய பகுதியில் இருந்துதான் ஆரம்பமாகியுள்ளது எனலாம். இதற்கு முக்கிய காரணம் இந்த பகுதியில் உருவான தொழில்நுட்ப வளர்ச்சியும் கால்நடை வளர்ப்பும் அலைகுடி பொருளாதாரத்திற்கு மிகவும் உதவிகரமாக இருந்துள்ளது. ஆசிய ஸ்டெப்பி புல்வெளி பகுதிகளில் வேளாண்மை சிறப்பாக நடந்ததாக சான்றுகள் இல்லை. ஆனால் மிக முக்கியமான வளர்ப்பு விலங்குகளில் ஒன்றான குதிரைகள் மானுட வசப்படுத்தப்பட்டது இந்த பகுதியில்தான் நடந்துள்ளது. இது யுரேஷிய கால்நடை மேய்ப்பு சமூகங்களுக்கு வேறு யாருக்கும் இல்லாத வலிமையை அளித்துள்ளது. அத்தோடு ஆரக்கால்கள் கொண்ட சக்கரங்களோடு ரதம் இணைந்தது. குடிப்பெயர்வு மற்றும் ராணுவ வெற்றிகள் ஆகியவற்றுக்கு குதிரையும் ரதமும் இவர்களுக்கு உதவியுள்ளன. கருங்கடலின் வடக்கேயுள்ள குர்கான் (Kurgan) பகுதியில் இருந்து பல்வேறு அலைகளாக நடந்த குடி பெயர்வு, ஐரோப்பிய மற்றும் ஆசிய வரலாற்றில் பெரும் தாக்கங்களை உருவாக்கியுள்ளது. தெற்கு ஆசியா நோக்கிய முதல் விரிவாக்கம் அனேகமாக கிமு 3000 முதல் 2000 வரை நடந்துள்ளது எனலாம். இந்த குடியேற்றம் இன்றைய துர்க்மேனிஸ்தான் வழியாக ஈரான், பாகிஸ்தான், இந்தியா என நடந்துள்ளது. இந்த குடிப்பெயர்வு அதற்கு முன்பு சிந்து சமவெளி பகுதிகளில் தழைத்திருந்த சிந்து சமவெளி நாகரிகம் சுமார் கி.மு 1500 வாக்கில் முடிவுக்கு வருவதற்கும் பங்களித்துள்ளது என அவர் கருதுகின்றார். ஆரியர் வருகைதான் சிந்துசமவெளி நாகரிகத்தை முடிவிற்குக் கொண்டுவந்தது என அவர் கூறவில்லை என்றாலும் இரண்டிற்கும் சம்பந்தமே இல்லை என்ற வேறுபல அறிஞர்களின் கூற்று அவருக்கு ஏற்பில்லை எனத் தெரிகின்றது. இந்தக் குடியேற்றம் நிகழ்ந்த சம காலகட்டத்தில் இந்தோ ஐரோப்பிய மொழி பேசக்கூடிய அவர்களுடைய கிழக்கு மற்றும் மேற்கு நோக்கிய அவர்களது நகர்வு ஸ்டெப்பி புல்வெளிகள் ஊடாக அட்லாண்டிக் முதல் அல்டாய் மலைத்தொடர்கள் வரை நடைபெற்றுள்ளது.

கடந்த ஒரு லட்சம் ஆண்டுகளாக மானுடப் பரவல்களின் திசைகளையும் காலத்தையும் மரபணு அடையாளங்களின் முதன்மையான கூறுகளின் (Principal Components) வரைபடம் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம் என்பதை விளக்குகிறார். பொதுவாக இந்த விரிவாக்கம் புதிய தொழில்நுட்பங்கள் உருவாகி அதன் காரணமாக மக்கள் தொகை பெருக்கம் நடைபெற்ற காரணத்தினால் நடந்துள்ளது. விவசாயம் செழித்து உணவுப் பொருட்கள் உற்பத்தி அதிகரித்த பொழுது மக்கள் தொகைப் பெருக்கம் நடந்திருக்கிறது. அது சில மக்கள் பகுதியினரை புதிய பகுதிகளுக்கு குடியேறி அங்கு விவசாயத்தை நடத்துவதற்கு வழி வகுத்துள்ளது. இதுதான் முதன்மை என இதனை விளக்கும் ஸ்ஃபோர்ஸா, ராணுவ நடவடிக்கைகளாலான மானுட பரவல்கள் விதிவிலக்குகளாகத்தான் நடந்துள்ளன என்று தெளிவாக்குகின்றார். அத்தகைய ராணுவ வெற்றிகள் மூலம் நடைபெறும் மானுடப் பரவல்கள் பெரிய அளவு மரபணு ரீதியான பரவல்களாக இருப்பதில்லை என்பதையும் விளக்குகிறார்.

முழுமையாக வேட்டுவ மற்றும் சேகரிப்பு சமூகமாக இருக்கும் பொழுது பெரிய அளவிலான மக்கள் தொகை பெருக்கம் இருக்கவில்லை என்பதை அவர் கூறுகின்றார். இவர்களைக் காட்டிலும் சற்றே அதிகமாக இடம்பெறக்கூடியவர்களாக இருந்த மேய்ப்பு சமூகத்தினர் இந்தப் பழங்குடிகளைக் காட்டிலும் சற்றே அதிகமான வளர்ச்சி விகிதத்தில் மக்கள் தொகை பெருக்கத்தை சந்தித்து இருக்கின்றார்கள் என்பதையும் அவர் கூறுகின்றார். ஏனென்றால் இத்தகைய கூட்டங்கள் தங்களுக்கு வாழ்வாதாரமாக கொண்டிருக்கக் கூடிய கால்நடைகளை பாதுகாப்பதற்கும்

அதை மாற்று இனக்குழுக்களிடமிருந்து மக்கள் கூட்டங்களிடமிருந்தும் பாதுகாப்பதற்கும் ராணுவ ஆற்றலை உருவாக்கி வளர்த்து கட்டியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள் என்பதை விளக்குகின்றார். ராணுவ ரீதியாக கட்டமைப்புகளை உருவாக்கியவர்கள், ஓரிடத்தில் தங்கியிருந்து வேளாண்மை நடத்திய விவசாய சமூகங்களை எளிதில் வென்று அடக்கி இருக்கின்றார்கள் என்பதையும் கூறுகின்றார்.

ஆரியர்கள் நாடோடி மேய்ச்சல் இனமாகத் தான் இருந்திருக்கின்றார்கள் என்பதை கூறுபவர், அவர்கள் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்பே தம்மளவில் சாதியப் படிநிலைகள் கொண்டவர்களாக இருந்தார்கள் என்று கூறுகிறார். அவர்கள் மத்தியில் அகமண முறை இந்தியாவில் நுழையும் காலத்திலேயே நிலவி வந்தது; இது இந்தியாவில் நுழைந்ததற்குப் பிறகு இந்தியாவில் உருவான படிநிலை சமூகத்தில் அவர்கள் தங்களை அதன் உச்சத்து அடுக்கில் அமர்த்திக் கொள்வதற்கு வழி வகுத்தது; அதிகாரமும் ஆதிக்கமும் எப்போதுமே சமூக அந்தஸ்தைப் பொறுத்ததுதானே ஒழிய எண்ணிக்கையைப் பொறுத்தது அல்ல என்பதெல்லாம் அவர் கருத்தாக உள்ளது. இந்த ஆரியர்கள் இந்தோ ஐரோப்பிய மொழிகளை பேசினார்கள்; அந்த மொழிகளை ஆப்கானிஸ்தான், ஈரான், இந்தியா ஆகிய பகுதிகளில் கொண்டு வந்து பரப்பினர் என்பதையும் கூறுகின்றார்.

மரபணுக்களும் மொழிகளும்

உலகில் 5000க்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதை சுட்டிக்காட்டும் ஸ்போர்ஸா சில மொழிகள் கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்துவதாக இருப்பதையும் ஆனால் பல மொழிகள் மிகவும் குறு எண்ணிக்கையிலான மக்கள் பயன்படுத்துவதையும் அழிவின் விளிம்பில் இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். சில மொழிகள் வேறு சில மொழிகளோடு மிக நெருக்கமான உறவு கொண்டவை என்பதை தெரிந்து கொள்வதற்கு ஒருவர் மொழியியல் நிபுணராக இருக்க வேண்டியது இல்லை என்பதை சில உதாரணங்கள் மூலம் கூறுகிறார். நமக்கே அது தெரியாதது அல்ல. அவர் சமஸ்கிருத மொழியை பற்றிய ஐரோப்பியர்களின் கல்விதான் முதன் முதலில் **இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம்** என்று ஒன்று இருப்பதை வெளியில் கொண்டு வந்தது என்று கூறுகின்றார். 1780 ஆம் ஆண்டுகளில் **சர்.வில்லியம் ஜோன்ஸ்** அவர்கள் ஆரம்பித்து வைத்த ஆய்வைத்தான் அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். ஆனால் அவருக்கு **ராபர்ட் கால்டுவெல்** தெரியாதது வியப்புதான். அவருடைய பெயரை குறிப்பிடவில்லை; திராவிட மொழிகள் பற்றி எழுதும்போது கூட திராவிட மொழி குடும்பம் குறித்து எழுதும்போது கூட அவருடைய பெயரைக் குறிப்பிடாதது வியப்பை அளிக்கிறது.

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம் தெரிய வந்ததற்கு பிறகு அதனைப் போலவே வேறு பல மொழிக் குடும்பங்களும் இருப்பது உலகுக்கு தெரியவந்தது. உயிரியலில் இதுவரையிலான பரிணாமத்தை ஒரு உயிரியல் மரத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துவர். அதுபோல மொழிகளின், மொழிக் குடும்பங்களின் உருவாக்கத்தையும் கிளை பிரிதலையும் ஒரு மொழிக் குடும்ப மரத்தின் மூலம் கட்டமைப்பதற்கு தொடர்ந்து மொழியியல் நிபுணர்கள் முயன்று வருகின்றார்கள் என்றாலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மொழியியல் வல்லுனரான **ஜோசப் கிரீன்பர்க்** அவர்கள் 1987 ஆம் ஆண்டு 'அமெரிக்காக்களின் மொழிகள்' (Languages in Americas) என்ற நூலை வெளியிட்டார். அதில் அமெரிக்காவின் தொல்குடி இந்தியர்கள் பேசும் எண்ணற்ற மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களில் அடங்கும் என்பதை முன்மொழிந்தார். **எஸ்கிமோ-அலெயுட், நாடீன்** மற்றும் **அமரிந்தியன்** ஆகியவையே அந்த மூன்று குடும்பங்கள் என்று அவர் வகுத்தார். அவர் வந்து அடைந்த முடிவு அமெரிக்கப் பழங்குடிகளின் தொல்படிம எச்சங்களை ஆய்வு செய்த உயிரியல் நிபுணர்களின் முடிவுகளோடு உடன்பட்டது. ஆனாலும் கூட அவருடைய நூல் அமெரிக்க மொழியில் வல்லுனர்கள், மானுடவியல் நிபுணர்கள் இடையே கடும் வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியது. காவள்ளி ஸ்ஃபோர்ஸா, கிரீன்பர்க் அவர்களுடைய வாதம்தான் சரியாக இருப்பதாக நம்புகின்றார். தான் ஒரு மொழியியல் வல்லுநர் அல்ல என்றாலும் கூட கிரீன்பர்க் அவர்களது வாதங்கள் சரியானவையாக தனக்கு தோன்றுகின்றன என்று கூறுகின்றார்.

கிரீன்பர்க் அவர்கள் இதனை எழுதுவதற்கு பல ஆண்டுகள் முன்பு ஆப்பிரிக்க மொழிக் குடும்பங்கள் நான்கு மொழிப் பெருங்குடும்பங்களில் (Super Linguistic Families) அடங்கும் என்ற கருத்தையும் விளக்கி இருந்தார். பழமையான செமிடிக் மொழிகள், எத்தியோப்பியா மற்றும் வட ஆப்பிரிக்காவில் பேசக்கூடிய மொழிகள் அனைத்தும் **ஆஃப்ரோஸியாட்டிக்** மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை; தெற்கு சகாரா மற்றும் நைல் நதியின் மேற்புறம் பேசப்படும் பழமையான மொழிகள் **நைலோ-சகாரன்** மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை; மத்திய, தெற்கு, மேற்கு ஆப்பிரிக்க மொழிகள் குறிப்பாக பாண்டு (Bantu) மொழிகள் அனைத்தும் **நைஜர்-கொரடோஃபானியன்** குடும்பத்தைச் சார்ந்தவை; கொய்-கொய் மற்றும்

ஷான் பழங்குடிகள் பேசும் மொழிகள் அனைத்தும் **கொய்ஷான்** குடும்பம் என்பது அவருடைய வகை பிரிப்பு ஆகும். கிரீன்பர்க் அவர்கள் முதலில் இதனை முன்மொழிந்தபோது அது பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. ஆனால் இன்றைக்கு பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்வதாக மாறியுள்ளது. அனேகமாக அது போன்ற மனமாற்றம் அமரிந்தியன் வகைப்பாடுகளுக்கும் நேரும் என்று காவல்லி ஸ்ஃபோர்ஸா கருதுகின்றார்.

கிரீன்பர்க் அவர்களுடைய வகைப்பாட்டை ஏற்காதவர்கள் பலரும் மொழிகளை அவ்வாறு குடும்பம் என்ற வகையில் வகை பிரிப்பதே தவறு என்றுதான் கூறுகின்றார்கள். மொழிகள் மரபணு மாற்றங்களைக் காட்டிலும் துரித கதியில் நடப்பவைகளாக இருக்கின்றன என்பதால் பிரச்சனையில் உண்மையின் கூறு இருக்கிறது என்றாலும் நவீன மொழியில் அறிஞர்கள் மிகவும் சிக்கலான, மிகவும் நுட்பமான வழிமுறைகள், முறைபாடுகள் மூலமாக மொழிகளுகிடையிலான உறவு அல்லது உறவின்மையை அளவிடக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இந்த முறைபாடு குளோட்டோகுரோனாலஜி (Glutochronology) என அழைக்கப்படுகிறது. இந்த முறைபாடு மரபணு நிபுணர்கள் 'மூலக்கூறு கடிகாரம்' என்று ஒன்றைப் பயன்படுத்துவது போல 'மொழியியல் கடிகாரம்' என்ற கருத்தாக்கத்தை பயன்படுத்துகின்றார்கள். காவள்ளி-ஸ்ஃபோர்ஸா, கிரீன்பர்க்கின் மாணக்கரான மெர்ரிட் ரூலன் உருவாக்கிய மொழிக் குடும்பங்கள் வகைபாடு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பதாக கூறுகின்றார். அத்தோடு அவருடைய வகைபாடு மரபணு ரீதியான மானுட பரிணாம, மானுட பரவல் வகைபாட்டோடு உடன்பட்டு இருப்பதாகவும் கூறுகின்றார்.

மொழியியல் வல்லுநர், **மெர்ரிட் ரூலன்** (Merrit Ruhlen) அவர்களது கட்டமைப்பு 17 மொழிக் குடும்பங்களை காட்டுகிறது அதற்கு மேலாக அவர் சில மீ-குடும்பங்கள் (super Family) குறித்து பேசுகின்றார். ரூலன் அவர்களது கருத்துப்படி **ஆஸ்ட்ரிக் மீ-குடும்பம்** தெற்கு சீனாவிலும் வியட்நாம், லாவோஸ், தாய்லாந்து முதலில் பகுதிகளில் பேசக்கூடிய மியாவ்-யாவ் மற்றும் வட இந்தியாவிலும் வேறு சில பகுதிகளில் பேசப்படுகிற முண்டா மொழிகளை அடக்கிய **ஆஸ்ட்ரோ ஏசியாட்டிக்** குடும்பம்; தென்கிழக்கு ஆசியாவில் பெரிதும் பேசப்படுகின்ற **மோன்-கமீர்** குடும்பம்; தெற்கு சீனாவிலும் ஏனைய சில தென்கிழக்கு ஆசிய பகுதிகளிலும் பேசப்படுகின்ற **டாய்க்** குடும்பம் மற்றும் **ஆஸ்திரோனேசியன்** குடும்பம் ஆகிய நான்கு குடும்பங்களை உள்ளடக்கியது. ஆஸ்திரோனேசியன் குடும்பத்திலேயே ஆயிரக்கணக்கான மொழிகள் இருக்கின்றன; சுமார் 180 மில்லியன் மக்கள் இதனைப் பேசுகின்றார்கள். தொல் தைவான், பாலினேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, மலேசியா ஆகிய பகுதிகளிலிருந்து மடகாஸ்கர் வரை பல தீவுகளில் பேசப்படுகின்ற மொழி இந்தக் குடும்பத்தைச் சார்ந்தது என்கிறார். இதனை **படம்:.** இல் காணலாம்.





Figure 11. Geographic distribution of the seventeen linguistic families, and location of several linguistic isolates (drawn from maps in Ruhlen 1987, vol. 1).

ஐரோப்பா மற்றும் ஆசிய கண்டப் பகுதிகளில் பேசப்படும் மொழிக் குடும்பங்களின் மீதான மீ-குடும்பம் முக்கியமாக பேசப்பட வேண்டியது. அவ்வாறு இரண்டு வகைப்பாடுகள் இருப்பது இன்று பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என அவர் கூறுகின்றார். **நோஸ்ட்ராட்டிக், யூரேசியாட்டிக்** ஆகிய இரண்டுமே அந்த வகைகள். நோஸ்ராட்டிக் என்ற வகைபாடு **இந்தோ ஐரோப்பியன், யுராலிக். அல்டாயிக், ஆஃப்ரோசியாட்டிக் மற்றும் திராவிட** மொழிக் குடும்பங்களை உள்ளடக்கியது என்று கூறும் ரூலனின் வகைபாட்டை ஏற்போடு எடுத்தாளும் அவர் யூரேசியாட்டிக் மீ-குடும்பம் **எஸ்கிமோ, சுக்கி, ஜாப்பனீஸ்** போன்ற மொழிகளை அடக்கியதாக மேலாக மேலும் கிழக்காசியப் பகுதிகளை உள்ளடக்கியதாக விரிவடைகின்றது; ஆனால் அது தென்மேற்கு பகுதிகளை உள்ளடக்கியது அல்ல. அது ஆஃப்ரோசியாட்டிக் மற்றும் திராவிட மொழிக் குடும்பங்களை உள்ளடக்கவில்லை. அவை இந்த மொழிப் பிரிவினைகளுக்கு முன்பே

பிரிந்த ஒரு தோற்றுவாயை கொண்டவை என்ற ஜோசப் கிரீன்பர்க் அவர்களது கருத்தை ஏற்போடு எடுத்தாள்கிறார் ஸ்போர்ஸா. ஒருவர் மொழிகளின் பரிணாமம் குறித்த இந்த மரத்தை மேலும் மேலும் முந்தைய மற்றும் பிந்தைய கிளைகளை இணைத்து இதை வளர்த்தெடுக்கலாம் என்று சொல்லும் ஸ்ஃபோர்ஸா அத்தகைய ஒரு மரத்தை வரைந்து காட்டுகின்றார். **(படம்: 2).**



யூரேசியன் மொழிகள் அனைத்தும் நோஸ்ட்ராட்டிக், அமெரிந்தியன், டீன் -காக்கசியன் என்ற மொழிக்குடும்பங்களாகப் பிரிந்தன; பிறகு நோஸ்ராட்டிக் மீ-குடும்பம் யூரோசியாட்டிக் குடும்பம், ஆஃப்ரோசியாட்டிக் குடும்பம், திராவிட மொழிக் குடும்பம் எனக் கிளை பிரிந்தது என விளக்குகின்றார். அல்லது மொழியியல் வல்லுநர்கள் கூறும் இந்த விளக்கத்தை அவர் ஏற்புடன் எடுத்தாளுகின்றார். இத்தகைய ஒரு மீ-குடும்ப வகைபாடு அனேகமாக ஐரோப்பா, வடக்கு-ஆப்பிரிக்கா, ஆசியாவின் பெரும்பகுதி, அமெரிக்க கண்டங்கள் ஆகிய பகுதிகளில் பேசும் பெரும்பாலான மொழிகளை உள்ளடக்கி விடுகின்றது. இந்த வகைபாடு ஆப்பிரிக்காவில் பேசப்படும் மூன்று ஆப்பிரிக்க மொழிக் குடும்பங்களான கொய்ஷான், நைஜர்-கொரொடொஃபானியன், நைலோ-சஹாரன் ஆகியவற்றையும் 170 மொழிகள் அடங்கிய ஆஸ்திரேலியன் மொழிக் குடும்பத்தையும் சுமார் 700 மொழிகள் அடங்கிய இந்தோ பசிபிக் மொழிக் குடும்பத்தையும் மட்டும்தான் சேர்க்கவில்லை.

ஆனால் எந்த மொழிக் குடும்பத்திலும் அடங்காத சில மொழிகள் இருக்கின்றன என்பதை அவர் எடுத்துக் கூறுகின்றார் அதற்கு ஒரு நல்ல உதாரணமாக அவர் காட்டுவது **பாஸ்க்** மொழி; சுமார் 12 ஆயிரம் ஃபிரெஞ்சு நாட்டுக்குடிகளும் சுமார் 15 லட்சம் ஸ்பெயின் நாட்டு குடிமக்களும் பேசக்கூடியது. இது அனேகமாக ஐரோப்பாவின் மிகப் பழமையான ஹோமோ சேபியின்-சேபியின் இனமான குரோமாக்னன்கள் பேசியது. அனேகமாக ஐரோப்பாவை அடைந்த முதல் மானுடக் கூட்டங்கள் பேசியது. ஆனால் அதுவும் காலப்போக்கில் பெரும் மாற்றங்களை அடைந்திருக்கும்; இன்றைக்கு பாஸ்க் மொழி பேசுபவர்களை அன்றைய குரோமாக்னன் மனிதர்களால் புரிந்து கொள்ள இயலாது. இது போன்ற மற்ற மொழிகள் வடமேற்கு பாகிஸ்தானில் பேசப்படும் **புருஷாஸ்க்கி,** மத்திய இந்தியாவில் **நஹலி** மொழி என்றும் கூறுகின்றார்.

மொழியியல் குடும்பங்கள் மற்றும் மரபணு ரீதியான பரிணாம மரம் ஆகியவற்றுக்கிடையே ஒப்பீடு

முழுமையானதும் எல்லாம் தழுவியதுமான ஒரு மொழியியல் மரம் இன்னும் கட்டியமைக்கப்படவில்லை என்றாலும் கூட நம்முடைய மக்கள் தொகுதிகளின் மரபணு மரம் என்பதை மொழியியல் மரம் எந்த அளவுக்கு கட்டமைக்கப்பட்டுள்ளதோ அதன் அளவில் அதனோடு ஒப்பிடலாம். அப்போதும் கூட இரண்டுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாக காவள்ளி-ஸ்ஃபோர்ஸா கருதுகின்றார். அவர் இரண்டையும் ஒப்பிட்டு அளித்துள்ள வரைபடம் இங்கு **படம்: 3** ஆக உள்ளது.




Figure 12. The comparison of genetic and linguistic trees (Cavalli-Sforza et al. 1988, pp. 6002–6).

அவை மரபணு மரக் கட்டமைப்பிற்கும் மொழியியல் ரீதியான மொழிக் குடும்ப

வகைப்பாட்டிருக்கும் இடையே உள்ள பெரும் ஒற்றுமையைக் காட்டுகின்றன. அவர் இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறுகின்றார். ஒன்று பாண்டு (Bantu) எனப்படுகின்ற ஆப்ரிக்க மொழியின் உப குடும்பம். அது நைஜர்-கொரடோஃபேனியன் பெரும் குடும்பத்தை மொழியியல் ரீதியாக சேர்ந்தது. அந்த மொழிகளை பேசுபவர்கள் மரபணு ரீதியாக ஒற்றுமை கொண்டவர்களாகவும் ஏனைய ஆப்பிரிக்க மக்கள் தொகுதியில் இருந்து வேறுபட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த படமும் அதனை காட்டுகின்றது. அவரே கூறும் அடுத்த எடுத்துக்காட்டு நமக்கு முக்கியமானது. அது தென்னிந்தியர்கள் பேசுகின்ற திராவிட மொழிக் குடும்பம். அவர் கூறுகின்ற மற்றுமொரு மொழிக் குடும்பம் நா-டீன் என்ற வட அமெரிக்க தொல்குடிகள் பேசும் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லாம் ஒரு பொதுவான மரபணு மற்றும் இனக்குழுப் பின்புலத்தைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது அவருடைய துணிபு.

இதன் காரணமாக மரபணு மரக்கட்டமைப்பு உதவியோடு மொழிக் குடும்பத்தின் தோற்றத்தின் காலகட்டத்தை சற்றேறக்குறைய கணக்கிடுவது சாத்தியமாகின்றது என்கின்றார். அவருடைய கருத்துப்படி பெரும்பாலான மொழிக் குடும்பங்கள் சுமார் 25,000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலான காலகட்டத்தில்தான் தோற்றம் கண்டுள்ளன. மெர்ரிட் ரூலன், 1999 ஆம் ஆண்டு வரைந்து அளித்த மொழிக் குடும்பங்களின் தோற்றம் குறித்த மரக்கட்டமைப்பின்படி**(படம்:4)** திராவிட மொழிக் குடும்பம் சற்றேறக்குறைய 40 ஆயிரம் ஆண்டுகள் முன்பிருந்து 20 ஆயிரம் ஆண்டுகள் முன்பு வரையிலான காலகட்டத்திற்குள் கிளை பிரிந்து இருக்க வேண்டும் என்றும் திராவிட மொழிக் குடும்பத்தை உள்ளடக்கிய யுரேஷியன்-அமெரிக்கன் மொழிக் குடும்பம் சுமார் 60 ஆயிரம் ஆண்டுகள் முன்பு இருந்து சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்திற்குள் கிளை பிரிந்து இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். அந்த வகையில் திராவிட மொழிக் குடும்பம் ஒரு மிகத் தொன்மையான மொழிக் குடும்பம் என்பதே அவரது கருத்தாக இருக்கின்றது.

மரபணு மரக் கட்டமைப்பில் ஒரு மக்கள் தொகுதியின் இடம் அந்த மக்கள் தொகுதியில் ஆகப்பெரும் பகுதிக்கு பங்களித்த மரபணுக் கூட்டத்தைக் கொண்டு அடையாளப்படுத்தப்படுகின்றது. இதன் பொருள் தூய மரபணுக் கூட்டங்கள் என்று ஏதுமில்லை. ஆனால் அதே சமயத்தில் அவர் இந்தியன் மக்கள் தொகுதி என்று அழைப்பது வட இந்திய, இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால் இந்தியர் எனும் மக்கள் தொகுதியையும் தென்கிழக்கு இந்தியன் என்ற மக்கள் தொகுதியையும் தனித்து காட்டுவது மரபணு ரீதியான மரக்கட்டமைப்பில் அவசியமாக இருக்கிறது.

மக்கள் தொகுதிகளின் கலப்பு மரபணுரீதியாக உருவாக்கும் தாக்கங்கள் என்பவை மொழி ரீதியான மாற்றங்களோடு ஒப்பிட எளிமையானவை ஆகவும் முன் கணிப்பு செய்ய முடிவதாகவும் இருக்கின்றன; ஒரு கலப்பு மக்கள் தொகுதியில் மரபணுக் கட்டமைப்பு, அந்த மக்கள் தொகுதியின் முந்தைய பெற்றோர் மக்கள் தொகுதிகள் என்ன சதவீதத்தில் கலந்தனர் என்பதனைப் பொறுத்து அமைகின்றது; ஆனால் மரபணு ரீதியாக அவ்வாறு உருவாகும் ஒரு கலப்பு மக்கள் தொகுதி அவ்வாறு கலந்த இரண்டு மொழிகளில் ஒன்றைத் தான் உள்வாங்கி தனதாக்கி பரிணாமம் பெறுகிறது என்று அவர் கூறுகிறார். சில சமயம் இந்த இரண்டு மொழிகளில் ஒரு மொழி எந்த வித பெரிய மாற்றமும் அடையாமலேயே புதிய கலப்பு மக்கள் தொகுதியின் மொழியாக மாறிவிடுகிறது; ஆனால் பெரும்பாலான சமயங்களில் புதிய மக்கள் தொகுதியினுடைய மொழி அடுத்த மொழியிலிருந்து சில சொற்கள், சமயத்தில் சில ஒலிக் குறிப்பான்கள் ஆகியவற்றையும் உள்வாங்கி உருவாகின்றது; ஒரு மொழியின் இலக்கணம் அந்த மொழியினுடைய சொற் களஞ்சியம் என்பதை காட்டிலும் எளிதில் மாறாததாக தொடர்வதாக இருக்கின்றது எனும் அவர் கருத்து மிகவும் சிந்திக்க வைக்கின்றது.

ஒரு மொழியை விட்டுவிட்டு வேறு ஒரு மொழியை பேசுவதில் மரபணுக்களுக்கு எந்தவித பங்களிப்பும் இல்லை என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துபவராக இருக்கின்றார். எல்லா நவீன மொழிகளும் ஒரேயளவிலான கட்டமைப்பு நுணுக்கங்களை கொண்டவையாகத்தான் இருக்கின்றன. பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலோ அல்லது தொன்மையான நிலையிலோ இருக்கும் ஒரு மக்கள் பகுதியின் மொழியினுடைய கட்டமைப்பு, பொருளாதார ரீதியாக முன்னேறிய மக்கள் பகுதியினரின் மொழியைக் காட்டிலும் எளிமையானதாக எல்லாம் இருப்பதில்லை என அவர் கூறுவது புதிய கருத்தாகத்தான் இருக்கிறது. மொழி, மரபணு ஆகியவற்றுக்கு இடையிலான உறவில் மரபணுக்களுக்கு மொழியின் மீது செல்வாக்கு இல்லாமல் இருக்கலாம்; ஆனால் மொழிக்கு

மரபணுவின் மீது செல்வாக்கு இருக்கிறது. மொழியியல்ரீதியாக வேறுபாடுகள் கொண்ட இரண்டு கூட்டத்தினரிடையே மரபணு ரீதியாக கொடுக்கல் வாங்கல் நடப்பது அரிது என்று அவர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

ஒரு மரபணு அடையாளத்தைக் கொண்ட ஒரு கூட்டம் வேறு மரபணு அடையாளத்தைக் கொண்ட கூட்டத்தை முழுமையாக இடப்பெயர்வு செய்வது நடைபெறுவதில்லை. ஆனால் ஒரு மொழி மற்றொரு மொழியை முழுமையாக இல்லாமல் செய்வது மிகக் குறுகிய காலத்திலேயே பல இடங்களில் நடந்துள்ளதை அவர் காட்டுவது நமக்கு மிகுந்த வியப்பை அளிப்பதாக இருக்கின்றது. ஐரோப்பாவில் அது போன்று பல எடுத்துக்காட்டுகளை அவர் காட்டுகின்றார். அவை எல்லாம் மிகுந்த ஆர்வம் ஊட்டுவதுதான் என்றாலும் அவற்றை விட்டு விடுவோம். ஆரிய 'படையெடுப்பு' காரணமாக ஈரான், பாகிஸ்தான், மற்றும் இந்தியாவிற்கு வந்த இந்தோ ஐரோப்பிய மொழிகள் அதற்கு முன்பு அங்கிருந்த திராவிட மொழிக் குடும்பத்தின் மொழிகளை இல்லாது செய்துவிட்டன என்று அவர் கூறுவது அதிர்ச்சி அளிப்பதாக இருக்கின்றது. திராவிட மொழிகள் இருந்து அழிந்தது ஒரு அதிர்ச்சி; மறு அதிர்ச்சி அவர் மீண்டும் மீண்டும் ஆரியர்களின் வருகை என்பதை 'படையெடுப்பு' என்பதாகக் கூறுவது. இந்தியாவிற்குள் ஆரியர்கள் வந்தார்கள் என்பதையே நம்ப மறுக்கும் பிராமண கருத்தாக்கங்கள் ஒருபுறம் இன்றும் தொடர்கின்றன. ஆனால் ஆரிய 'படையெடுப்பு' என்பதை இடதுசாரி வரலாற்று ஆசிரியர்கள் உட்பட பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்வதில்லை. லூயி லுக்கா காவள்ளி-ஸ்ஃபோர்ஸா, இந்த நூலை 2000 ஆண்டின் போதுதான் பதிப்பித்துள்ளார். அதற்கு முன்பு சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக மானுட மரபணுவியலையும் மக்கள் தொகுதி மரபணுவியலையும் மரபணுவியலுக்கும் மொழிகளுக்குமான தொடர்புகளையும் ஆழ்ந்து கற்றவர்; அவற்றில் நுண்மான் நுழைபுலம் பெற்றவர். அவர் 'ஆரிய படையெடுப்பு' என்று சொல்வது போகிற போக்கில் கூறுவது அல்ல; பல இடங்களில் அது குறித்த விளக்கங்களை அவர் கூறுகின்றார். பழமையான சமஸ்கிருத இலக்கியங்களில் இருக்கும் வன்முறை, ஆரியர்கள் படையெடுப்பில் நிகழ்ந்தது என அவர் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுகின்ற காரணத்தினாலேயே அதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல; ஆனால் இதனை அவர் மட்டும் கூறவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவரது மாணாக்கரும் இந்திய மரபணுக் கட்டமைப்பு குறித்து ஆய்வுகள் நடத்தியவருமான **டேவிட் ரைக்** எழுதிய நூல் *'நாம் யார்? நாம் எப்படி இங்கு வந்தடைந்தோம்?" (Who We Are And How We Got Here)*. அதில் அவர் எழுப்பியுள்ள இரண்டு கேள்விகளையும் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. இந்தியாவிற்குள் வந்த இந்தோ ஐரோப்பிய மொழி பேசுகின்ற கூட்டத்தினர் ஆண்கள், பெண்கள் சதவீதம் கிட்டத்தட்ட *90:10* என்று அளவில் இருப்பதை மறுக்கின்ற யாரையும் பார்த்ததில்லை. சாதாரணமாக இப்படி இருப்பது உலகில் படை எடுத்துச் சென்ற கூட்டம் தங்கிய இடங்களில்தான் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றார் டேவிட் ரைக். அவரது இரண்டாவது கருத்து இந்தியாவில் அதுபோல ஆரிய 'படையெடுப்பு' நடந்ததற்கான தொல்பொருள் சான்றுகள் ஏதும் இல்லையே? என்ற கேள்விக்கு பதில் அளிப்பதாக இருக்கின்றது. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் ரைன் நதியைத் தாண்டி அன்றைய ரோம் சாம்ராஜ்யத்தின் பகுதிக்குள் நுழைந்த ஜெர்மானிய பழங்குடியினர் கோட்டை கொத்தளங்கள், நகரங்கள் அனைத்தையும் அடித்து நொறுக்கினர். ரோம் நகரமே ஏழு நாட்கள் எரிந்தது. மேற்கு ஐரோப்பாவில் ரோம் சாம்ராஜ்யமே சரிந்தது. இதற்கான தொல்பொருள் சான்றுகளோ இடிபாடுகளோ ஏதுமில்லை. ஆனால் அன்றைக்கு எழுத்து பண்பாட்டில் வந்துவிட்ட காரணத்தினால், இந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் எழுத்து பூர்வமான ஆவணங்கள் சான்றாக இருக்கின்றன என்பதனை டேவிட் ரைக் அவர்கள் குறிப்பிடுகின்றார். இவர்களது கருத்துக்கள் எல்லாம் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவையாகவோ எளிதில் புறந்தள்ளப்படக் கூடியவையாகவோ இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஆசியாவின் மக்கள் தொகுதிகள் பற்றிய ஆய்வுகள் ஆசியாவின் சில பகுதிகள் முக்கியமான மானுட கூட்ட உருவாக்க மையங்களாக இருந்துள்ளன என்பதை காட்டுகின்றன. மரபணுவியல் மற்றும் மொழியியல் நிபுணர்கள் ஐந்து முதன்மைக் கட்டமைப்பு மையங்களைப் பற்றி கூறுகின்றார்கள். *1)* இரானின் வடமேற்கு பகுதி; வடக்கே காஸ்பியன் கடலையும் மேற்குப் பகுதியில் ஈராக்கையும் வடகிழக்கே துர்க்கிஸ்தானையும் கொண்டிருக்கும் பகுதி. *2)* தென்கிழக்கு ஆசியா. *3)* ஜப்பானிய கடலை ஒட்டிய பகுதி. மஞ்சூரியா வடகிழக்கு சீனா ஆகியவற்றை உள்ளடக்கியது. *4)* வட இந்தியா. *5)* மத்திய ஆசியா. இந்த மையங்களில் இருந்துதான் ஆசியா முழுவதும் மக்கள் கூட்டங்கள் இடம்பெயர்ந்து குடியேறி பரவிப் பெருகி உள்ளன.

ஓஷியானியா எனப்படும் பசிபிக் பெருங்கடல் தீவுக் கூட்டங்கள், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்கள் ஆகிய பகுதிகளில் எல்லாம் இந்த ஆசிய மையங்களில் இருந்துதான் மக்கள் தொகை பெருகி குடியேறி பரவியுள்ளனர்.

திராவிட மொழிக் குடும்பத்தின் தோற்றுவாய் மையம், இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் இருந்திருக்க வேண்டும்; அதாவது இன்றைய ராஜஸ்தான் அல்லது சிந்து சமவெளி பகுதிகளில் தான் உருவாகி இருக்க வேண்டும் அல்லது தெற்கு காஸ்பியனில் (அதாவது இரானில்) அல்லது வடக்கு இந்தியாவில் நான்காவது முதன்மை கட்டமைப்பு உருவான இடத்திலேயே உருவாகி இருக்கலாம் என்றும் தெரிகிறது. வடஇந்தியாவில் திராவிட மொழிக் குடும்ப மொழிகள் ஆங்காங்கே சில இடங்களில் மட்டும் தனித்த சில வட்டங்களில் மட்டும் இருக்கக்கூடிய மொழிகளாக மாறியுள்ளன. எடுத்துக்காட்டாக தென் மேற்குப் பாகிஸ்தானில் ஒரு சிறு மக்கள் கூட்டம் பேசும் பிராஹி மொழி பலராலும் சுட்டப்படுகின்றது. முந்தைய காலங்களில் இன்னும் மேற்கே இரானின் தென்கிழக்கு முனையான ஈளம் எனும் பகுதியில் பேசப்பட்டதாகவும் சிந்து சமவெளியில் பேசப்பட்டது என்றும் வாதங்கள் உள்ளன. இன்றைக்கு அந்த மொழியைப் பேசக் கூடிய யாருமே இல்லாத இடங்களில் இந்த மொழி உருவாவதற்கான தோற்றுவாய் இருந்தது என்று சொல்வது சற்று வியப்பாகத்தான் இருக்கிறது. மொழிகளின் வரலாற்றில் அப்படிப் பட்ட பல எடுத்துக்காட்டுகள் உள்ளதாகத் தெரிகின்றது. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை பேசுபவர்கள் தென்னிந்தியாவில்தான் பெரும்பாலும் இருக்கின்றனர். திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் வட இந்தியாவில் குறிப்பாக கிழக்கு பகுதியில் பழங்குடி வட்டங்களில் இருக்கின்றனர். ஆனால் ஆரியப் படையெடுப்பு, அவர்களுடைய ஆதிக்கம், அவர்களது கொடுங்கோன்மை ஆகியவைதான் இந்தப் பகுதிகளில் திராவிட குடும்ப மொழிகள் இல்லாது போனதற்குக் காரணம் என்றே லூயி லுக்கா காவள்ளி-ஸ்ஃபோர்ஸா தொடர்ந்து விடாது எழுதுகின்றார்.

ஆசிய பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு முக்கியமான மக்கள் தொகுதியின் விரிவாக்கம், இந்தியாவிற்கு வடக்கே மத்திய ஆசிய பகுதியிலிருந்து மேற்கே அட்லாண்டிக் கரை முதல் கிழக்கே அல்டாய் மலைப்பகுதிவரை நடைபெற்ற மக்கள் தொகுதி விரிவாக்கம் மற்றும் குடியேற்றம் என்று குறிப்பிடுகின்றார். இதில்தான் இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் பேசும் மக்கள் ஐரோப்பாவிற்குள் நுழைந்து பரவினர். ஐரோப்பாவிற்கு வந்த இந்தோ ஐரோப்பிய மொழிகள் பேசும் கூட்டத்தினர் எங்கிருந்து வந்தார்கள் என்ற கேள்வி முக்கியமானது தான். சமீப காலத்து வரை அதற்கு இரண்டு முக்கியமான பதில்கள் இருந்து வந்துள்ளன என்று தெரிகின்றது. ஒன்று தொல்பொருள் ஆய்வாளரான **மர்ஜியா கிம்புதஸ்** அவர்கள் கூறியது; அதன்படி முந்தை இந்தோ ஐரோப்பிய மொழிகளும் அவற்றை பேசிய மக்களும் அவர்களது நாகரீகமும் கருங்கடல் பகுதிக்கு வடக்கே இருக்கும் குருகன் (Krugan) பகுதியில்தான் தோன்றியது என்பதாகும். மற்றொரு ஆய்வாளரான **காலின் ரென்ஃப்ரு** அவர்களின் கருத்து, இந்த ஐரோப்பிய மொழிகளும் ஆரியர்களும் தோன்றிய இடம் இன்றைய துருக்கியின் பகுதியான அனடோலியா என்பதாகும். ஆனால் மர்ஜியா கிம்புதஸ் அவர்களது முன்மொழிவுதான் ஸ்ஃபோர்ஸா உள்ளிட்ட பெரும்பாலான மரபணுவியல் மற்றும் தொல்லியல், மொழியியல் நிபுணர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்கின்றது குருகன் கலாச்சாரம் என்று அழைக்கப்படும் கருங்கடலிற்கு வடபகுதியில் இருந்த கலாச்சார மேடுகளில் கிடைக்கப் பெறுகின்ற தொல்பொருள்கள் குறிப்பாக வெங்கல ஆயுதங்கள், பண்ட பாத்திரங்கள், குதிரை மற்றும் மானுட எலும்புகள் ஆகியவை இதனை வலுவூட்டுகின்றன. அத்தோடு ஆரிய நாகரிகம், பண்பாடு ஆகியவற்றோடு பிரிக்க முடியாத குதிரைகளின் மானுட வயப்படுத்தல் அவற்றின் பயன்பாடு, ஆரக்கால்கள் கொண்ட ரதங்கள் போன்றவற்றுக்கு அனடோலியாவில் எந்தவித சான்றுகளும் கிடையாது. ஆனால் இவை எல்லாம் கருங்கடலுக்கு வடக்கேயான குருகன் நாகரிகம் விளைந்த இடங்களில் ஏராளமாக கிடைக்கின்றன.

நூலின் முக்கியத்துவம் குறித்தும் நூல் விரித்துள்ள உலகம் குறித்தும் ஏராளமான செய்திகள் இருக்கின்றன. நூல் அறிமுகத்தின் மூலம் அதனை முழுமையாகக் கூற முடியாது என்றுதான் தோன்றுகிறது. தமிழுக்கு தமிழர்களுக்கு, திராவிடர்களுக்கு மிக முக்கியமான இந்நூல் விரைவில் தமிழில் வரவேண்டும்; ஏனைய திராவிட மொழிகளிலும் வரவேண்டும். எதற்கு அதோடு நிப்பாட்ட வேண்டும். திராவிட இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் வரவேண்டும். அந்த மொழிகள் நம் குடும்பத்து மொழிகளாக இல்லாது போயிருக்கலாம்; ஆனால் பேசுபவர்கள் நம் குடும்பத்தினரே! யாதும் ஊரே; யாவரும் கேளிர்!

●

கட்டுரையாளர்: NCBH பதிப்பாசிரியர்,
எழுத்தாளர், செயல்பாட்டாளர்.


இளம்
எழுத்தாளர்களுக்கான
பரிசுப் போட்டி
மகசீம் கார்க்கி எழுதிய
“தாய்” நாவலை
ஏன் படிக்க வேண்டும் ?
என்ற தலைப்பில் கட்டுரைகள்
எதிர்பார்க்கப்படுகின்றன.
தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று கட்டுரைகளுக்கு
முறையே ரூ.1000/- ; ரூ.700/- ; ரூ.500/- மதிப்புள்ள நூல்கள்
நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் பரிசுகளாக வழங்கப்படும்.
1
ரூ.1000/-
2
ரூ.700/-
3
ரூ.500/-
இந்த மூன்று கட்டுரைகளும் கட்டுரையாளர்களின் ஒளிப்படங்களுடன்
உங்கள் நூலகம் மாத இதழில் வெளியிடப்படும்.
நிபந்தனைகள்
1
கட்டுரையாளர் 25 வயதுக்கு உட்பட்டவராக
இருக்க வேண்டும். வயது உறுதிச் சான்றிதழையும்
ஒளிப் படத்தையும் கட்டுரையுடன் அனுப்ப வேண்டும்.
2
கட்டுரை 200 சொற்களுக்குள் இருக்க வேண்டும்.
3
கட்டுரையை, 31.10.2026-க்குள்
ungalnoolagam@gmail.com
மின்னஞ்சல் முகவரிக்கு வந்து சேருமாறு அனுப்பவும்.
மக்சீம் கார்க்கி
தாய்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 170/-



₹ 125/-




₹ 136/-




₹ 115/-



₹ 150/-



₹ 115/-



₹ 175/-



₹ 95/-



₹ 150/-



₹ 175/-



₹ 110/-




₹ 115/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,


41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.



பேராசிரியர் ந.முத்துமோகன்
மார்க்சியம் – தமிழ்ச்சூழல்



வீ.அரசு

சீர் வாசகர் வட்ட விருதுபெறும் பேரா. முத்துமோகன் அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்த சீர்வாசகர் வட்ட நண்பர்களுக்கு எனது வணக்கங்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சீர்வாசகர் வட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக சரியான ஆளுமைகளைத் தேர்வு செய்து விருது வழங்கியதைப் போல இந்த ஆண்டும் பேராசிரியர் முத்துமோகன் அவர்களைத் தேர்வு செய்து இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறது. பேராசிரியர் முத்துமோகனுக்கு ஏன் இவ்வகையான ஒரு சிறப்பைச் செய்ய வேண்டும்? அல்லது முத்துமோகன் என்ற பேராசிரியர் கொண்டாட வேண்டியவராக ஏன் இருக்கிறார்? என்று கேள்விகளை எழுப்பிக்கொண்டு, அவருடைய பணிகளைப் பற்றிக் கூற விழைகிறேன். பேராசிரியர் முத்துமோகன் பற்றிக் கடந்த சில நாட்களாகத்தான் வாசிக்கத் தொடங்கினேன். அந்த வாசிப்பில் கிடைத்த அனுபவம் சார்ந்து மணிக்கணக்கில் பேராசிரியர் முத்துமோகனைப் பற்றிப் பேச வேண்டும் என்று மனம் சொல்கிறது. நேரம் கருதி சுருக்கமாகப் பேசுகிறேன். மூன்று முக்கியமான அடிப்படைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

- மார்க்சியத் தத்துவம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய

மண்ணில் உருவாகி வளர்ந்தது. 1848இல் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் தொடங்கி 1883இல் மார்க்ஸ் மறைந்த காலம் வரை, 1895இல் ஏங்கல்ஸ் மறைந்த காலம் வரை ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தத்துவத்துறையில் அவர்கள் ஈடுபட்டு உலகிற்கு அரிய புதிய தத்துவ மரபை உருவாக்கித் தந்துவிட்டுச் சென்றார்கள். இந்தத் தத்துவ மரபு, ரஷ்யாவில் மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி லெனின் என்ற மனிதனின் வீரதீரமான போராட்டத்தின் அடிப்படையில் சோவியத் ஒன்றியமாக உருவானது. அதற்குப் பிறகு, 1949இல் மாவோவினுடைய போராட்டத்தின் வழியாகச் சீனா என்ற மண் சிவப்பாக மாறியது. அதைப்போல கியூபா, வியட்நாம்... இப்படி உலகம் முழுக்க இந்தத் தத்துவ மரபு இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரிய வீச்சாக உருவானது. உலகம் இரண்டு மரபுகளை உடையது என்று ஆனது. ஒன்று அமெரிக்க முதலாளித்துவ மரபுகள் சார்ந்தது; இன்னொன்று சோசலிச மரபுகள் சார்ந்தது. இந்தத் தெளிவான பிரிவுகள் இருபதாம் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த புதிய வரலாறு.

- இந்தச் சூழலில், தமிழில் என்ன நடந்தது? தமிழில் மார்க்சியத் தத்துவம் எப்படி உள்வாங்கப்பட்டது? தமிழில் செயல்பட்ட வரலாறு என்ன? மார்க்சியம் பற்றிப் பேசும்போது இரண்டு அடிப்படைகளாகப் பிரித்துக் கொள்கிறேன். ஒன்று மார்க்சியக் கட்சிகள், இயக்கங்கள், அது சார்ந்த செயல்பாடுகள். அதைப் பற்றி நான் பேசப்போவதில்லை. மாறாக, மார்க்சியம் என்று சொல்லக்கூடிய தத்துவ மரபு சார்ந்து உருவாக்கப்பட்ட பிரதிகளை வாசிப்பது; அது பற்றி எழுதுவது; அதை ஒரு புலமைத் தளமாக வளர்த்தெடுத்துச் செல்வது என்பது இன்னொரு வகையான பணி. இந்தப் பணி தமிழில் எப்படி நடந்தது? 1920களில் கம்யூனிஸ்ட் இயக்கம் இந்தியாவில் உருவானது. அது குழுக்களாக இருந்து 1940களில் வடிவமைக்கப்பட்ட கட்சியாக மாறியது. 1964 வரை ஒரே கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தது. 1964க்குப் பிறகு இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் 1969க்குப் பிறகு பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாகின. 1990இல் சோவியத் ஒன்றியம் தகர்ந்தது. இந்த வரலாற்றுக்குள்ளே தமிழ்ச் சூழல் மார்க்சிய புலமைத்துவ மரபுகளை எப்படி எல்லாம் உள்வாங்கியது? யார் செயல்பட்டார்கள்? யார் எழுதினார்கள்? யார் பேசினார்கள்? என்ற வரலாற்றுக்குள் நெட்டோட்டமாக பயணித்தால், அந்தப் பயணத்தின் அடிப்படையிலிருந்து பேரா. முத்துமோகன் என்ற மனிதர் என்ன சாதனை செய்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதற்காகத்தான் இந்த சுருக்கமான வரலாற்றைச் சொன்னேன்.

மார்க்சியம் பற்றி, தமிழில் முதன்முதல் எழுதத் தொடங்கிய பெருமகன் சிங்காரவேலர்தான். அந்தப் பெருமகனுடைய எழுத்துகள் குடியரசு பத்திரிகையின் ஊடாக, பெரியாரினுடைய இசைவோடு வெளிவந்தன. அறிவியல்பூர்வமாக உலகத்தைப் புரிந்து கொள்ளுதல்; இதுதான் அவருடைய முதன்மையான நோக்கமாக இருந்தது. உலகத்தில் உருவாகி வந்த புதிய அறிவியல், ஐரோப்பிய மண்ணில் உருவான புத்தொளி மரபுகளின் வழியாக உருவாகி வந்த புதிய கண்டுபிடிப்புகள், உலகத்தை எப்படி மாற்றியிருக்கின்றன? இந்தியச் சமூகம், இந்த மனுதர்ம பூமி எப்படி இருக்கிறது? இந்த மனுதர்மத்தை ஒழிப்பதற்கான வடிவம், ஐரோப்பியப் பின்புலத்தில் உருவான அறிவியல் சார்ந்துதான் சாத்தியம் என்பதை அவருடைய எல்லா எழுத்துக்களும் சொல்லின. 1924 தொடக்கம் 1935 வரை அவர் எழுதிய எல்லா எழுத்துகளையும் நீங்கள் இணைத்துப் பார்த்தால், அறிவியல் பூர்வமான சமூகத்தை உருவாக்குவதற்கு, உலகத்தில் என்னென்ன நடந்திருக்கிறது, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றியப் புரிதல் கிடைக்கும்.

சிங்காரவேலருக்கு நேரடியான மார்க்ஸ் மேற்கோள்களையோ ஏங்கல்ஸ் மேற்கோள்களையோ லெனின் மேற்கோள்களையோ எடுத்துக் காட்டுவதற்கான வாய்ப்புக் குறைவு. அந்தக் காலத்தில் அந்தப் பிரதிகள் எல்லாம் பெரும்பகுதி ஜெர்மன் மொழியில் இருந்திருக்கும் அல்லது ரஷ்ய மொழியில் இருந்திருக்கும்; அவை ஆங்கிலத்தில் கூடப் பிற்காலத்தில்தான் மொழியாக்கம் செய்யப்பட்டன. புலமைத்துவம் சார்ந்த புத்தகங்களை எழுதுவது பெரிதும் சாத்தியப்படாமல்தான் இருந்தது. பிரதிகள் கிடைப்பது அரிதாக இருந்தது. தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் ஆங்கிலத்தில் வாசிப்பது என்பதுதான் 1950கள் வரை கம்யூனிஸ்ட்களுக்குச் சாத்தியம்.

தத்துவ மரபுகளை எழுதுவது, பேசுவது,

புத்தகங்கள் ஆக்குவது என்பது 1947இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கிய 'ஜனசக்தி பிரசுராலயம்' என்ற அமைப்பு மூலம் சாத்தியமானது. 1950களில் உலகம் முழுவதும் இருந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களிடையே ஏற்பட்ட பல்வேறு கருத்து முரண்பாடுகள், அதை வெளிப்படுத்த புத்தகங்களை உருவாக்குதல், அதைக் கட்சி சுற்றுக்கு விடுதல், கட்சித் தோழர்கள் வாசித்தல் என்ற வகையில்தான் மார்க்சியத் தத்துவம் பற்றிய உரையாடல் என்பது கம்யூனிஸ்ட் கட்சிகள் மத்தியிலே இருந்தது. 1940களின் இறுதியில் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலே புதிய சக்தி உருவாகி வருகிறது. காலனி ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடுகிறார்கள். காலனியம் வெளியேற்றப்பட்டது. காலனியம் வெளியேற்றப்பட்டதின் விளைவாக, காலனியத்திற்குப் பிந்தையதான ஒரு சமூகம் உருவாகப்போகிறது என்பதைக் கண்டறிந்த அமெரிக்கப் பின்புலத்தில் இருந்த அறிவாளிகள், 'யுனெஸ்கோ' என்ற ஒரு அமைப்பை உருவாக்கினர். அதன்மூலம் நூல்களை வெளியிடுவதைச் செய்தார்கள். யுனெஸ்கோ நிறுவனம் வெளியிட்ட நூல்களை அந்தக் காலத்தில் எழுத்தாளர் க.நா. சுப்பிரமணியம் போன்றவர்கள் எழுதினார்கள், மொழிபெயர்த்தார்கள், வெளியிட்டார்கள்.

இந்தச் சூழலில், சோவியத் நாடும் இப்படியான செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியது. 1950களில் நேருவுக்கும் குருட்சேவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த மாதிரியான செயல்களில் வளர்ச்சி ஏற்பட்டது. 1970களில் இந்திராகாந்தி அம்மையார் சோவியத் இந்திய ஒப்பந்தங்கள் பலவற்றை உருவாக்கினார். சோவியத் நூல்களை மொழிபெயர்த்து இந்திய மொழிகளில் கொண்டு வருவதற்கான குழுவும் இந்திரா அம்மையார் காலத்தில் உருவாக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயல்படத் தொடங்கியது. அந்தச் செயல்பாட்டின் விளைவாக 1960களின் இறுதி 1970களில் மார்க்சிய எழுத்துகள் ஆங்கில மொழியில் மிக அதிகமாக வெளிவரும் வாய்ப்பு பெற்றது.

சோவியத் ஒன்றியம் ஆங்கிலத்தில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் படைப்புக்களைப் பல்வேறு தொகுதிகளாக வெளியிடத் தொடங்கிய காலம் என்பது 1980களில் உருவானது. அப்படி 1980களில் உருவான மார்க்ஸ் ஏங்கல்ஸுடைய மூன்று ஆங்கிலத் தொகுதிகள் சோவியத் ஒன்றியத்திலேயே பன்னிரண்டு தொகுதிகளாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நமக்குக் கொடுக்கப்பட்டன. தமிழகத்தில் இருந்து சென்ற அறிஞர்கள் மொழிபெயர்ப்புப் பணியைச் செய்தார்கள். 1980களில் அந்தப் பிரதிகள் நமக்கு வந்து சேர்ந்தன. 'நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்' பன்னிரண்டு தொகுதிகளை விற்பனை செய்யத் தொடங்கியது. இதுதான் மார்க்சிய மூல நூல்கள் தமிழுக்கு வந்த வரலாறு. பேராசிரியர் முத்துமோகன் என்ன செய்தார் என்பதை அறிவதற்கான பின்புலத்தை வழங்க இந்த நீண்ட வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னேன்.

தொகுப்பாக்கம்

2018இல் மார்க்ஸ் பிறந்த 200ஆம் ஆண்டை எல்லாத் தளங்களிலும் கொண்டாடிய காலத்தில், சோவியத்தில் மொழியாக்கம் செய்த பன்னிரண்டு தொகுதிகளை பேரா. முத்துமோகன் தன்னுடைய மேசைக்கு எடுத்தார். அந்தத் தொகுதிகளை மட்டுமல்லாமல் 1950களிலிருந்தே மார்க்சியம் தொடர்பாக நிறைய மொழிபெயர்ப்புகள் தனித்தனியாக வெளிவந்திருந்தன. எடுத்துக்காட்டாக, 1968லேயே தொ.மு.சி "மதம்" என்ற தொகுதியை மார்க்ஸ். ஏங்கல்ஸ் எழுத்துக்களிலிருந்து எடுத்து மொழிபெயர்த்துத் தனியாகக் கொடுத்திருந்தார். இப்படி தனித்தனியாக இருந்த மார்க்ஸ். ஏங்கெல்ஸ் எழுத்துகள் எல்லாவற்றையும் திரட்டி பன்னிரண்டு தொகுதிகள் என்பதை, இருபது தொகுதிகளாக மார்க்ஸ் ஏங்கல்ஸ் மூல எழுத்து தொகுதிகளை உருவாக்கித் தந்தவர் பேரா. முத்துமோகன் என்பதை தமிழ்ச் சமூகம் நன்றியுடன் கொண்டாடுவது அவசியம். இது சாதாரண வேலை அல்ல. அது பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் அவர் அந்த ஒவ்வொரு தொகுதிக்கும் எழுதிய முன்னுரைகளை எல்லாம் இணைத்து வெளிவந்துள்ள அவருடைய புத்தகம் "படைப்பின் அற்புதத் தருணங்கள்" என்பதைப் பார்க்க வேண்டும். அந்தத் தொகுதிகளை பொருள்ரீதியாக வகைப்படுத்தியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க கால கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் தொடங்கி பிறகு மூலதனத்தில் வந்து, ஏங்கல்ஸினுடைய இயற்கையின் இயக்கவில் பற்றிய விஷயங்களுக்குள் போய் அவருடைய குடும்பம் தனிச்சொத்து அரசு என்ற வகையில் முடிகிறது. 1840 தொடக்கம் 1895 வரையில் இரண்டு பெரும் மனிதர்களும் செய்த பல்வேறு விதமான ஆய்வுகள் சார்ந்த தத்துவப் பதிவுகளைத் தமிழ்ச் சமூகத்திற்கு, அதனுடைய பொருள் சார்ந்த மரபில் இருபது தொகுதிகளாகக் கட்டமைத்த முறை சிறப்பானது. தொ.மு.சி. ரகுநாதன், விடியல் பதிப்பக நிழல்வண்ணன், எஸ்விஆர் இப்படி யார் யாரெல்லாம் மார்க்சியப் பிரதிகளை மொழிபெயர்த்திருக்கிறார்களோ அதையெல்லாம் தேடி எடுத்து குறிப்பிட்டப் பொருண்மையின் கீழாக இருபது தொகுதிகளாகக்

கட்டமைத்துள்ளார். இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் நிலைமைகளைக் கணக்கில் கொண்டு அவற்றுக்கு அவர் எழுதியிருக்கிற முன்னுரைகள் அந்தத் தொகுதிகளை வாசிப்பதற்கு உத்வேகத்தையும் அது சார்ந்த புரிதலையும் நமக்கு உருவாக்கித் தரும் வகையில் அமைந்துள்ளன.

கடந்த சில நாட்களாக இருபது தொகுதிகளையும் எடுத்து வைத்து, அவருடைய 'படைப்பின் அற்புத தருணங்கள்' என்ற தொகுப்பையும் வாசித்துப் பார்த்த பிறகு இந்த மனிதர் மார்க்சியத்துக்காக எவ்வளவு பெரிய புலமைத்துவக் கொடையைச் செய்திருக்கிறார். அந்தப் படைப்பு, அதனுடைய எளிமை, அது ஒழுங்குசெய்யப்பட்ட முறைமை ஆகிய எல்லாவற்றையும் இந்த மனிதருடைய மிகப்பெரிய சாதனையாகக் கருதுகிறேன். எனக்கு ஒரு நல்வாய்ப்பு. இவற்றையெல்லாம் அவை வெளிவந்த காலத்திலே வாங்கிச் சேகரிக்கக்கூடிய வாய்ப்பு பெற்றவன், நான். அவற்றை எல்லாம் ஒருசேர எடுத்து பார்க்கிற பொழுது, மார்க்சிய புலமைத்துவ மரபை அறிய, மூல ஆசான்களைத் தமிழில் கொடுத்திருக்கிற இந்தப் பணி, மிகப்பெரிய பணி என்று கருதுகிறேன்.

2000 தொடக்கம் தமிழ் புத்தகச் சூழலில் கணிப்பொறி யுகம் வந்தது. தமிழ்ப் புத்தக உருவாக்கத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தலையணைப் புத்தகங்கள் என்பவை இரண்டாயிரத்துக்குப் பிறகு வந்தவைதான். நாவல் என்ற பெயரில் தலையணை அளவு எழுதுகிற ஒரு கூட்டம் இருக்கிறது. அது புராணங்களை, மகாபாரதத்தை தலையணையாக எழுதி பெரிய சாதனை என்று பேசி கொண்டிருக்கிற கூட்டமாக உள்ளது. ஆனால், இன்னொரு பக்கம் மூல தத்துவ மரபுகளை மிகப்பெரும் தொகுதிகளாக உருவாக்கி வருகிற மரபும் இருக்கிறது. இந்த மரபில் முத்துமோகன் செய்திருக்கிற இந்தப் பணிகள் எப்படி நடந்தன என்ற புரிதல் தேவை. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சார்ந்த, அதற்குப் பொறுப்பாக இருந்த நண்பர்கள் சரவணன், சபாபதி போன்றவர்களும் முத்துமோகனுடைய வழிகாட்டுதலில் வேலை செய்த தமிழ் காமராசன் போன்றவர்களும் சேர்ந்து செய்த செயல்கள் மற்றும் உழைப்புகள் முக்கியமாக இருக்கின்றன.

மொழியாக்கம்

2016 தொடக்கம் தொடர்ந்து, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மூலமாக 'பிராங்க்பர்ட் புத்தகச் சந்தை' என்று மிகப்பெரிய உலகப் புத்தகச் சந்தைக்கும் அதைப்போல இலண்டனில் நடக்கக்கூடிய உலகப் புத்தகச் சந்தைக்கும் என். சி.பி.எச் சார்பாக சில முறை முத்துமோகன் போனார்.

ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவாகக்கூடிய மார்க்சிய இயக்கங்கள் எப்படி இருக்கின்றன? எடுத்துக்காட்டாக, அண்மையில் நேபாளத்தில் இளைஞர் கூட்டம் போராடியது. இலங்கையில் இன்னொரு இளைஞர் கூட்டம் போராடியது. வங்க தேசத்திலும் நடந்தது. இப்படியான இளைஞர்கள் சார்ந்த போராட்ட மரபுகள் நம்ம ஊரில் கூட, அண்மையில் தமிழக வெற்றிக் கழகம் அந்த வேலையைச் செய்ததாகச் சொல்கிறார்கள். இந்த எல்லா விஷயங்களையும் இணைத்துப் பார்க்கிற பொழுது, சமூகத்தில் நடக்கக்கூடிய போராட்டங்கள் என்பவை ஒரு காலத்தில், அமைப்பாக உருவாக்கப்பட்ட தனிமனிதர்களைத் தலைமைப்படுத்திக் கொண்ட ஜனநாயக மரபு சார்ந்த இயக்கங்களாக இருந்தன. இன்னொரு பக்கம் வர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி, மார்க்சியத்தை முதன்மைப்படுத்தி அதைச் சார்ந்த போராட்ட வடிவங்களாக இருந்தன. ஆனால் இன்றைக்கு அதை மீறி வேறு ஒரு போராட்ட வடிவம், வேறு ஒரு அணி சேர்தலும், வேறு வகையான நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அது இனம் சார்ந்து, மொழி சார்ந்து, அவர்களுடைய வட்டாரம் சார்ந்து, அதன் ஊடாக சமூகப் பிரச்சனைகளை முன்னெடுக்கக்கூடிய மரபும் உருவாகியுள்ளது. ஜல்லிக்கட்டுக்கு எதிராக, சென்னைக் கடற்கரையில் கூடிய கூட்டம் பிரமாண்டமானது. உள்ளே நுழைந்து போக முடியாத அளவுக்கு இலட்சக்கணக்கான இளைஞர்கள் கூடி இருந்தார்கள். இவ்வகையான நிகழ்வுகளுக்கான சமூக அரசியல் காரணங்களைத் தேடுகிற வேலையில் முத்துமோகன் இறங்கத் தொடங்கினார். மார்க்சியம் குறித்த ஆய்வுகளில், இந்த நிகழ்வுக்கான பின்புலங்களைக் கண்டறியலாம் என்பது அவரது நோக்கமாக இருந்தது. அதன் விளைவு, ஐரோப்பிய நாடுகளிலே நவீன மார்க்சிய மரபுகள் சார்ந்த நூல்களைத் திரட்டினார். ஏறக்குறைய முப்பது நூல்கள். இந்த முப்பது நூல்களையும் தேர்ந்தெடுப்பதில் தொடங்கி மொழிபெயர்க்கவும் அவை ஒவ்வொன்றுக்கும் அறிமுகம் எழுதுவதிலும் முத்துமோகன் அவர்களின் ஒருங்கிணைப்பு முதன்மையாகச் செயல்பட்டிருக்கிறது.

உலகப் புத்தகச் சந்தையில், உலகம் முழுவதும் எப்படியான மார்க்சியம் சார்ந்த புத்தகங்கள் உருவாக்கப்படுகின்றன என்பது பற்றியான புரிதல் அவருக்குக் கிடைக்கிறது. அந்தப் புரிதல் சார்ந்து அந்தப் புத்தகங்களைத் தெரிவு செய்ய தொடங்குகிறார். இந்த நூல்கள் 1990களுக்குப் பிறகு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அதன் தொடர்ச்சியாக மேற்கத்திய

மார்க்சியச் சிந்தனையில் ஏற்பட்ட முக்கியமான புத்தாக்கங்களைக் கொண்டவை.

இலண்டன் மாநகரைச் சார்ந்து உருவாட மார்க்சிய அறிஞர்கள் என்ற கூட்டம் உண்டு. அது தொடக்க காலத்திலிருந்தே இருக்கிறது. மௌரிஸ் கான்போர்த் (1909. 1980) என்ற மார்க்சிய அறிஞர். அவர் தொழிலாளர்களுக்கு வகுப்பு எடுத்த உரைகள் தமிழில் புத்தகமாக வந்திருக்கிறது. அதைப்போல ஜே.டி.பெர்னால் (1901. 1971) மார்க்சியத்தை அறிவியல் வழியாக முன்னெடுத்தவர். அறிவியல் வரலாறு என்பதே மார்க்சியத்தின் வரலாறுதான் என்பதைக் கட்டமைத்து எழுதிய பெரியவர் ஜே.டி. பெர்னால். அதைப்போல பணத்தின் மதிப்பு' என்ற ஒரு குட்டி புத்தகத்தைப் படித்திருப்போம். அதை எழுதியவர் எமிலி பேன்ஸ், (1889. 1972). அதைப்போல, கிறிஸ்டோபர் காட்வெல் (1907. 1937) பண்பாட்டுத் தளத்தில் மார்க்சியம் பற்றி பேசிய மிகப்பெரிய அறிஞர். இவர்கள் எல்லாம் இந்த இலண்டன் பின்புலத்தில் வந்தவர்கள். இந்தப் பின்புலத்தில் அண்மைக் காலத்தில் வரக்கூடிய எரிக் ஹாப்ஸ்பாம் (1917. 2012) என்ற அறிஞர். அவருடைய ஆறு நூல்களை முத்துமோகன் தேர்வுசெய்து தமிழில் மொழிபெயர்க்கச் செய்திருக்கிறார்.

எரிக் ஹாப்ஸ்பாமை ஓர் எடுத்துக்காட்டாகக் கொண்டு முத்துமோகன் நவீன உலகத்திற்குத் தேவையான மார்க்சியம் பற்றிப் பேசக்கூடிய செய்திகளைக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கலாம். புரட்சியின் யுகம், மூலதன யுகம், பேரரசின் யுகம், எதிர்புரட்சி யுகம் என்று ஒரு பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்து, 1991 வாக்கில் தொடங்கி இரண்டாயிரங்களில் அவை நூல் வடிவம் பெறுகின்றன. சோவியத்து தகர்வு, அது சார்ந்த விஷயங்கள், உலகத்தில் ஏற்படக்கூடிய நவீன மரபுகள் குறித்து, அவருடைய நூல்களில் 'தொடக்கக் கால கிளர்ச்சியாளர்கள்' என்ற ஒரு புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதைப்போல 'சமூகம்சார் கொள்ளையர்கள்' என்று ஒரு புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்குள் வெகுசன அரசியல், இந்த வெகுசன அரசியல் மரபு சார்ந்து மக்களினுடைய வளர்ச்சி எப்படி மாறி இருக்கிறது; இதைச் சார்ந்து மார்க்ஸ் ஏங்கல்ஸ் தத்துவ மரபை எப்படி கொண்டு செல்வது என்பது பற்றிய உரையாடல் முதலியவை பேசப்படுகின்றன. அதைப்போல, தாரிக் அலி (1943 -) என்ற முக்கியமான மார்க்சிய அறிஞர். பாகிஸ்தானைச் சேர்ந்தவர். அவர் இலண்டனில் வாழுகிறார். 'லெனின் சந்தித்த நெருக்கடிகள்' என்ற நூலை எழுதியுள்ளார். 'தெருச்சண்டை ஆண்டுகள்' என்ற அவரது ஒரு புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் மார்க்சியம் சார்ந்த இந்த முரண்கள் எப்படி வந்தன? அதை எப்படிப் புரிந்து கொள்வது? என்பது பற்றி அவர் எழுதுகிறார். இந்தப் புத்தகங்களை எல்லாம் தேடிக் கொண்டுவந்து தமிழில் மொழிபெயர்க்கச் செய்திருக்கிறார் முத்துமோகன். அதைப்போல, 'திறந்தநிலை மார்க்சியம்' என்ற நான்கு தொகுதிகள் வந்திருக்கின்றன. திறந்தநிலை மார்க்சியம் என்பது ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்வேறு மார்க்சிய அறிஞர்களால் எழுதப்பட்ட பல கட்டுரைகளின் தொகுப்பு. அதைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முப்பது தொகுதிகளில் இருபத்திமூன்று தொகுதிகள் என்.சி.பி.எச் நிறுவன விற்பனையில் இருக்கின்றன. எஞ்சியவை தயாரிப்பில் உள்ளன. இவை எல்லாவற்றையும் மேசை மேலே வைத்துக் கொண்டு பார்க்கிற பொழுது, உலகத்தில் நிகழ்ந்த அண்மைக்கால மார்க்சியம் பற்றிய விஷயங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ரோசா லக்சம்பர்க் (1871. 1919) எப்படி மார்க்சியத்தை பேசினார்; அல்தூசர் (1918. 1990) என்ன பேசினார், கிராம்ஸ்கி (1891. 1937) என்ன பேசினார், கிறிஸ்டோபர் காட்வெல் (1907. 1937) என்ன பேசினார், நோம் சாம்ஸ்கி (1928 -) என்ன பேசினார் என்ற புரிதலைப் பெறமுடிகிறது. இந்த அறிஞர்கள் எல்லாம் மார்க்சியம் பற்றிப் பேசிய பல்வேறு செய்திகளின் தொகுப்பாக இருக்கக்கூடிய நூல்களைத் தமிழ் வடிவமாக்கித் தருவதின் மூலம், மார்க்சியம் உலகம் முழுவதும் ஏற்பட்ட நெருக்கடிகள் சார்ந்து செத்துவிட்டது; மார்க்சியம் இனிமேல் வளர முடியாது என்ற வறட்டு கூச்சல்களுக்கு எதிராக, இந்த அறிஞர்கள் எல்லாம் மார்க்சியத்திற்கு உருவாகியுள்ள நெருக்கடிகள் எவை? இதை எப்படி நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடிய ஆராய்ச்சிகளை செய்துள்ளனர். இந்த நூல்கள் முத்துமோகன் அவர்களின் முயற்சியால் தமிழில் வந்துள்ளன. இது மிக முக்கியமான அரசியல் பணி.

நாம் அந்தத் தொகுதிகளை ஒவ்வொன்றாகப் படித்து, அது பற்றியான உரையாடல்களை நடத்த வேண்டும். இந்த வேலை மிக அவசியம். சோம்ஸ்கி எப்படி இன்றைய மார்க்சிய விஷயத்தை சொல்லுகிறார்? கிராம்ஸ்கியை நீங்கள் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்? பெண்ணிய ஆய்வாளர்கள் எப்படி மார்க்சியம் பற்றிச் சொல்கிறார்கள்? இப்படி பல்வேறு விதமான விஷயங்களை மேலோட்டமாக இல்லாமல், ஆணித்தரமான, ஆழமான நூல்களின் வழியாகக் கண்டெடுத்து அதைத் தமிழில் கொடுத்திருக்கிற

மிகப்பெரிய வேலையை முத்துமோகனுடைய குழு, அவரோடு சேர்ந்த தோழர்கள் செய்திருக்கிறார்கள். இந்தக் குழுவில் இவரோடு சேர்ந்து வேலை செய்த இரண்டு தோழர்கள் பெயரை நான் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். ஒன்று பி.கே.ராஜன் என்ற தோழர். அவருடைய பங்களிப்பு முதன்மையானது. இதைப்போல இன்னொரு தோழர் மா.சிவக்குமார். நான் தோழர் சிவக்குமாரோடு இணைந்து அம்பேத்கர் பதிப்புகளைச் செய்வதிலே ஈடுபட்டிருக்கிறேன். அவருடைய உழைப்பு பிரமாண்டமானது. சீனாவில் எல்லாம் வேலை பார்த்துவிட்டு வந்தவர். அவர் மார்க்சிய இயக்கங்களுக்குள் தொடர்ந்து வேலை செய்திருக்கிறார். மொழிபெயர்ப்பாளர் ஒவ்வொருவர் குறித்தும் விரிவாகப் பேசவேண்டும். பிற இந்திய மொழிகளில் இப்படியான நவீன மார்க்சியம் பற்றிய உரையாடல்கள் சார்ந்த புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லமுடியாது. திட்டமிடப்பட்டு, வகைமைப்படுத்தப்பட்டு, எந்தப் பின்புலத்தில் உருவாகி இருக்கிறது என்பதைச் சொல்வதற்கான தன்மையாக இந்த நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இதற்கெல்லாம் மூலம் யார்? இதற்கு மூளை யார்? இதில் யாருடைய உழைப்பு இருக்கிறது என்பதை நாம் தேடும்போது முத்துமோகன் தனித்து நிற்பதைக் காண்கிறோம். அவருடைய செயல்பாட்டை நாம் வெறும் வார்த்தையில் சொல்ல முடியவில்லை. அதன் பரிமாணம் மிகப்பெரியது.

கோட்பாட்டாக்கம்

இந்த வகையில், மார்க்சிய புலமைத்துவ உலகில் பணியாற்றிய முத்துமோகன் இதை மட்டும்தான் செய்தாரா? இல்லை. இந்த மொழிபெயர்ப்புகள், இதில் பேசப்படும் விஷயங்கள், இதைச் சார்ந்து அவர் முன்னெடுத்த பல விஷயங்கள் உள்ளன. ஆனால் நேரம் கருதி இரண்டு செய்திகளை மட்டும் பேசி நான் முடித்துக் கொள்கிறேன். ஒன்று இந்தியத் தத்துவ மரபுகள் பற்றிய அவருடைய ஆராய்ச்சி. 'இந்தியத் தத்துவங்களும் தமிழர் தடங்களும்' என்ற அவருடைய நூல் மிக முக்கியமான நூல். அதில் எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி உண்டு. நாங்கள் "கங்கு" என்ற வரிசையில் சமூக மரபுகளின் அரசியல் என்ற வரிசையில் பத்து சிறு நூல்களைக் கொண்டு வந்தோம். அதில் இந்தியத் தத்துவங்களின் அரசியல் பற்றி ந.முத்துமோகனிடம் 64 பக்கத்தில் எழுதி வாங்கி ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்தோம். அந்தத் தலைப்பில் முத்துமோகன் பின்னர் விரிவாக எழுதி வெளியிட்டார்.

தோழர் முத்துமோகன் மாஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகத்தில் இந்தியத் தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்படும்போது மேற்கத்தியத் தத்துவ மரபுகளையும் பயின்று இந்தியத் தத்துவ மரபை அவர் செழுமைப்படுத்தினார்.

இந்தியத் தத்துவங்களுக்கும் தமிழுக்கும் என்ன தொடர்பு உள்ளது? என்பதைப் பற்றி இதுவரை பேசியோர் குறைவு. முத்துமோகன் இந்தியத் தத்துவ மரபை நேரடியாகத் தமிழ்ச் சூழலோடு இணைத்து சமஸ்கிருத பின்புலத்தில் உருவாகி வந்த மதம் சார்ந்த தத்துவ மரபை, மக்கள் தத்துவ மரபாக எப்படி கட்டமைக்க வேண்டும்? அதில் தமிழ்ச் சூழலில் என்ன நடந்தது? தமிழ்ச் சூழலில் நம்முடைய சங்க இலக்கியம் எதைச் சொல்லியது? தொல்காப்பியர் என்ன சொன்னார்? அதைப்போல பின்னர் வந்த அறிஞர்கள் குறிப்பாக, இராமலிங்கர் என்ன சொன்னார்? பெரியார் என்ன சொன்னார்? அம்பேத்கர் என்ன சொன்னார்? அயோத்திதாசர் என்ன சொன்னார்? என்று அந்த மரபுகள் எல்லாவற்றையும் உள்வாங்கி, அது பற்றிய உரையாடல்களை முன்னெடுத்து, தமிழர் அடையாளங்கள் என்ற இன்னொரு வகையான தத்துவக் கோட்பாட்டு மரபையும் அவர் நூலாகக் கொண்டு வந்திருக்கிறார்.

'தமிழர் அடையாளங்கள்' என்று சொல்லுகிற பொழுது, ஓர்இனம் சார்ந்து, மொழி சார்ந்து, அது சார்ந்த விஷயங்களை நாம் உரையாடலுக்கு எடுத்துக் கொள்கிற பொழுது, அந்த அடையாளங்கள் எந்த வகையில் மார்க்சிய தத்துவ, வர்க்க மரபு சார்ந்த போராட்டங்களோடு இணைந்ததாக இருக்க முடியும்? ஏனெனில், மார்க்சியர்களுக்கு இந்த "அடையாளம்" என்று சொல் பெரிதும் ஏற்புடைய சொல் இல்லை. ஆனால், முத்துமோகன் வரலாற்றுப் பின்புலத்தில், கருப்பர்கள் இனம் சார்ந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் உருவான மார்க்சிய மரபு சார்ந்த போராட்டங்கள் முதலியவற்றுடன் இணைத்து இந்திய ஜனநாயக அரசியலைப் பேசினார்.

இதில், அம்பேத்கரை பற்றி விரிவாக பேச வேண்டும். அம்பேத்கர் முன்னெடுத்த தத்துவ மரபுகளில் ஒன்று மநுவை எரிப்பது. பார்ப்பனிய மநு ஒழிப்பு என்பதே நம்முடைய வேலை என்பதை அவர் அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டிருந்தார். இந்தியப் பொருளாதார மரபாக இருந்தாலும் சரி, இந்திய பண்பாட்டு மரபாக இருந்தாலும் சரி, இந்திய வெகுசன உளவியலாக இருந்தாலும் சரி, அதில் பார்ப்பனியம் என்பது ஆழ்ந்து செயல்படுகிறது என்பதை அம்பேத்கர்

மிக விரிவாகப் பேசினார். பெரியாரும் அதை இன்னொரு தளத்தில் கொண்டு சென்றார். இவர்களை எல்லாம் மார்க்சியர்கள் 1990கள் வரை எதிர்த்திசையில்தான் மதிப்பீடு செய்தார்கள். இன்றைக்கும் எதிர்த்திசையில் பேசக்கூடிய, மார்க்சியம் பேசக்கூடிய குழுவினர் இருக்கிறார்கள். ஆனால் முத்துமோகன் இவர்களுடைய இந்த மரபுகளை வர்க்க மரபு சார்ந்த புரிதலோடு உரையாட வைக்கும் வேலையைச் செய்தார்.

ஆசிய பொருள் உற்பத்தி முறை சார்ந்து மார்க்ஸ் இந்திய சமூகம் பற்றிய கருத்தை எவ்வாறு கட்டமைத்தாரோ, அந்த வகையில் மொழி, இனம், தேசியம் பற்றிப் பேசக்கூடியவற்றை நாம் வர்க்க மரபுகளுக்குள் எப்படி புரிந்து கொள்ள முடியும் என்பது பற்றி முத்துமோகன் பேசுகிறார். மார்க்சைப் பொறுத்தவரையில் கிழக்கத்திய சமூகங்கள், மேற்கு ஐரோப்பிய சமூகங்களைப் போல தனிமனிதர்களால் ஆனவையல்ல, சமுதாயங்களால் ஆனவை. இந்தியச் சமூகத்தில் தனிமனிதர்கள் தமது சமுதாய (சாதி/வகுப்பு) அடையாளத்தின் வழியாகவே பிறருடன் உறவாடுகின்றனர்.

இதிலிருந்து தொடங்கி இந்திய சமூகத்தில் இருபதாம் நூற்றாண்டு முதல் நடந்துவரும் அடையாள அரசியல் பற்றி கோட்பாட்டாக்கம் செய்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளர் தோழர் இராஜாவுடன் இணைந்து மார்க்ஸ்-அம்பேத்கர் தொடரும் உரையாடல் என்ற நூலை தோழர் முத்துமோகன் எழுதியுள்ளார். மார்க்சின் இந்தியா பற்றிய கருத்துநிலைகளிலிருந்து அம்பேத்கரின் இந்து மதத்தின் மீதான விமர்சனத்தைப் பார்க்கிறது, இந்நூல். படிநிலை ஏற்றத்தாழ்வு என்று அம்பேத்கர் வகுத்தளித்த புரிதலை விளக்குகிறது.

அதுமட்டுமின்றி, இருபதாம் நூற்றாண்டின் மேற்குல மார்க்சியர்களான அந்தோனியோ கிராம்சி (கருத்தியல் மேலாதிக்கம். எதிர்க்கருத்தியல் மேலாதிக்கம், குடிமைச் சமூகம், அடித்தள மக்கள்), ஜார்ஜ் லூகாக்ஸ் (மொத்தமாக்கம். பொருளாதாரம் மட்டுமின்றி ஒட்டு மொத்த சமூகத்தையும் தழுவி நிற்கும் மேலாதிக்கமாக முதலாளித்துவம்), லூயி அல்தூசர் (கட்டமைப்புவாதம். தனிமனித மையத்துக்கு எதிராக சமூகத்தை மையமாக வைப்பது) முதலியோரின் கருத்தாக்கங்கள் அம்பேத்கரின் இந்து சமூகம் பற்றிய விமர்சனங்களுடன் பொருந்துகின்றன என்பதை இந்த நூல் நிறுவுகின்றது.

இந்து மதத்தின் மீதான அம்பேத்கரின் விமர்சனத்தை பண்டைய வரலாற்றில் சிராமண மரபுகள் வேத மரபுகள் மீது வைத்த விமர்சனத்தோடு இணைத்து, இந்து மத மேலாதிக்கத்துக்கு எதிராக அம்பேத்கர் பௌத்தத்தின் சனநாயக மரபுகளை நிறுத்தியதை இந்நூல் விளக்குகிறது. கூடுதலாக, அயோத்திதாச பண்டிதர் தமிழ் இலக்கிய ஆதாரங்களிலிருந்து தமிழ் பௌத்த மரபை மீட்டெடுத்து பார்ப்பனியத்தின் மீதும் காலனி ஆதிக்கத்தின் மீதும் தொடுத்த தாக்குதலை ஆவணப்படுத்துகிறது.

மார்க்ஸ் வரையறுத்த, சமுதாயங்களால் (சாதிகளால்) ஆன ஆசிய சமூகங்களில் நாடாளுமன்ற ஜனநாயகம் புகுத்தப்படும்போது அதில் அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்கள் சமுதாயக் குழுக்களால் (தனிமனிதர்களால் அல்ல) நடத்தப்படுகின்றன. இதில் மேலிருந்து நடத்தப்படும் சுரண்டலுக்கான அடையாளங்களையும் (பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், சைவ தமிழ் தேசியம் முதலியன) கீழிருந்து நடத்தப்படும் விடுதலைக்கான அடையாளங்களையும் (தலித்திய இயக்கங்கள்) மார்க்சியர்கள் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று முன்வைக்கிறது மார்க்ஸ் அம்பேத்கர் உரையாடல் என்ற நூல்.

இது மிகவும் முக்கியமான செய்தி. மார்க்சியம் பயில்வதற்காக எழுதப்பட்ட அவரது நூல்களாக இருந்தாலும் சரி, தத்துவ மரபுகளை முதன்மையாகக் கொண்டு அவர் பேசிய, எழுதிய கட்டுரைகளாக இருந்தாலும் சரி, முப்பது நூல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாக இருந்தாலும் சரி, இவை அனைத்தையும் இந்திய சமூகத்தில் நடக்கும் வர்க்க மோதல்களைப் புரிந்து கொள்வற்கான அவரது தேடலாகப் புரிந்துகொள்ள முடியும். மார்க்ஸ் ஏங்கல்ஸினுடைய மூல நூல்களில் இருந்தும் அவர் உள்வாங்கித் தமிழ்ச் சமூகத்திற்குக் கொடுத்திருக்கிறார். இதற்காகத் தமிழ்ச் சமூகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது.


குறிப்பு: சீர் வாசகர் வட்டம் சார்பில் 14.06.2026 அன்று, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் பேரா. ந.முத்துமோகன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் நிகழ்த்திய உரையின் எழுத்து வடிவம், இது. இதனை உருவாக்கித் தந்த முனைவர் சு.பிரபாவதி அவர்களுக்கு நன்றி. கட்டுரையை வாசித்து மாற்றங்கள், இணைப்புகள் ஆகியவற்றைச் செய்துகொடுத்த தோழர் மா. சிவக்குமாருக்கும் நன்றி. ஜூலை, ஆகஸ்டு 2026 மாதங்களில் 'காக்கைச் சிறகினிலே' இதழில் வெளியிடப்பட்ட கட்டுரை இப்போது மாற்றங்களைச் செய்து மறுவெளியீடாக வெளியிடப்படுகிறது.

●

கட்டுரையாளர்: சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த்துறை மேனாள் தலைவர்

புதிய வரவு

தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் முத்திரை



வெளியீடு: காவ்யா
நூலைப் பெற: 044-23726882

நான் பெரும்பாலும் அவருடன் கலந்து கொள்ளும் புத்தக வெளியீடுகளில் அவர் ஒரு பதிப்பாளர் என்ற முறையில் அந்தப் படைப்புகளைப் பற்றி அறிமுகம் செய்பவராக இருந்திருக்கிறார். அவரின் நாட்டுப்புறவியல் சார்ந்த ஆழமான அறிவையும் சிந்தனைகளையும் தெரிந்து கொள்ள எந்த சந்தர்ப்பமும் அமைந்ததில்லை. அவரின் நாட்டுப்புறவியல் சார்ந்த நூல்கள் அதற்கு ஏதுவாக இருந்தாலும் அவருடைய குரலிலும் உரையிலும் அந்த அம்சங்களைக் கேட்டு உணர முடியாதபடி குழல்கள் அமைந்துவிட்டன. ஆனால், அந்தத் துறையில் அவர் பதிப்பித்த நூல்கள் அவரின் சாதனைகளைச் சொல்லும்.. சமீபமாய் நூல்களின் குறைந்த விற்பனையும் அல்லது பரபரப்பு இல்லாத தன்மையும் இருந்தாலும் தொடர்ந்து புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். புது இளைஞர்களை அறிமுகப்படுத்துகிறார். எழுத்திலும் பதிப்பகத் துறையிலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் இந்த முத்திரையை அவர் எந்தக் கணத்திலும் இழக்கத் தயாராக இல்லை. அதை அவர் தொடர்ந்து தன் மனதில் கொண்டு தன் வாழ்க்கையின் நேரங்களைச் செலவழித்து வருகிறார். அவரின் முயற்சியில் காவ்யா இதழ் கூட ஏதேனும் ஒரு வகையில் மைல்கல் ஆகும்.

– காவிய சண்முகசுந்தரத்தின் பண்பாட்டுத் தடம் நூலில் சுப்ரபாரதிமணியன்

இருபதுக்கும் மேற்பட்ட ஆளுமைகளின் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்

1663 7940 7939 5850
5330 2586 8599 5849
3770 5791 7501
5848 1196 6898


தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

பேச்சையே பேராயுதமாக்கிய பேராசிரியர்!



அறுபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு... 1962இல் காரைக்குடியில் 'பாரதியும் பட்டுக்கோட்டையும்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளார் பேராசிரியர் சாலமன் பாப்பையா. அப்போது அவருக்கு வயது 26. அவ்வுரை மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இவ்வுரையின் வெற்றி இதே தலைப்பிலும், 'பாரதிதாசனும் பட்டுக்கோட்டையும்' என்ற தலைப்பிலும் தமிழகத்தின் பல முக்கிய நகரங்களில் அடுத்தடுத்துப் பேச வழிவகை செய்தது.

பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் தொகுத்து நூலாக வெளிவருவதற்கு முன்பு அவரின் பாட்டின் மீதிருந்த ஈர்ப்பின் காரணமாக பட்டுக்கோட்டையார் பாட்டெழுதி வெளிவந்திருந்த சினிமாப் பாட்டுப் புத்தகங்களைச் சேகரித்து ஆய்வு செய்து இவ்வுரைகளை நிகழ்த்தி, உழைக்கும் மக்களின் உரிமைக் குரலாக விளங்கிய பட்டுக்கோட்டையாரின் கம்பீரப் பாடல்களுக்கு உயிர் கொடுத்தவர் பாப்பையா.

அவரது தொடர் ஆய்வின் விளைவாக, 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், அன்றைய கல்லூரி ஆசிரியர்களின் போராட்டத்தில் பங்கேற்று, மதுரை சிறையில் பதினாறு நாட்கள் அடைக்கப்பட்டிருந்த நிலையில் சிறைக்குள்ளேயே தனது 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு பார்வை' என்ற நூலை சிறப்பு அனுமதி பெற்று, அச்சிறையின் கடைநிலை ஊழியர்

> "உண்மையைச் சொல்லணும்னா, கலை இலக்கியப் பெருமன்ற மேடைகளில்தான் நிறைவான பேச்சாளராக நான் அங்கீகரிக்கப்பட்டேன். என்னை முழுமைப்படுத்தியது அந்த மேடைகள்தான்"



த. ஸ்டாலின் குணசேகரன்

ஒருவர் வெளியிடவும், அப்போது ஐயாவுடன் சிறையில் இருந்த பேராசிரியர் தமிழ்க் குடிமகன் நூல் திறனாய்வுரை நிகழ்த்துவதுமாக அந்நிகழ்வு, கைதாகி சிறையிலிருந்த எண்ணூறுக்கும் மேற்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பாட்டாளிகளின் பாவலரான பட்டுக் கோட்டையைப் பற்றிய அரிய ஆய்வு நூலொன்றைப் போராட்டச் சூழலில் சிறைச்சாலைக்குள், அதுவும் ஒரு கடைநிலைத் தொழிலாளி வெளியிடுவதே பொருத்தம் என்று எண்ணிச் செயல்பட்டவர் ஐயா. அந்நூலுக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அணிந்துரை எழுதியிருந்தார். அந்நூலே சாலமன் பாப்பையா எழுதி வெளியிட்ட முதல் நூல்.

பாப்பையா பிறந்தது மதுரையாக இருப்பினும், அவரது பெற்றோர் வாழ்ந்தது திருமங்கலத்திற்கு அருகிலுள்ள சாத்தங்குடி எனும் கிராமம். மதுரையிலிருந்த ஹார்வி மில் தொழிலாளிகளாகச் சேர்ந்து கொடும் வறுமையிலிருந்து விடுபடும் நோக்கில், சாத்தங்குடியிலிருந்து குடிபெயர்ந்து மதுரை வந்த குடும்பம். பாப்பையாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் பத்துப் பேர். இறந்துபோன இரண்டுபேர் போக எஞ்சியிருந்த எட்டுப் பேரில் இவர்தான் கடைசி. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வறுமை. மூன்று வேளைகள் சாதாரண உணவே அரிதாகக் கிடைத்தது. பல சிக்கல்களும் பிரச்சினைகளும் நிறைந்த குடும்பம். கல்வி குறித்து மட்டுமல்லாது, வேறு எவ்வித விழிப்புணர்வும் இல்லாத நிலை. தொடக்கப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட காலத்திலிருந்து முதுகலைப் பட்டப்படிப்பு முடிக்கிற வரை தடைகளையும் சோதனைகளையும் மட்டுமே சந்தித்து வளர்ந்தவர் பாப்பையா.

உதவி செய்வதற்கான உறவினர்கள் இல்லை. உடன் படித்த, பழகிய நண்பர்களின் உதவிகள் ஆங்காங்கு இவரின் கல்விக்குக் கைகொடுத்துள்ளன. கல்லூரிப் படிப்பின் போதுகூட மைல் கணக்கில் காலில் செருப்பில்லாமல் நடந்து செல்கிற சூழல். முதுகலைப் படிப்பையும் முடித்து வேலூர் ஊரிஸ் கல்லூரியில் பயிற்றுநர் (டியூட்டர்) தற்காலிக வேலை; மாதம் ரூ 120/- சம்பளத்துடன் கிடைத்த போதுகூட அணிந்து கொள்வதற்கு ஒரே பேண்ட் மட்டுமே இருந்தது. வேலூருக்குச் செல்ல பேருந்துக் கட்டணத்திற்கே பிரச்சினை.

வேலூர் ஊரிஸ் கல்லூரியில் தமிழ்த்துறையில் சேர்ந்த பிறகு, தான் படித்த அமெரிக்கன் கல்லூரியில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்த 'முத்தமிழ்க் கலை விழா' போன்று ஊரிஸ் கல்லூரியிலும் நடத்த முன்முயற்சி எடுத்தார் பாப்பையா. பல இடையூறுகளுக்குப் பிறகு முதல்வரிடம் அனுமதி பெற்றார். ஊரிஸ் கல்லூரியில் அப்போது தா. பாண்டியன் அவர்களின் மூத்த சகோதரர் பேராசிரியர் தா. செல்லப்பா பொருளாதாரத் துறைத் தலைவராக விளங்கினார். தா. பாண்டியனின் தம்பி பொன்னிவளவன் அக்கல்லூரியில் படித்து வந்தார். இவர்களெல்லாம் பாப்பையாவின் முத்தமிழ் விழா முயற்சிக்கு முழு ஆதரவை வழங்கினர். முத்தமிழ் விழா சிறப்பாக நடந்து விடக்கூடாது என்றும், பாப்பையாவின் முயற்சி வெற்றி பெற்று விடக்கூடாது என்றும் அக்கல்லூரியில் ஓர் ஆசிரியர் குழுவினர் பல மறைமுக முயற்சிகளை மேற்கொண்டனர்.

விழா நிகழ்ச்சி நிரலை வடிவமைப்பதற்காகக் கூடிப் பேசினர். பேராசிரியர் தா. செல்லப்பா ஓர் ஆலோசனையை முன் வைத்தார். மாதிரி ஐநா சபைபோல் ஒன்றினை அமைத்து உலக அளவிலான முக்கியப் பிரச்சினை ஒன்றைப் பொருண்மையாகக் கொண்டு ஆளுக்கு ஒரு தலைப்பை எடுத்து கருத்துரை வழங்கலாம். வாதிடலாம் என்பதே செல்லப்பா முன்வைத்த ஆலோசனை. அப்போது அமெரிக்கா - கியூபா பிரச்சினை உலகின் கவனத்தை ஈர்த்திருந்தது.

'கியூபாவில் அமெரிக்காவின் தலையீடு சரியே! தவறே!' என்பதே தேர்வு செய்யப்பட்ட தலைப்பு. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பிரதிநிதியைத் தேர்வு செய்தனர். சாலமன் பாப்பையா இந்தியாவின் பிரதிநிதியாகவும் சோவியத் நாட்டின் பிரதிநிதியாக தா. செல்லப்பாவும் களம் இறங்கினர். தொடக்கத்தில் இந்த விவாத வடிவத்தை செல்லப்பா முன்மொழிந்தபோது தனக்கு ஒன்றும் விளங்கவில்லை என்றும், தெற்கே 'பட்டிமன்றம்' என்று ஒரு நிகழ்வு நடத்துகிறார்களே அது போல்தான் இது என்று செல்லப்பா விளக்கியதாகவும் பதிவு செய்துள்ளார் பாப்பையா. அணிகளாகப் பிரிந்து விவாதிப்போம். நடுவர் இரண்டு தரப்புகளின் வாதங்களையும் உள்வாங்கி விளக்கி கடைசியாக தீர்ப்புரை வழங்குவார் என்று செல்லப்பா எடுத்துரைத்ததாகத் தெரிவித்துள்ளார் பாப்பையா.

அந்நிகழ்வில் 'மாண்டவன் மீண்டான்' என்ற ஒரு நாடகம் பாப்பையாவின் முன்முயற்சியால் மேடையேறியது. முத்தமிழ் விழாவின் சிறப்பு விருந்தினராக தா. பாண்டியன் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றியுள்ளார். பாப்பையா அவர்களின் முயற்சியின் விளைவாக நடைபெற்ற ஊரிஸ் கல்லூரி முத்தமிழ் விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. பாப்பையாவுக்கு அதன் பொருட்டு


கல்லூரியில் நன்மதிப்புக் கிட்டியது. ஊரிஸ் கல்லூரி வகுப்பறைகளில் பாடம் நடத்துவதில் மாணவர்களின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தவராகிவிட்டார் பாப்பையா.

பேச்சு, பாட்டு, ஓவியம், எழுத்து, நடிப்பு ஆகிய தனித்திறன்கள் இவருக்கு இயற்கையாகவும் இயல்பாகவும் சிறப்பாக அமையப் பெற்றிருந்தன. அவற்றைப் பள்ளிக் காலத்திலேயே இனம் கண்டு அரிதின் முயன்று அவற்றை வளர்த்துக் கொண்டவர் பாப்பையா. இவரே நாடகம் எழுதுவார். முக்கியப் பாத்திரத்தில் நடிப்பார். குரல் வளம் இவருக்கு இயற்கை அளித்த கொடை. இவர் ஐந்தாம் வகுப்பு, ஆறாம் வகுப்பு படித்த பள்ளியில் 'பேச்சு மன்றம்' செயல்பட்டு வந்தது. அதுதான் ஐயாவுக்குக் கிடைத்த முதல் பேச்சுப் பயிற்சி மேடை. அதில் முதல் பரிசு மெடல் வழங்கிப் பாராட்டப்பட்டவர் பாப்பையா.

பேராசிரியரின் தந்தை சுந்தரம் தீவிர காங்கிரஸ்காரர். காங்கிரஸ் கூட்டங்களுக்கெல்லாம் பள்ளி மாணவன் பாப்பையாவைத் தவறாமல் அழைத்துச் செல்வார். முத்துராமலிங்கத் தேவர் உள்ளிட்ட தேசியத் தலைவர்களின் வீரியம்மிக்க உரைகளைப் பள்ளிப் பருவத்திலேயே கேட்டுப் பரவசப்பட்டவர் பாப்பையா. ஐயாவின் பெரியம்மா மகன் தேவகடாட்சம் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். அவருடன் சென்று சக்கரைச் செட்டியார், ஜீவா, ராமமூர்த்தி, சீனிவாசராவ், டாங்கே, நம்பூதிரிபாட் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களின் பேச்சுகளை விரும்பிக் கேட்டுள்ளார் பாப்பையா. இளம் வயதில் இதன் தாக்கத்திற்கு ஆட்பட்டார்.

இவரது பள்ளி ஆசிரியர்கள் சிலர் இவரின் தனித்திறன்களை உணர்ந்து ஊக்குவித்துள்ளனர். அவர்களுள் ஒரிருவர் திராவிடர் இயக்க உணர்வாளர்கள். அத்தகைய ஆசிரியர்கள் மூலம் தந்தை பெரியார், அண்ணா உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பலரின் உரைகளைக் கேட்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளார் பாப்பையா.

அமெரிக்கன் கல்லூரியில் பிஏ இறுதி ஆண்டு படித்தபோது பல்திறன்களில் சிறந்து விளங்கிய பாப்பையாவை அக்கல்லூரியில் செயல்பட்டு வந்த முக்கிய மாணவர் அமைப்பான திருவள்ளுவர் கழகத்தின் தலைவராகத் தேர்வு செய்தனர். மிகச்சிறந்த தமிழ் ஆளுமைகள் பலரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் அக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு அழைத்துள்ளார் ஐயா.



1961-62இல் இலக்கியப் பேராசான் ஜீவா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கியிருந்த காலகட்டத்தில் தமிழ்நாடெங்கும் பாரதியை முன்னிறுத்தி கருத்தரங்கம், பட்டிமன்றம் என்று ஏராளமான நிகழ்ச்சிகளை உயிரோட்டமாக நடத்தினர். அத்தகைய ஒரு விழா புதுக்கோட்டையில் கலை இலக்கியப் பெருமன்றக் கிளையான புதுகை இலக்கிய மன்றத்தால் நடத்தப்பட்டது. ஏற்கெனவே ஊரிஸ் கல்லூரியில் தா. பாண்டியன் பாப்பையாவின் உரை கேட்டிருந்த காரணத்தினால் அவருடைய உரைத்திறனும் எடுத்துரைக்கும் பாணியும் பிடித்துப்போய் பாப்பையாவை புதுக்கோட்டை விழாவில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பேச அழைத்துள்ளார் தா.பா.

அப்போது பாப்பையாவுக்கு பட்டிமன்றத்தில் பேசிய அனுபவமில்லை. அப்போதெல்லாம் பாப்பையாவின் உரை ஆவேசம் மிக்கதாக இருந்தது. நகைச்சுவைக்கு இடமில்லை. பாரதி 'வேதாந்தக் கவிஞனே!' 'புதுமைக் கவிஞனே!' என்பதே பட்டிமன்றத் தலைப்பு. புதுமைக் கவிஞன் என்ற தலைப்பில் வாதிட்டார் பாப்பையா. அதுதான் பாப்பையாவுக்கு முதல் பட்டிமன்ற மேடை.

பட்டிமன்ற நடுவர் எம்.எஸ். நாடார். புதுமைக் கவிஞனே அணியில் தொ.மு.சி. ரகுநாதன், சிவகாம சுந்தரி, பாப்பையா, அரவாண்டி ஆகியோர் பேசியுள்ளனர். எதிர் வரிசையில் பேராசிரியர் குழந்தைநாதன், ப. நமச்சிவாயம்,

கே. சரஸ்வதி, புலவர் அரசப்பனார் ஆகியோர் வாதிட்டனர்.

அந்நிகழ்வில் ஜீவா, ஜெயகாந்தன் உள்ளிட்டோர் சொற்பொழிவாற்றினர். பட்டிமன்றத்தில் பாப்பையாவின் உரை ஜீவாவைக் கவர்ந்தது. அடுத்தடுத்து பாப்பையா தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மேடைகளில் பேச அழைக்கப்பட்டார். 1962 செப்டம்பரில் எட்டையபுரம் பாரதி விழாவில் இரண்டு நாள் நிகழ்விலும் பேசியுள்ளார் பாப்பையா. முதல் நாள் 'பாரதியின் பார்வையில் மனிதன்' என்கிற தலைப்பிலான தனிச் சொற்பொழிவு. நாற்பது நிமிடங்கள் பேசியுள்ளார். அடுத்த நாள் பட்டிமன்றம். தா.பாண்டியன், சிவகாம சுந்தரியுடன் பேசியுள்ளார்.

இவ்வாறு ஏராளமான கலை இலக்கியப் பெருமன்ற மேடைகளில் தொடர்ந்து பேசியுள்ளார் பாப்பையா. 'உண்மையைச் சொல்லணும்னா, கலை இலக்கியப் பெருமன்ற மேடைகளில்தான் நிறைவான பேச்சாளராக நான் அங்கீகரிக்கப்பட்டேன். என்னை முழுமைப்படுத்தியது அந்த மேடைகள்தான்' என்று பதிவு செய்துள்ளார் பாப்பையா.

பாப்பையாவின் எட்டையபுரம் பாரதி விழாப் பேச்சில் கவரப்பட்டுத்தான் அங்கு வந்திருந்த கல்கத்தா தமிழ்ச்சங்க மாணவர்கள் பாப்பையாவைக் கல்கத்தாவிற்கு அழைத்துப் பேச வைத்தனர். கல்கத்தாவில் எட்டு நாள் தமிழ் நிகழ்ச்சி. 'கம்பன் பெரிதும் வலியுறுத்துவது அறத்தையா, கற்பையா, பக்தியையா என்பது தலைப்பு. பாப்பையாதான் நடுவர். இதுதான் பேராசிரியர் நடுவராகப் பங்கேற்ற முதல் பட்டிமன்றம்.

கல்கத்தா அரங்கம் முழுக்க முழுக்க அறிஞர்களாலும் படித்தவர்களாலும் நிரம்பியிருந்தது. அணிகளில் பேசியவர்களும் அற்புதமாகப் பேசினர். தனது தீர்ப்பில் ஓர் ஆய்வுரைபோல் நிகழ்த்தி 'அறமே' என்று முடித்தார் பாப்பையா. தொடக்கவுரையும் தீர்ப்புரையும் பெரும் பாராட்டைப் பெற்றன.

இவரின் திருமணத்திற்கு முன்பே 1962இல் இவ்வாறாகத் தொடங்கிய பேராசிரியரின் பேச்சுப் பயணம் அவரின் கடைசிகாலம் வரை தொய்வின்றித் தொடர்ந்தது. ஓய்வொழிச்சலின்றி உழைத்தார் ஐயா. பயணமே வாழ்க்கையானது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரை நடுவராகக் கொண்டு பேசிய பட்டிமன்றங்கள் ஏராளம். அவராலேயே 'தகுதிமிக்க நடுவர்' என்று முன்மொழியப்பட்டவர் ஐயா. எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்றங்கள். எண்ணிலடங்கா தனிச் சொற்பொழிவுகள்.

உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் ஓயாமல் பயணித்துப் பயணித்துத் தமிழ் பரப்பிய பெருமைமிகு பேராசிரியப் பெருந்தகை சாலமன் பாப்பையா.

'சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை நிற்பது ஆன்மீகமே! அறிவியலே!', 'மெல்லத் தமிழினித் தளரும்! வளரும்!', 'கணினித்துறை வளர்ச்சியால் நிகழ்ந்துள்ள சமூக மாற்றம் வருந்தத்தக்கதே! வரவேற்கத்தக்கதே!', 'சமுதாய மாற்றத்தை சாதிக்கும் ஆற்றல் பேச்சுக்கா! எழுத்துக்கா!', 'கலையும் இலக்கியமும் மக்களின் மன மகிழ்ச்சிக்காகவே! மறுமலர்ச்சிக்காகவே!' இவை ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றங்கள். இவற்றில் ஐயா முன்வைத்த வாதங்கள், எடுத்துரைத்த விளக்கங்கள் இறுதியில் வழங்கிய தீர்ப்புரைகள் பட்டிமன்ற வரலாற்றின் மைல்கல்கள் என்று உறுதிபடச் சொல்லலாம்.

பல்லாயிரக்கணக்கானோர், சில சமயங்களில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாக விளங்கினர். தீர்ப்புரை வழங்கியபோது எண்பது வயதைத் தாண்டியிருந்த நிலையிலும் கிஞ்சிற்றும் கம்பீரம் குறையவில்லை. அனல் பறக்க கருத்தாழம்மிக்க தீர்ப்புரையை மக்கள் அனைவரும் கடைசி நிமிடம் வரை கருத்தூன்றிக் கேட்கும்படி வேட்ப மொழிந்தவர் ஐயா. மக்களை எப்படியேனும் சிந்திக்கத் தூண்ட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் பேராசிரியர் பேசியதைக் கேட்ட எவராலும் அவற்றையெல்லாம் என்றென்றும் மறக்க இயலாது.

மக்கள் சிந்தனைப் பேரவையின் மதுரை மாவட்டத் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஐயா, தமிழை மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்த தமிழ் அறிவியலாளரை அழைத்துப் பேச வையுங்கள் என்று ஆலோசனை வழங்கியதோடு அதற்காக ரூபாய் ஒரு லட்சம் பேரவைக்கு நன்கொடையும் வழங்கினார். தமிழ் மக்களிடம் அறிவியல் கண்ணோட்டம் வளர வேண்டுமென உளமார விரும்பிச் செயல்பட்டவர் ஐயா.

கடந்த குடியரசு தினத்தை முன்னிட்டு மதுரையில் மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் 'இன்றைய இளைஞர்களின் போக்கு மகிழ்ச்சி தருகிறதா? மனக்கவலை தருகிறதா? என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் போடுங்கள். நான்

நடுவராக வருகிறேன். அணிகளில் முக்கியப் பேச்சாளர்களைப் பேச வைக்கலாம்' என்றார். அதேபோல் செய்தார். இது நடந்து தற்போது எட்டு மாதங்களே ஆகியிருக்கின்றன. 'அரங்கத்தில் போட வேண்டாம். வெட்டவெளி மைதானத்தில் போடுங்கள்' என்றார். வந்தார். அற்புதமான தீர்ப்புரை தந்தார். கூடவே பட்டிமன்றச் செலவுகள் அனைத்தையும் தானே ஏற்பதாகக் கூறி ரூபாய் ஒரு லட்சம் மறுபடியும் பேரவைக்கு நன்கொடையளித்தார். தான் மதிப்பூதியம் வாங்காதது மட்டுமல்ல - பெரும் தொகை நன்கொடையளித்தது ஐயாவின் சமூக நோக்குடனான பேருள்ளத்தை வெளிப்படுத்துகிறது. அந்தப் பட்டிமன்றத்தில் எத்தகைய சமூக அக்கறையோடு, இளைஞர்களைத் தட்டியெழுப்பும் கரிசனத்தோடு, அறச்சீற்றத்தோடு, மனிதநேயத்தை வலியுறுத்தி, மதம் கடந்த மானுடத்தை இளைஞர்களுக்குப் புரியவைக்கும் விதத்தில் துடிப்புடன் பேசினார் என்பதை அருகிலிருந்து பார்த்தும், கேட்டும், உணர்ந்தும் மகிழ்ந்தோம்.

தான் படித்த அமெரிக்கன் கல்லூரியில் 33 ஆண்டுகள் தமிழ்த்துறையில் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி 1994ஆம் ஆண்டு பணி நிறைவு பெற்றுள்ளார்.

கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், அவர் தம்முடைய தமிழ்த் தொண்டிலிருந்தும், சமூகத் தொண்டிலிருந்தும் இறுதிவரை ஓய்வுபெறவே இல்லை.

தொண்ணூறு வயதை எட்டிக் கொண்டிருந்தவரா அவ்வாறு பேசினார்? மக்களைச் சிந்திக்க வைப்பதற்காக பேச்சை ஒரு பேராயுதமாக்கியவர் பேராசிரியர். பல நேரங்களில் மக்களைச் சிரிக்க வைத்ததுகூட சிந்திக்கத் தூண்டத்தான். பதிமூன்று ஆண்டுகள் இடைவெளியின்றி சன் டிவியில் தினசரி காலை திருக்குறளை, சங்க இலக்கியங்களை பாமர மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிய உதாரணங்களுடன் எடுத்துரைத்தார். திருக்குறள் ஆய்வு, புறநானூறு, அகநானூறு ஆய்வு நூல்கள் ஐயாவின் தமிழ்க் கொடைதான். கடைசியாக பாரதி ஆய்வுப் பெட்டகமொன்றை நூலாக்கம் செய்யும் நோக்கில் தயாரித்துக் கொண்டிருந்தார். முடிக்கும் முன்னரே விடைபெற்று விட்டார்.

தன்னுடைய உடலை எரியூட்டுமாறு எழுதி வைத்துள்ளதிலிருந்து மதம் கடந்த பொதுப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளார் ஐயா என்பது தெளிவாகிறது.

கடைசியாக பாரதி நினைவு நாளன்று பேரவை சார்பில் பட்டிமன்றம் நடத்தலாம் என்ற கருத்துத் தெரிவித்ததோடு, அந்நிகழ்வில் தான் உரையாற்றுவதாகவும், பட்டிமன்ற ராஜாவை நடுவராக வைத்து 'மகாகவி பாரதியார் பெரிதும் விரும்பியது புரட்சி வழியா? காந்திய வழியா' என்ற தலைப்பும் கொடுத்து அந்நிகழ்வை மிகச்சிறப்பாக நடத்த வேண்டும் என்ற முனைப்போடு இருந்தார் பேராசிரியர். எதிர்பாராமல் பட்டிமன்றம் நடக்கும் நாளைக்கு முந்தைய நாள் மாலை இயற்கை எய்திவிட்டார் ஐயா. ஐயா நினைவாக பட்டிமன்றம் அதே தலைப்பில் அதே இடத்தில், அதே அணியினரைக் கொண்டு ஐயா இறந்து ஏழாவது நாளில் மதுரையில் மக்கள் சிந்தனை பேரவை சார்பாக நடத்தப்பட்டது.

2023இல் தான் படித்த தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொள்ள தனது சொந்தப் பொறுப்பில் ரூபாய் இருபது லட்சம் தானாக முன்வந்து நன்கொடையளித்தார். எத்தனையோ மாணவர்களின் கல்விக்குப் பல்லாண்டுகளாக தொடர்ந்து உதவி செய்துகொண்டே இருந்தார் என்பதை நேரில் தெரிந்த, ஐயாவுடன் பல்லாண்டுகள் பட்டிமன்றப் பயணம் செய்த பேராசிரியர் த. ராஜாராம் தெரிவிக்கின்றார்.

1998இல் கோயம்புத்தூரில் நடைபெற்ற எனது முதல் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரை நிகழ்த்தினார் ஐயா. 2002இல் 'விடுதலை வேள்வியில் தமிழகம்' நூலை ஆயிரம் மாணவர்களுக்குப் பரிசாக அளிக்கும் ஈரோட்டு நிகழ்வில் பங்கேற்று நூல்களை வழங்கிச் சிறப்புரையாற்றினார் ஐயா. நடைபெற்ற நிகழ்வுக்கான மதிப்பூதியம் வழங்கப்பட்ட போது அதனை எவ்வளவு என்று கூட பார்க்காமல், அப்படியே விழாச் செலவுக்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று வழங்கியவர் ஐயா. 2005இல் முதலாமாண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவில் தனித் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

சமூக மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் மனதிற்கொண்டு இடைவிடாமல் அறுபதாண்டுகளுக்கும் மேல் ஓடி ஓடி தனது பேச்சால், எழுத்தால், ஆய்வால், உழைப்பால் உலகத் தமிழர்களிடையே தமிழ் பரப்பிய, கருத்துகளை விதைத்த மக்கள் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் குரல் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.


●

கட்டுரையாளர்:
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை;
தலைவர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அண்மையில் வெளியிட்ட பேராசிரியர் பா. ஆனந்த குமாரின் தமிழ் மலையாள இலக்கியங்கள் உறவு நிலைகளும் ஊடாட்டங்களும் என்ற நூல் 31-07-2026 அன்று காந்தி கிராம கிராமிய நிகர் நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் ஜீவா நாவா அறக்கட்டளை தொடக்க விழாவின் போது வெளியிடப்பட்டது. நூலினைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ந.பஞ்சநதம் வெளியிட முதற் படியினை பத்மஸ்ரீ கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார். உடன் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம், பேராசிரியர் சி.சிதம்பரம் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நிர்வாகிகள் அ.கிருஷ்ணமூர்த்தி, இரா.மகேந்திரன், க.எத்திராஜ் ஆகியோர் உள்ளனர்.

புதிய வரவு



திருக்குறள் – அறத்துப்பால் இயல்புரை

உரையாசிரியர் – தக்கோலம் கு. ஏகாம்பரம்

புலவர் தக்கோலம் கு. ஏகாம்பரம் அவர்கள் அரிதின் முயன்று எழுதியுள்ள, 'திருக்குறள் அறத்துப்பால் இயல்புரை' ஒரு சிறந்த முயற்சியாகும். திருக்குறளுக்கு ஒரு வரி உரைகள் எல்லாம் வந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில், பழைய உரை மரபை அடியொற்றி, 'பதவுரை, தொகுப்புரை, குறிப்புரை' என வகுத்துக் கொண்டு, ஒவ்வொரு குறளுக்கும் மிகுந்த கவனத்துடன் உரையெழுதியுள்ளார்.

வெளியீடு: இளங்கோ பதிப்பகம்
நூலைப் பெற: 95436 08422
விலை: ரூ.300/-



வளவில் வாழ்தல் ஓர் இலக்கியக் குறுக்கீடு

வளவு. க. ஆத்மநாதன். பெருந்தமிழன் பதிப்பகம், திருச்சி.
விலை ரூ.100. பேசி: 88703 30522. 94431 22860



இரா. காமராசு

கலை இலக்கியங்கள் சமூகத்தின் மனச்சான்றுகளாகத் திகழ்பவை. எனவேதான் இலக்கியத்தைச் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்றனர். இதனை நேர்கோட்டில் தட்டையாகப் பார்க்க வேண்டியதில்லை. நடப்பு அரசியல், சமூக, பண்பாட்டுச் சிக்கல்களை கலை இலக்கியப் படைப்புகளாக்குவது மிகுந்த பொறுப்புணர்வைக் கோரக்கூடியது. கத்தி மேல் நடப்பது போன்றது. இதில் படைப்பாளியின் கருத்தியல் சார்பும், சமூகப் பார்வையும் முக்கியமானவை.

எழுத்தாளர் க. ஆத்மநாதன் எழுதிய 'வளவு' நாவல் அண்மையில் வெளிவந்துள்ளது. இது 1997 மேலவளவு படுகொலைகளைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி உள்ளாட்சிகளில் ஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு எதிராக இடைநிலை ஆதிக்கச் சாதியினரின் பல்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்பட்ட எதிர்ப்புகளின் வன்குறியீடு மேலவளவு.

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஒன்றியம், மேலூருக்கும் மேற்கே பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மேலவளவு ஊராட்சி. இவ்வூராட்சியில் மந்திப்பிச்சான் பட்டி, ஓட்டக்கோவில், அழகாபுரிபட்டி, காந்திநகர், கைலம்பட்டி, சேமகிரிபட்டி,

கண்மாய்பட்டி, ராசினாம் பட்டி, வி. எஸ். நகரம், செல்லிக்கரைப்பட்டி ஆகிய பகுதிகள் அடக்கம். மேலூர் சட்டமன்றத் தொகுதியிலும், மதுரை மக்களவைத் தொகுதியிலும் மேலவளவு இருக்கிறது.

மேலவளவு ஊராட்சித் தலைவர் பட்டியல் இனத்தவருக்கானது என்பதை எதிர்த்து பல்வேறுப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. தேர்தலில் புறக்கணிப்பு, வாக்குச்சாவடிக் கலவரம், பதவியேற்பைச் சிக்கலுக்குள்ளாக்குதல் போன்ற பலவும் நடக்கிறது. ஒரு வழியாக 31.12.1996 இல் தேர்தல் நடைபெற்று, 01.01. 97 ல் முருகேசன் என்பவர் ஊராட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்படுகிறார். ஊராட்சி அலுவலகம் பூட்டு போடப்படுகிறது. ஊர்த் தொலைக்காட்சிப் பெட்டி அறையில் முருகேசன் தன் பணிகளைத் தொடர்கிறார். பிரச்சனைகளும் தொடர்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து முறையீடு செய்து திரும்பும் வழியில் 30.06.1997ல் ஊராட்சி தலைவர் முருகேசன் உட்பட ஆறு பேர் ஆதிக்கச்சாதியினரால் படுகொலை செய்யப்படுகின்றனர். தமிழ்ச் சமூகத்தின் சாதிய வன்ம வெறியின் ஆறாத வடு இது. ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கி போலி அரசியல் அதிகாரம் தன் கோரப் பற்களை எளிய மக்களுக்கு உணர்த்திய கொடும் சாட்சியம் இது.

மேலவளவு படுகொலை நிகழ்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து இந்த 'வளவு' நாவல் வெளிவந்துள்ளது. இதைப் 'பின் மேலே வளவு' எனலாம். வீரமும் காதலும் என வாழ்ந்த தமிழ்ச் சமூகம், சமயமற்ற, சாதியற்ற ஆதிப் பழங்குடிச் சமூகமாக திகழ்ந்த சமூகம், அவைதீக, சநாதன, சாதி வெறிச் சமூகமாக எப்படி, எதனால், யாரால் மாறிற்று என்ற வினாக்களை இப்பிரதி எழுப்புகிறது. குடிமைச் சமூகத்தில் திறந்த உரையாடலை நடத்த முயல்கிறது. உரையாடல்கள் தான் ஜனநாயகத் திறப்புகள். இச்சிறு நாவல் கற்பிதமாகக் (உட்டோப்பியா) கூட இருக்கலாம். இது காரியக் கற்பிதம். தமிழ்ச் சமூகம் சாதி எனும் சதியின் கேடுகளைக் கடக்க வேண்டிய அவசியத்தை எளிய விவாதமாக்கியிருக்கிறது எனலாம்.

'வளவு' எனும் இந்நாவல் நிகழ்வுகளை முன்பின்னாக கால நிரலைப் பிரித்துப் போட்டு புனைவாக்கப்பட்டுள்ளது. கடைசி இரவுச் சாப்பாடு, மோர்ப்பெண், தீர்ப்பு, கீழடி, கவியரங்கம், தியாக மண்டபம், கறுப்புச் சட்டை, மின்மினிப் பூச்சிகள், பொங்கல், விடிவெள்ளி எனும் பத்து பிரிவுகளில் கதை நகர்த்தப்பட்டுள்ளது.

கடைசி இரவுச் சாப்பாடு, தீர்ப்பு, தியாக மண்டபம் ஆகிய மூன்றும் மேலவளவு படுகொலையையும் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனையையும், அங்கு அமைக்கப்பட்ட மண்டபத்தையும் நினைவு கூர்தலாக இடம், பெயர், கால மாறுபாட்டுடன் புனைவாக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட பகுதியைச் சார்ந்த காலனி செல்வராசுவின் மகன் இனியன் கல்லூரியில் தமிழ் படிக்கிறான். அதே கல்லூரியில் அதே வகுப்பில் எதிர் தரப்பைச் சார்ந்த அரும்பும் படிக்கிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து, நட்பாகின்றனர். இலக்கியம், சமூகம் குறித்த கருத்து ஓர்மை இவர்களுக்குள் உண்டாகிறது. அரும்புவின் தகப்பன் மாயழகு. அரும்புவின் தாய்மாமன் பாண்டித்துரைக்குத் தன் மகளைத் தத்து கொடுத்து விடுகிறார். பாண்டித்துரை வளவு கொலையில் 'சம்பந்தப்படாத போதும்' குற்றவாளியாகி சிறைத் தண்டனை அனுபவித்தவர். சிறையில் பொதுவுடைமை இயக்கத் தலைவர்களுடன் உறவு ஏற்பட்டு சாதி கடந்து வாழத் தலைப்படுகிறார். இச்சூழலில், இனியன், அரும்பு நட்பு 'அலராக' வெளிப்படுகிறது. மாயழகு தன் பரிவாரங்களுடன் ஆதிக்கச் சாதி மனப்பான்மையில் சிக்கலை உருவாக்குகிறான். இனியனைக் குறி வைக்கின்றனர். இச்சூழலில் பாண்டித்துரை தலையிட்டு அரும்புக்கு பொறுப்பேற்று சிக்கலைத் தவிர்க்கிறார். இனியனையும் அவன் அப்பா செல்வராசுவையும் அழைத்து அரும்புவையும் அழைத்து வந்து இருவரின் விருப்பத்தையும் நிறைவேற்ற உறுதியளிக்கிறார். இருவரையும் உயர்கல்விக்காக சென்னைக்கு அனுப்பி வைக்கிறார். இதுதான் கதை. இது கற்பனைதான். நடக்க வேண்டியது. இரு தரப்புகளும் உரையாடலுக்கான வாய்ப்பை இப்பிரதி வழி எழுத்தாளர் உருவாக்கி விடுகிறார்.

அகம், காதல், ஜல்லிக்கட்டு, சங்ககால வாழ்வு, கீழடிப் பெருமிதம்... என காவியப் பண்புகள் ஆங்காங்கே மிளிர்கின்றன. சமகால சமூகத்தின் கொந்தளிப்பு மிக்க நிகழ்வை இலக்கியப் பதிவாக்குவது எளிதல்ல. மிகுந்த சமூகக் கரிசனத்துடன் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

"ஐயா, அவுங்களால கணேசனைத் தலைவரா ஏத்துக்க முடியலீங்க. நீங்க வந்து பேசுனப்ப. சட்டத்தையும், நியாய அநியாயங்களையும் நீங்க தெளிவா எடுத்து சொல்றப்ப சமாதானம் ஆகிப் போறவுங்க, பிறகு சாதியா நின்னு கூட்டம் போட்டு அவங்க நிலையை. மனசை. மாத்திக்கிறாங்கையா" (ப.17) என வளவின் சிக்கலை உணர்த்துவதும், அதற்கு மாவட்ட ஆட்சியர்,

"ஐயா... சாதிங்கிறது ரெண்டாயிரம் வருசமா நம்மகிட்ட இருந்து வர்ற ஒரு தீமை! நாள்பட்ட நோய் மாதிரி. நோயின்னு கூட சொல்ல முடியாது. அதை விட மோசம். குழந்தை பிறந்து கீழே விழறப்ப உடலில் இதயம் மாதிரி உறுப்புகள் அதோட சேர்ந்து வர்ற மாதிரி சாதியும் வருதோன்னு

கூட நான் பல சமயம் நினைப்பேன். இரும்புப் பாளம் போல நம்மூர் மனுசங்க நெஞ்சுல இது இறுகிக் கிடக்கு பெரியவரே!" (ப.18) என விளக்கம் தருவதும் கவனிக்கத்தக்கது.

சாதியின் சமூக உளவியலை இனியன் வழி பல இடங்களில் பதிவு செய்கிறார் ஆசிரியர். "ஒவ்வொருத்தருக்கும் ஒரு குணாம்சம். அவரு நம்மூரு காலனியில இருக்கிற ஒரு குடும்பத்தில இருந்து படிக்க வர்றாரு. காலனிக்கும், மற்றவர்களுக்கும் இருக்கிற வேறுபாடு. இணைக்க முடியாத பள்ளம். உனக்குத் தெரியாதா என்ன? அந்தப் பகுதியிலேர்ந்து நம்ம கல்லூரியில படிக்க வந்திருக்கிற ஒரே பையன் இவர்தான்! மனிதர்களுடைய சூழ்நிலைதான் அவங்களோட சிந்தனையையும், வாழ்க்கைப் போக்கையும் தீர்மானிக்கும் சுமதி. அதோட கல்லூரியில பெண்களோட பேசினா பிரச்சினை ஏதும் வருமுன்னும் அவர் நினைச்சிருக்கலாம்." (ப. 30)

"அரும்பு... நம்ம ஊரில் உங்கத் தெரு வளவுக்கும் எங்க காலனிக்கும் எவ்வளவு வேறுபாடு! எத்தனைப் பெரிய சமூக, பண்பாட்டு மடு நம்மைப் பிரித்து ஆள்கிறது! எங்கள் மக்கள்தான் எத்தனை, எத்தனை இழிவுகளையும், புறக்கணிப்புகளையும், வன்கொடுமைகளையும் சுமந்து நாள்தோறும் அல்லல்படுகிறார்கள்! நம்ம கிராமத்து நிலைமைதான் நம்ம நாடு பூராவும் நிலவுகிறது அரும்பு. இதெல்லாம் சாதியின் பெயராலேதானே நடக்கிறது. அதற்கான. அந்தச் சாதித் தீமைக்கான. எனது வருத்தத்தை, எதிர்ப்பைக் காட்டுகிற வகையில்தான் நான் இந்தக் கருஞ்சட்டையையே எப்போதும் அணிகிறேன்." (ப. 34)

சாதியைப் புரிதலையும் அதனை எதிர்க்கும் மனப்பக்குவத்தையும் சமத்துவ வேட்கையையும் இதனுள் காண இயலும்.

"பார்ப்பதற்குச் சிலிர்ப்பூட்டக் கூடியதாக இருந்தாலும், நாம் இன்று வீர விளையாட்டாக நமது பண்பாட்டின் ஒரு பெரும் அடையாளமாகக் கருதும் இந்தச் சல்லிக்கட்டு விழாக்களில் இன்று எனக்குப் பெரிதாய் மதிப்பு கிடையாது. நமது பகுதியில் சாதியம் இந்த விளையாட்டில் மறைமுகமாகக் கலந்து மக்களில் ஒரு சாராருக்கு அச்சத்தையும், விளையாட்டில் ஈடுபடுவதற்கான தயக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது." (ப. 36) என சல்லிக்கட்டு விமர்சனம் ஆகிறது.

"சாதின்னு ஒன்னு இருக்கும் வரை நாம அழுதுகிட்டும், பயந்துகிட்டும்தான் கிடக்கணும் போலிருக்கு! ஆனா, அண்ணி, ஏதோ ஒரு நாள் வரும்! அன்னைக்குச் சாதி துடைத்தெறியப்படும்! இந்த சாதி சமுதாயமும் தன்னை முழுசா திருத்திக்கும்!" (ப. 48) என சாதி ஒரு நாள் உதிரும் என்பதை நம்பிக்கையூட்டுவது மட்டுமின்றி சாதியின் வேரினை,

"உண்மைதானே? ஆரம்பத்தில் தமிழ்க்குடியில் சாதி ஏது? ஆனா, சங்க காலத்திலேயே வைதீகம் வந்து நம்ம மக்களிடையே மெல்ல கலந்திருச்சி. அப்போதே ஏற்றத்தாழ்வான சமூக வர்க்க உருவாக்கம் சாதியின் முன் வடிவங்களை உருவாக்கியிருக்கக் கூடும். பின்னாடி பேரரசுகள் உருவாகி நிலவுடைமை தமிழ்ச் சமூகத்தில் வலுப்பட்டப்பத்தான் தொழில் பிரிவுகள் பிறப்பு வழிப் பட்ட சாதியாய் நல்லா வேரூன்றி ஆழப்பட்டிருச்சி. அந்த சமயத்துல பிராமணீயம், தமிழ் மன்னர்கள் உதவியோட, சாதிங்கிற தீய பண்பாட்டு அம்சத்தை மதச் சடங்கோட இணைச்சி நம்ம தமிழ் மக்களை ஏத்துக்க வைச்சிடுச்சி. அதுதான் இன்னமும் தொடருது" (ப. 67) எனச் சுட்டுவது நோக்கத்தக்கது.

"ஏன் அரும்பு, நீ இப்படி என்கிட்ட பேசிக்கிட்டிருக்குறது உன் உறவுகளுக்குத் தெரிய வந்தால், உன்னைய அவுங்க கோவிச்சுக்கிடமாட்டாங்களா? என்னோட பெரியப்பா கணேசன் கொலையையும், அதனால் கிடைச்ச சிறைத் தண்டனையையும் அவுங்க மறந்திருப்பாங்களா, என்ன?"

"தெரியல. ஆனா, விரும்பமாட்டாங்க. போனவாரம் ஒரு நாள் அப்பாகிட்ட உங்களப் பத்திப் பேசினேன். அவுங்களுக்கு உங்களைப் பத்தித் தெரிஞ்சிருக்கு."

"என்னையப் பத்தி பேசினியா! என்ன பேசுன?" கையில் பிடித்திருந்த ஸ்பூனை வாயருகே நிறுத்தினான் இனியன்.

"ஏன் பதட்டப்படுறீங்க? நீங்க எங்கூட படிக்கிறவர்னு சொன்னேன். நீங்க கறுப்புச் சட்டை போட்டிருக்கிறதைச் சொன்னேன். ஏன் போட்டிருக்கீங்கன்னு அதையும் கொஞ்சம் விளக்கிச் சொன்னேன். அவ்வளவுதான்."

"சரி அதுக்கு அவுங்க என்ன சொன்னாங்க?"

"தெரியும். நம்ம காலனி செல்வராசுவோட பையன்தானே அவன். 'ரொம்ப நல்ல பையன், நல்லா படிப்பான்னு கேள்விப்பட்டிருக்கேன்' அப்படின்னாங்க." (பக் 82-83)

இந்த உரையாடல் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இனியனின் சமூக உளவியலைப் பதிவு செய்கிறது.

"அந்தக் காலனி செல்வராசுவோட பையனைத் தூக்கிட வேண்டியதுதான். அரும்பு அவனுக்கு சட்டை வாங்கிக் கொடுத்திருக்கா. அதை அவன் போட்டுக்கிட்டு பெருமை புடிச்சி வெளியில திரியிறானாம். காலேஜி கேண்டீன்ல வேலை

செய்யுற எங்க ஊரு பெண்ணை விசாரிச்சோம். அவ எல்லா விவரத்தையும் சொல்றா. வேற சில பேரும் அரும்பையும், அந்தப் பையனையும் அங்க இங்க பார்த்ததா சொல்றாங்க. நம்மால இதை யெல்லாம் தாங்கிக்கிட்டு இருக்க முடியாதுப்பா. எம் மச்சான் வீட்டுக்கு எம் பொண்ண தத்துக்கொடுத்தது தான் இப்ப தப்பாத் தெரியுது. அங்க வளர்ப்பு சரியில்ல." (பக். 89) என அரும்புவின் உண்மை அப்பா மாயழகு கருவுகிறார்.

"மூன்றாண்டுகள் ஒன்றாய்ப் படித்தாலும் ஓரிரு மாதங்களாகத்தான் நாம் இனியனுடன் சற்றுக் கூடுதலாய் அன்பாய்ப் பழகி வருகிறோம் என நினைத்த அரும்பு அதற்குள்ளாகவே இப்படி எதிர்ப்பு வெடித்து வெளிவருவதை நினைத்து வியப்படைந்தாள். என்ன இப்போது தவறு நிகழ்ந்து விட்டது என்பதும் அவளது மனதுக்குப் பிடிபடவில்லை. இனியன் சொல்வதைப் போல் சாதியம் இவ்வளவு கொடூரமானதா? தான் இனியனிடம் நெருங்கிச் சென்ற போதெல்லாம் அவன் தயங்கியதும், விலகி நின்றதும் இதன் பொருட்டுத்தானா?" (பக் 92) இதில் அரும்புவின் பார்வை யதார்த்தத்தைச் சித்திரிக்கிறது.

மேல வளவு சம்பவத்தினைப் போன்ற தொரு பழிவாங்கும் மோதலை. பேருந்து வழி அரங்கேற்றத் துடிக்கிறது ஆதிக்கத்தரப்பு. அன்று முருகேசனும் தோழர்களும் நிராயுத பாணிகள். இன்று,

செல்வராசு பதட்டமின்றி அமைதியாய் மாயழகை நோக்கிப் பேசினார்:

"ஐயா வேண்டாம். நாங்களும் ஆயுதம் எடுத்துக்கிட்டுத்தான் வந்திருக்கோம். அறிவழகன் 'சுமித் அண்ட் வெஸன்' கைத்துப்பாக்கி வச்சிருக்கான். மோதல்னா அவன் சுட்டுடுவான். வேற வழியில்லை. இரண்டுப் பக்கமும் சேதமாயிடும். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். வேண்டாம்." (பக்.108)

காலமாற்றம், அடித்தால் திருப்பி அடிப்போம் எனும் வளர்ச்சி நிலை உருவாகிவிட்டது. எதிர்த் தரப்பு அரிவாள், ஆயுதங்கள் வைத்திருக்க, இங்கு துப்பாக்கி. படைப்பாளி துல்லியமான சமூக எதிர்ப்பைப் பதிவாக்குகிறார்.

சாதி ஒழிப்பின் முதல் நிலை சொந்த சாதி அபிமானத்தை விடுவது. தன்னைக் கீழிறக்கம் செய்து கொள்வது. இதனை, ஆதிக்க இடைநிலை சாதியினரான பாண்டித்துரையார் வழி நிறுவுகிறார் ஆசிரியர்.

"வாங்கடா என்னைய முதல்ல வெட்டிப்போட்டுட்டு அப்புறம் இந்த செல்வராசு குடும்பத்தை வெட்டுங்கடா. யேய்... சுந்தரபாண்டி, உன் வீடு என் தெருவிலாதனே இருக்கு. என்ன மயிருக்கு என்னைய கேட்காம இங்க வந்தே? உன் அப்பன் கிழவனுக்குத் தெரியுமா நீ இங்க வந்தது? எல்லோருக்கும் செயிலுக்குப் போயி புளுத்த அரிசிச்சாதம் திங்கணுமுன்னு ஆசையாயிருக்கு போலிருக்கு! ஜெயில் வாழ்க்கைன்னா என்னான்னு தெரியுமாடா உங்களுக்கு?" (ப.109) எனப் பேசுவதுடன், செல்வராசு தரப்புக்கு ஆதரவாக நிற்கவும் செய்கிறார்.

மேலும், தன் மைத்துனனும், அரும்புவின் மெய்யான தந்தையுமான மாயழகை, அவனின் சுயத்தை இப்படி கேள்விக்குள்ளாக்குகிறார் பாண்டித்துரை:

"என்ன மசுரு விசயம் கேட்கப்போற? சரி நான் உன்னைய ஒண்ணு கேட்கறேன். அதுக்கு மட்டும் நீ நெஞ்சில கையை வச்சி உண்மையச் சொல்லு. எதுக்கு நீ மூணு நாளைக்கு ஒரு தரம் சென்னம்பட்டி காலனிக்குள்ள ராத்திரி ராத்திரி போயிட்டு வாறே! அப்ப மட்டும் ஒஞ்சாதி சடங்கெல்லாம் உனக்கு ஞாபகம் வர்றதில்லையா?".. (ப 110)

பாண்டித்துரை, செல்வராசுவிடம் இணக்கமாகவும், அதே நேரத்தில் இனியன், அரும்பு வாழ்வு குறித்த பாதுகாப்புணர்வுடன் பேசிச் சம்மதம் தந்து, சம்மதத்தைப் பெறுகிறார். மேலும் தன் குடும்பத்தின் பாரம்பரிய வைர மோதிரத்தை அரும்புவிடம் தந்து இனியனுக்கு அணிவிக்கச் செய்கிறார். இனியனின் தாய் பூவாயியின் காது தோட்டினை அரும்புவுக்கு அணியச் செய்கிறார்.


சாதிப் பகைமைக்குக் காரணமான ஊர்ப்புறத்தை விடுத்து சென்னை நகருக்கு, உயர் படிப்புக்கு அனுப்புவதும் கூட இயல்பான அவசியமான தீர்வாகவே அமைகிறது.

காதலின் பொருட்டு சாதி ஆணவக் கொலைகள் நடக்கும் காலத்தில், நாகரிகச் சமூகத்தின் வெளிப்பாடாக இந்நாவல் அமைவது சிறப்பு.

'வளவு' தன் இலக்கில் வெற்றி பெறுகிறது. சங்கப்பாடல்கள், காதல், கவியரங்கம், கீழடி, தூய்மையான உரையாடல் மொழி... என நேர்க்கோட்டைக் கலைத்துப் போட்டு விளையாடி உள்ளார் க. ஆத்மநாதன், கலை இலக்கிய அழகியல், ஓர்மைகள் தாண்டி நடப்பு சமூக நிலைமை குறித்து கலைப் படைப்பு வழியான ஓர் உரையாடலை அவர் தந்ததற்குப் பாராட்டுக்கள். ஆசிரியரின் கருத்தியல் சார்பு மெச்சத்தக்கது.

●

கட்டுரையாளர்: பேராசிரியர், தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.



லியோ டால்ஸ்டாய் காந்தியின் வாத்தியார்

"டால்ஸ்டாய் என் வாழ்க்கைக்கு வழிகாட்டியவர்களில் ஒருவர்; அவரது சிந்தனைகள் என்னை அகிம்சையின் பாதையில் வலுப்படுத்தின."
- மகாத்மா காந்தி



பாரதிபாலன்

மகாத்மா காந்தி அப்போது தென் ஆப்பிரிக்காவில் இருந்தார். அவர் மனதில் நிறையக் கேள்விகள் இருந்தன. அநீதியை எதிர்க்க வன்முறைதான் தீர்வா? அது இல்லாமலே முடியாதா? அன்பும் உண்மையும் எப்போதும் வெற்றி தருமா? இவை போன்ற பல கேள்விகள் அவர் மனதில் தோன்றின. சரியான விடை கிடைக்கவில்லை. மனம் குழம்பியது. இந்தக் கேள்விகள் அவரைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டே இருந்ததன.

ஒரு நாள் மாலை. காந்தி கடுமையான வேலைகளுக்குப் பிறகு, தன் சிறிய அறையில் அமைதியாக அமர்ந்திருந்தார். அப்போது அவர் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினார். அது ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய புத்தகம்!

அந்தப் புத்தகத்தைப் படிக்கப் படிக்க, காந்தியின் மனம் விரிந்தது. ஒரு தெளிவு தோன்றிற்று. "அன்பே மிகப் பெரிய சக்தி. வன்முறைக்கு வன்முறை ஒருபோதும் தீர்வு ஆகாது!" என்ற டால்ஸ்டாயின் எண்ணம், காந்தியின் இதயத்தை ஆழமாகத் தொட்டுவிட்டது! உடனே காந்திக்கு ஓர் ஆசை வந்தது. "டால்ஸ்டாயை நேரில் சென்று சந்திக்க வேண்டும். அதற்குமுன், அவரின் சிந்தனைகள் என்னை எவ்வளவு தைரியமாக்கின என்பதை உடனே அவருக்கு எழுத வேண்டும்" என்று காந்தி,

டால்ஸ்டாய்க்கு ஒரு கடிதம் எழுதினார். "நான் அஹிம்சை வழியில் போராடுகிறேன் - உங்கள் எழுத்தின் ஒளியில்" என்று மட்டும் பணிவுடன் எழுதியிருந்தார். சில நாட்களுக்குப் பிறகு, பதில் கடிதம் வந்தது. டால்ஸ்டாய், காந்தியின் பணியைப் பாராட்டி, "அன்பும் உண்மையும் தான் உலகை மாற்றும் சக்தி" என்று பதில் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தைப் படித்ததும், காந்தியின் கண்களில் ஓர் ஒளி! மனதில் ஆனந்தம். "நான் தனியாக இல்லை. நான் தேர்ந்தெடுத்த இந்தப் பாதை சரியான பாதை"தான் என்று அவர் உறுதியாக நம்பினார். பின்னாளில், தன் வாழ்வில் மிகுந்த மரியாதை வைத்த டால்ஸ்டாயை நினைவுகூரும் விதமாக, காந்தி தென்னாப்பிரிக்காவில் ஜோன்னஸ்பார்க் அருகில் சத்தியாகிரகப் போராட்டத்திற்காக உருவாக்கிய கூட்டுறவு பண்ணைக்கு ஒரு இடத்திற்கு "டால்ஸ்டாய் பண்ணை" என்று பெயரிட்டார். அது அவரது உள்ளத்தில் டால்ஸ்டாய் மிக உயர்ந்த இடத்தில் இருந்ததற்கான அடையாளச் சின்னமாகக் கருதப்பட்டது.

உலக இலக்கிய வரலாற்றில் சில எழுத்தாளர்கள் மட்டுமே தங்கள் காலத்தைத் தாண்டி, தலைமுறைகளைக் கடந்து மனித மனங்களைத் தொடர்ந்து தொட்டுக் கொண்டே இருக்கிறார்கள்! அந்த வரிசையில் லியோ நிக்கோலயேவிச் டால்ஸ்டாய் (Leo Nikolayevich Tolstoy) ஒரு தனித்துவமானவர். அவர் நாவலாசிரியர் மட்டுமல்லர்; மனித வாழ்வின் அர்த்தம், துன்பம், காதல், கடமை, வாழ்க்கைநெறி, ஆன்மீகம் ஆகிய அனைத்துத் தளங்களையும் ஒரே நேரத்தில் ஆராய்ந்த மாபெரும் சிந்தனையாளர்; கலைஞர்! அவரது எழுத்துகள் மனிதர்களை அவர்களது புறவாழ்வில் இருந்து அகவாழ்வை நோக்கி ஆழமாக இட்டுச் செல்கின்றன. அதனால்தான் டால்ஸ்டாய் இலக்கிய உலகில் "வாழ்க்கை நெறியைப் போதிக்கும் ஆசிரியர்" என்று அழைக்கப்படுகிறார்.

லியோ டால்ஸ்டாய் 1828 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 அன்று (அன்றைய ரஷ்ய நாட்காட்டியின்படி ஆகஸ்ட் 28) ரஷ்யாவில் உள்ள யாஸ்னயா பொல்யானா என்ற பெரிய நிலப்பகுதியில், ஓர் உயர்குடிக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய குடும்பம் கல்வியும் மிகுந்த செல்வமும் பெற்ற குடும்பமாக இருந்தது. ஆனாலும், அவர் சிறு வயதிலேயே தாய்-தந்தையரை இழந்தவர்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது அவரது வாழ்க்கை வசதியும் செழிப்பும் நிறைந்ததாகத் தோன்றினாலும், அவரது உள்ளார்ந்த வாழ்க்கை என்பது குழந்தைப் பருவத்திலிருந்தே சோகத்தாலும் தனிமையாலும் நிரம்பியது. சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த அவரது தனிமை அனுபவம், அவரது மனதில் ஒரு நிரந்தரமான வெற்றிடத்தை உருவாக்கியது. அந்த வெற்றிடமே பின்னாளில் அவரது எழுத்துகளில் காணப்படும், வாழ்க்கை-மரணம் பற்றிய ஆழமான விசாரணைகளுக்கான விதையாக அமைந்தது. செல்வச் சூழலில் வளர்ந்தாலும், அவர் வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தைத் தேடும் மனநிலையிலேயே இருந்தார். அதை நோக்கியே அவரது மனம் சென்றுகொண்டிருந்தது.

இளமைப் பருவத்தில் டால்ஸ்டாய் வழக்கமான "அரிஸ்டோக்ராட்" மனோபாவத்தில் – அதாவது, ஒரு மேட்டுக்குடி இளைஞனாகவே வாழ்ந்தார். சூதாட்டம், ஆடம்பரம், மது, என ஓர் ஒழுங்கற்ற வாழ்க்கை. பல நேரங்களில் அவர் தன் சொந்த வாழ்க்கையில் வெறுப்பும் குற்ற உணர்ச்சியும் கொண்டிருந்தார். அவருடைய வாழ்வின் இருள்நிறைந்த இந்தப் பக்கங்கள்தான் அவரை எழுத்தாளராக உருவாக்கின எனலாம். ஏனெனில், மனிதன் எவ்வாறு தன் பலவீனங்களில் சிக்கிக் கொள்கிறான் என்பதையும், அந்தச் சிக்கல்களிலிருந்து மீள அவன் மேற்கொள்ளும் போராட்டத்தையும் அவர் நேரடியாக அனுபவித்திருந்தார். இந்த அனுபவங்களே அவரது கதாபாத்திரங்களை உயிர்துடிப்பான மனிதர்களாக மாற்றின.

டால்ஸ்டாய் வாழ்ந்த காலம் 19ஆம் நூற்றாண்டு. அப்போது ரஷ்ய சமூகத்தில் பெரும் சமத்துவமின்மை நிலவியது. செல்வந்தர்கள் மிக வசதியாக வாழ்ந்தனர்; விவசாயிகளும், ஏழைகளும் கொடிய வறுமையில் வாடினர். அடிமைத்தனம் (Serfdom), போர், மதச்சடங்குகள், அரசின் அதிகாரம் ஆகியவற்றை டால்ஸ்டாய் கடுமையாக விமர்சித்தார். பின்னாளில், எளிய வாழ்க்கை, அஹிம்சை போன்ற கொள்கைகளை அவர் வலியுறுத்தினார்.

டால்ஸ்டாய் எழுத்துலகில் காலடி வைத்தது 1840களின் இறுதியில்தான். ஆனால் அவரது வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்புமுனை அவர் ராணுவச் சேவையில் பங்கேற்றதுதான். க்ரிமியன் போர் (Crimean War) காலத்தில் அவர் ராணுவத்தில் பணியாற்றினார். போர்க்களத்தில் கண்ட மரணம், பயம், வீரத்தின் போலித்தனம், மனித உயிரை அற்பத்தனமாக மதித்தது, சிலர் நடந்துகொண்ட முறை அவரை ஆழமாக உலுக்கின. இதன் விளைவாக, அவர் எழுதிய "செவாஸ்டோபோல் சித்திரங்கள்" (Sevastopol Sketches) போன்ற படைப்புகள், போரை மனித வாழ்க்கையின் கொடூரமாகச் சித்திரித்தன. இது ரஷ்ய இலக்கியத்தில் ஒரு புதிய யதார்த்தவாதப் பார்வையை உருவாக்கியது.

1852ஆம் ஆண்டு வெளிவந்த "குழந்தைப் பருவம்" (Childhood) என்ற அவரது முதல் நாவல், அவரது எழுத்துத் திறனை இலக்கிய உலகிற்கு

அறிமுகப்படுத்தியது. குழந்தை மனதின் நுண்ணிய உணர்வுகளை, நினைவுகளின் இனிமையையும் வேதனையையும் ஒருவிதமான மொழியில் அவர் வெளிப்படுத்தினார். இதன் தொடர்ச்சியாக, "இளமைப் பருவம்" (Boyhood), "வாலிபப் பருவம்" (Youth) ஆகிய படைப்புகள் வெளிவந்தன. இவை அனைத்தும் டால்ஸ்டாயின் சொந்த வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவைதான் என்றாலும், அவை தனிப்பட்ட நினைவுகளாக மட்டுமல்லாமல், பொதுவான மனித அனுபவங்களாக இருந்தன.

டால்ஸ்டாயின் இலக்கிய வாழ்வின் உச்சம் என்பது 1860-70 ஆகும். "போரும் அமைதியும்" (War and Peace), "அன்னா கரீனினா" (Anna Karenina) போன்ற மாபெரும் படைப்புகள் இந்தக் காலகட்டத்தில்தான் வெளிவந்தன. போரும் அமைதியும் நாவல் ஒரு காலத்தின் வரலாற்றையும், அக்கால மக்களின் வாழ்க்கையையும் பிரதிபலிக்கும் மாபெரும் படைப்பாகும். ஒரு தேசத்தின் மனநிலை, மனித வாழ்க்கையின் பரந்து விரிந்த காட்சிப்படம் போல விரிகிறது. நெப்போலியன் போர்கள், ரஷ்ய சமூக வாழ்க்கை, அரசியல், குடும்ப உறவுகள், தனிமனிதனின் உள்ளார்ந்த போராட்டங்கள் என அனைத்தையும் ஒரே நாவலில் பேசியது டால்ஸ்டாயின் மேதைமையைக் காட்டுகிறது. இதில் உள்ள கதாபாத்திரங்கள் வாசகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துவிட்டன.

"போரும் அமைதியும்" (War and Peace) – 1869 வெளிவந்தது. அது ரஷ்ய மக்கள் தேசம், போர், வீரம் பற்றியே அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த காலகட்டம். நெப்போலியனின் தாக்குதல்களால் ஏற்பட்ட போர்கள் மாறாமல் மக்களின் நினைவில் தங்கியிருந்தன. அரசர்கள், படைத்தலைவர்கள், தேசப்பற்று ஆகியவை வாழ்க்கையின் பெருமிதமாகவும் வரலாற்றுச் சிறப்பாகவும் கருதப்பட்டன. அதனால் டால்ஸ்டாய், "மிகப்பெரிய வரலாறுகள் யாரால் உருவாகின்றன?" என்ற கேள்வியை எழுப்புகிறார். அரசர்களா? இல்லை, சாதாரண மக்களா? போர் மனிதனை உயர்த்துகிறதா, அழிக்கிறதா? என்பது போன்ற தொடர் விசாரணைதான் இந்த நாவலின் மையம்.

ரஷ்யாவில், அரச குடும்பங்கள் மற்றும் மேட்டுக்குடி மக்களுக்கிடையில் இருந்துதான் இந்தக் கதை தொடங்குகிறது. ஒருபுறம் நாட்டை உலுக்கும் போர், மறுபுறம் மனிதர்களின் தனிப்பட்ட வாழ்க்கை – காதல், குடும்பம், கனவுகள். இந்த இரண்டு வெவ்வேறு உலகங்களையும் இணைத்துக் காட்டும் கதைதான் போரும் அமைதியும்.

"பியர்" என்ற பணக்கார இளைஞன் இருக்கிறான். அவன் வாழ்வின் அர்த்தம் என்ன என்று புரியாமல் மனக்குழப்பத்தில் இருக்கிறான். பணமும் பதவியும் அதிகாரமும் இருந்தும், அவனுக்கு மன அமைதி என்பதே இல்லை, "நல்ல உயர்வான நிலையில் வாழ வேண்டும்" என்ற ஆசையுடன், பல தவறுகளைத் தொடர்ந்து செய்து பின்பு அதை உணர்ந்து திருந்துவது என்பதான கதைக் களம்.

அதே நேரத்தில் "ஆண்ட்ரெய்" என்ற இளவரசன் போர்க்களத்துக்குச் செல்கிறான். போர்க்களத்தில் வீரமாகப் போரிட்டால் புகழும் பெருமையும் கிடைக்கும் என நம்புகிறான். ஆனால் போர்க்களத்தில் அவன் கண்ட காட்சி மரணம், துன்பம், அழுகுரலும் உயிர்இழப்பும். இந்த வீண் அழிவு அவனுடைய எண்ணங்களைச் 'சட்'டென்று சிதைத்துவிடுகிறது. அதன் பின் அவன் வாழ்க்கையைப் பற்றி மிக ஆழமாகச் சிந்திக்கத் தொடங்குகிறான்.

இதற்கிடையில் "நத்தாஷா" என்ற ஓர் இளம் பெண். அவள் அன்பும் அழகும் நிறைந்தவள். அது மட்டுமல்ல, அவள் மிகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பாள். வாழ்க்கையை ஓர் இசையாகவும் மகிழ்ச்சியாகவும் பார்த்தாள். ஆனால் அவளின் காதல், ஏமாற்றம், மனவேதனை, தவறான முடிவுகள் அவள் மன நிலையை முற்றிலும் மாற்றிவிடுகின்றன. காலம் ஓடுகிறது. அவள் மனமுதிர்ச்சி அடைகிறாள்.

நெப்போலியன் ரஷ்யாவைத் தாக்க, நாடெங்கும் போர் வெடிக்கிறது. மக்கள் வீடு, உடைமைகளை இழக்கிறார்கள்; நகரங்கள் தீப்பற்றி எரிகின்றன; வீரர்கள் வீழ்கிறார்கள். மாபெரும் போரின் முன் மனிதர்கள் மிகவும் சிறுமைப்பட்டு விடுகிறார்கள் என்பதைத்தான் இந்தக் கதை உணர்த்துகிறது. பெரிய பேரரசர்களின் தவறான முடிவுகள் எளிய பொதுமக்களின் வாழ்க்கையை அழிக்கின்றன. போரின் கொடூரத்துக்குப் பிறகு, மீதமிருப்பவை அமைதி, குடும்பம், அன்பு மட்டுமே என்பதே முடிவு. பியர் வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தைக் கண்டடைகிறான். நத்தாஷா வாழ்க்கையின் சுமைகளை ஏற்றுக்கொண்டு அமைதியான குடும்ப வாழ்க்கைக்குத் திரும்புகிறாள்.

இதே போல் அன்னாகரீனினா காதல், திருமணம், சமூக கட்டுப்பாடுகள், பெண்ணின் நிலை ஆகியவற்றை மிக ஆழமாக ஆராயும் படைப்பு .

அன்னா கரீனினா – 1877 ஆண்டு, போர்களின் சத்தம் சற்று அடங்கிய பின் வெளிவந்தது. சமூகத்தில் ஒழுக்கம், திருமணம், பெண் சுதந்திரம், மக்களிடம் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகள் தீவிரமாகத் தோன்றத் தொடங்கியிருந்தன. மேல்தட்டு சமூகத்தில் அறியப்படாத ஒரு வெறுமையும் போலித்தனமும் வெளிப்பட்டன. குறிப்பாக, ஒரு பெண் சமூகக் கட்டுப்பாடுகளால் எவ்வாறெல்லாம் நசுக்கப்படுகிறாள் என்பதை அழுத்தமாகச் சொல்கிறார்.

ரஷ்ய நாட்டில், உயர் சமூகத்தில் பிறந்து வாழ்ந்த ஓர் அழகான பெண் தான் அன்னா கரீனினா . அவள் தன் கணவர் கரீனின் அரசு அதிகாரி. மதிப்புமிக்க உயர் பதவி, சட்டம் பகட்டு என்பதிலே அவர் வாழ்க்கை ஓடுகிறது, ஆனால் அன்னாவின் வாழ்க்கையில் அன்பும் பாசமும் வற்றிப்போய் ஒரு வெறுமை ஏற்படுகிறது!

ஒரு நாள் மாஸ்கோ நகருக்கு வந்த அன்னா, அங்கு இளம் இராணுவ அதிகாரியான விரோன்ஸ்கியை எதிர்பாராமல் தற்செயலாகச் சந்திக்கிறாள். அந்த முதற்சந்திப்பிலேயே இருவருக்கும் ஒருவிதமான மன ஈர்ப்பு ஏற்பட்டு விடுகிறது!. காலப்போக்கில் மெல்ல அது காதலாக மலர்கிறது. அது வெளி உலகிற்கும் தெரியவருகிறது, அது மறைக்கமுடியாமல் மறக்கமுடியாத காதலாகிறது. ஆனால் அந்தக் காதல் சமூகத்திற்கு எப்படி பிடிக்கும்.? "திருமணமான ஒரு பெண்" இப்படி செய்யலாமா? இது நியாயமா? என்று கடுமையான எதிர்ப்பு கிளம்புகிறது. கணவர் அவளை வெறுத்து ஒதுக்குகிறார். தன் மகனிடமிருந்தும் அன்னா பிரிக்கப்படுகிறாள். விரோன்ஸ்கியுடன் இருந்தாலும், சமூகம் அவளை அவமானப்படுத்துகிறது. பொறாமை கொள்கிறது. மனவேதனை அடையச் செய்கிறது. அந்த மன வேதனை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது!. அன்புக்காக ஏங்கும் அன்னா, இறுதியில் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் தள்ளப்படுகிறாள். அவளின் காதல் சோக முடிவை அடைகிறது.

இதே கதைக்குள், இன்னொரு கதையும் வருகிறது. லெவின் என்ற மனிதனின் வாழ்க்கையும் சொல்லப்படுகிறது. அவன் எளிய மனிதன்; நிலத்தில் உழைப்பவன். கிட்டி என்ற பெண்ணைக் காதலிக்கிறான். அவர்கள் திருமணம் செய்து கொண்டு, எத்தனையோ பல சிரமங்களுடன் வாழ்ந்தாலும், அன்பும் காதலும் கொண்ட ஒரு குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, மிக மகிழ்ச்சியாக வாழ்க்கையை எதிர்கொள்கிறார்கள்.

ஒருபக்கம் அன்னாவின் வாழ்க்கைப் போராட்டமும் சிதைவும், மறுபுறம் லெவின்-கிட்டியின் காதல் வாழ்வும் மகிழ்வும் மறுபக்கம் இவை சமூக கட்டுப்பாடுகளை மீறி காதல் கொள்ளும் போது எவ்வளவு துன்பத்தை மனிதர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும், உண்மையான வாழ்க்கை எளிய அன்பிலும் பொறுப்பிலும் தான் உள்ளது என்பதையும் சொல்லும் யதார்த்தவாதக் கதைதான் அன்னா கரீனினா!

இந்த இரண்டு மாபெரும் படைப்புகளுக்குப் பிறகு, டால்ஸ்டாயின் வாழ்க்கையில் ஓர் ஆன்மீகத் தேடல் ஏற்பட்டுவிடுகிறது. வாழ்வின் அர்த்தம் என்ன? மனிதன் எதற்காகப் பிறக்கிறான்? எதற்கு மனிதனுக்குத் துன்பம் வருகிறது? என்பதான பல கேள்விகள் அவரைத் தொடர்ந்து வாட்டின. இதன் விளைவாக அவர் எழுதிய "ஒப்புதல்" (A Confession) போன்ற படைப்புகள், அவரது ஆன்மீகத் தேடலின் வெளிப்பாடுகளாக அமைந்தன. இக்காலகட்டத்தில் அவரது எழுத்துகளில் கலை அழகைவிட வாழ்வியல் தத்துவம் குறித்த பார்வையே அதிகரித்துள்ளது என சில விமர்சகர்கள் கூறினாலும், அது அவரது உள்ளார்ந்த உண்மையின் தேடலின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது.

டால்ஸ்டாயின் எழுத்துப் பாரம்பரியத்தின் மிக முக்கியமான அம்சம் என்பது அவரது யதார்த்தவாதம். அவர் வாழ்க்கையை அலங்காரமின்றி, போலித்தனமின்றி உரித்துக்காட்டினார். மனிதன் ஒரே நேரத்தில் நல்லவனாகவும், கெட்டவனாகவும் இருக்க முடியும் என்பதை அவரது கதாபாத்திரங்கள் உணர்த்தின. அவரிடம் முழுமையான கதாநாயகன் என்பதோ, முழுமையான வில்லன் என்பதோ கிடையாது. அனைவரும் தங்கள் சூழ்நிலைகளின் கைதிகள் தான்!

அதே நேரத்தில் டால்ஸ்டாய் ஒரு சமூக சிந்தனையாளர். அகிம்சை, எளிமை, தொழிலாளர் வாழ்க்கை, மதத்தின் உண்மையான பொருள் ஆகியவற்றை அவர் தீவிரமாகச் சிந்தித்தார், ஆராய்ந்தார். அவரது இந்தச் சிந்தனைகள் மகாத்மா காந்தியை ஆழமாகப் பாதித்தன என்பது குறிப்பிடத்தக்கது. டால்ஸ்டாயின் தத்துவம் (Tolstoyan Philosophy) என்றே தனியான சிந்தனை மரபு ஒன்று உருவானது.

இலக்கிய மதிப்பீட்டின் வழி பார்க்கும்போது, டால்ஸ்டாய் உலகின் மிகச் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். மனித மனத்தின் உளவியலை இவ்வளவு நுணுக்கமாகப் பதிவு செய்தவர் அரிது. சிலர் அவரது பிற்கால எழுத்துகளை அதிக போதனை கொண்டவை என்று விமர்சித்தாலும், அந்தத் தத்துவத் தேடலையே அவரது தனித்துவமாகவும், அவரது மனிதநேயத்தின் அடையாளமாகவும் சுட்டுகின்றனர்.

டால்ஸ்டாயின் படைப்புகளின் மையமாக இருப்பது "வாழ்க்கை நெறி" (moral life). ஆகும். மனிதன் எப்படி வாழ வேண்டும்?, எது சரி?, எது தவறு? என பல கேள்விகள் அவரது நாவல்களில் தொடர்ந்து எழுகின்றன. "சமூகத்தில் மதிப்பைப் பெறுவது, பதவி, பணம் ஆகியவை உண்மையான வாழ்க்கை வெற்றியா?" என்ற சந்தேகத்தை அவர் தொடர்ந்து எழுப்புகிறார். அன்னா கரீனினா போன்ற நாவலில், சமூகக் கட்டுப்பாடுகளை மீறிய ஒருவரை சமூகம் எவ்வாறு தண்டிக்கிறது என்பதையும், அதே சமூகம் உள்ளுக்குள் எவ்வளவு போலியாக உள்ளது என்பதையும் அவர் காட்டுகிறார். இங்கே இன்னொன்றையும் அவர் சொல்கிறார், சமூகக்

கட்டுப்பாடுகளை மீறுவது என்பதாலே அது முற்போக்காக அமைந்துவிடாது என்கிறார்.

மரணம் மற்றும் வாழ்க்கையின் உள்ளார்ந்த அர்த்தம் என்பது டால்ஸ்டாயின் மற்றொரு முக்கியமான மையக்கரு. "இவான் இல்யிச்சின் மரணம்" (The Death of Ivan Ilyich) என்ற படைப்பில், ஒரு சாதாரண எளிய மனிதன் தனது இறுதிக் காலத்தில்தான் வாழ்வின் உண்மையைப் புரிந்து கொள்வதை டால்ஸ்டாய் காட்டுகிறார். பதவி, சமூக மரியாதை ஆகியவற்றுக்காக மட்டும் வாழும் வாழ்வு உண்மையில் வெறுமையானது என்பதையும் உணர்த்துகிறார்.

டால்ஸ்டாய் போர் மற்றும் வரலாற்றைப் பற்றியும் தனித்த பார்வையைக் கொண்டிருந்தார். போரும் அமைதியும் நாவலில், போர்களை வீரமாகச் சித்திரிக்கும் மரபை அவர் மீறுகிறார். போரில் உள்ள குழப்பம், பயம், உயிரிழப்பு, எளிய மனிதர்களின் பெரும் துயரங்கள், அபாயங்கள் ஆகியவற்றை அவர் மிக யதார்த்தமாக விளக்குகிறார். பெரிய பெரிய தலைவர்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்ற கருத்தை அவர் மறுக்கிறார். அதே வேளை, இலட்சக்கணக்கான மனிதர்களின் எளிய செயல்களே வரலாற்றைக் கட்டமைக்கின்றன என்பது அவரது அழுத்தமான பார்வை!

சமூகத்தில் உள்ள உயர்சாதி – தாழ்ந்தசாதி, ஏழை-பணக்காரர்கள் என்ற வேறுபாடுகள் டால்ஸ்டாயை மிகவும் பாதித்தன. அவரே உயர்குடியில் பிறந்தவராக இருந்தாலும், அவர் அந்த வாழ்க்கையின் இருண்ட பக்கங்களைக் கடுமையாக விமர்சித்தார். உயர்சாதி மக்களின் வாழ்க்கை பகட்டாக இருந்தாலும், உள்ளுக்குள் அது அர்த்தமற்றது என்றுதான் அவர் தொடர்ந்து காட்டிவந்தார். அதே நேரத்தில், விவசாயிகளின் எளிய, அன்றாட வாழ்வில் ஓர் ஒழுங்கு, நேர்மை, விடா முயற்சியும் உழைப்பும் இருப்பதாக அவர் நம்பினார். ஆனால் அவர்களை முழுமையாக உயர்த்திப் பேசவில்லை; மாறாக, எளிமை ஒரு நல்ல வாழ்க்கை வழி என்பதை மட்டும் காட்டுகிறார்.

டால்ஸ்டாயின் எழுத்தின் வெளிப்பாட்டு உத்தி மிகவும் முக்கியமானது. அவர் கதாபாத்திரங்களின் மன ஓட்டத்தை (inner thoughts) மிக நுணுக்கமாக வெளிப்படுத்துகிறார். ஒரு மனிதன் உள்மனதில் என்ன நினைக்கிறான், என்ன மாதிரியான மனக்குழப்பத்தில் இருக்கிறான், எந்த முடிவையும் எடுக்க முடியாமல் ஏன் தவிக்கிறான் என்பதையெல்லாம் வாசகர் நேரடியாக உணரும் வகையில் அவர் எழுதுகிறார். இதனால் அவரது கதாபாத்திரங்கள் உயிரோட்டமாக, நேரடியாக நம்மோடு உரையாடுவதுபோவே தோன்றுகிறது.

அவர் ஒரு கதையை ஒரே கோணத்தில் மட்டும் சொல்வதில்லை; பல பார்வைகளில் சொல்கிறார் எனலாம். இதனால், "இதுதான் உண்மை", "இது பொய்" என்று எதையும் நேரடியாகச் சொல்வதில்லை, அவரவருக்கு அவரவது நியாயங்கள். இது வாழ்க்கையின் சிக்கலான தன்மை. இதை அவர் தெளிவாகவே உணர்த்துகிறார்.

டால்ஸ்டாயின் மொழிநடையைப் பற்றிச் சொல்ல வேண்டும் எனில் அது மிகவும் எளிமையானது. அலங்காரமான சொற்கள், கவித்துவ நடையை அவர் அதிகம் பயன்படுத்தவில்லை. நேரடியான, தெளிவான மொழியில் அவர் எழுதுகிறார். உண்மையை மறைக்காமல் வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். உண்மைக்கு அலங்காரம் எதற்கு என்று நினைத்தார். இது அவருடைய எழுத்திற்கு வலிமை சேர்த்தது!.

அவருடைய காலத்தில் எழுதிய பிற எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டால், டால்ஸ்டாய் தனித்தன்மையுடன் தெரிகிறார். ஃபியோதர் தோஸ்தோயெவ்ஸ்கி மனித மனத்தின் தீவிரமான பக்கங்களை, குற்ற உணர்வு, பாவம், புண்ணியம், கடவுள் நம்பிக்கை போன்றவற்றை ஆழமாக எழுதினார். டால்ஸ்டாய் அன்றாட வாழ்க்கையில் மனிதன் எப்படி ஒழுக்கநெறியுடன் வாழ வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார். இவான் துர்கனேவ் சமூகத்தை அமைதியாகக் கவனித்து எழுதினார்; ஆனால் டால்ஸ்டாய் சமூகத்தை நேரடியாக விமர்சித்து மாற்ற வேண்டும் என்று நினைத்தார். அதற்கான ஆயுதமாகத்தான் அவர் எழுத்தைக் கருதினார்.

லியோ டால்ஸ்டாய் 1910ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று, தனது 82-ஆவது வயதில் உயிரிழந்தார். யாஸ்னயா பொல்யானாவை விட்டு வெளியேறிய அவர், பயணத்தின்போது நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டார். பின்னர் ரஷ்யாவின் அஸ்தாபோவோ ரயில் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார். அங்குள்ள ரயில் நிலையத் தலைவர் இல்லத்தில்தான் அவரது இறுதி நாட்கள் கழிந்தன. அவருடைய நெருங்கிய சீடரும் நண்பருமான விளாடிமிர் செர்ட்கோவ் அவரைச் சந்தித்து, இறுதி நேரம் வரை அவருடன் இருந்தார். உடல்நிலை மோசமடைந்த நிலையிலும், டால்ஸ்டாய் வாழ்க்கை, மரணம், இறைநம்பிக்கை, மனிதநேயம் போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். 1910 நவம்பர் 20 அன்று அதிகாலை அவர் அஸ்தாபோவோவில் உயிரிழந்தார். அவரது வாழ்க்கையின் இறுதி தருணங்களும், அவர் வாழ்நாள் முழுவதும் தேடிய உண்மை, அன்பு, எளிமை, அறம் ஆகியவற்றை நினைவுபடுத்துவனவாக அமைந்தன.

●

கட்டுரையாளர்: பேராசிரியர் & எழுத்தாளர்


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்



ரூ 300/-




ரூ 160/-




ரூ 140/-



ரூ 390/- (மூன்று தொகுதிகள்)



ரூ 100/-



ரூ 225/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

காதல், இயற்கை, புரட்சி மற்றும் வெங்காயம்

பாப்லோ நெருடா வாழ்வும் கவிதைகளும்





அஜயன் பாலா

பாப்லோ நெரூடா (1904–1973) சிலியின் மகத்தான கவிஞர். 20ஆம் நூற்றாண்டின் உலகக் கவிதையில் காதல், இயற்கை, அரசியல், மனிதத் துயரம் ஆகிய அனைத்தையும் ஒரே கவித்துவ உலகமாக மாற்றியவர்.

அவரது இயற்பெயர் நெப்தாலி ரிக்கார்டோ ரெயெஸ் பாசோஆல்தோ. 1904 ஜூலை 12 அன்று சிலியின் பர்ரால் நகரில் பிறந்தார். சிறுவயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார். பின்னர் தனது எழுத்துக்காக பாப்லோ நெருடா என்ற பெயரை ஏற்றுக்கொண்டார்.

1923-இல் வெளியான 'Book of Twilights' அவரது கவிதைத் தொகுப்பு அவரைத் தன் 19-ஆம் வயதிலேயே உலகப் புகழ்பெற்ற கவிஞராக்கியது. குறிப்பாக காதல், உடல், நினைவு, பிரிவு ஆகியவற்றை இயற்கையின் காட்சிகளோடு இணைக்கும் அவரது மொழி தனித்துவமானது. அவரது இரண்டாம் கவிதைத் தொகுப்பு 'Twenty Love Poems and a Song of Despair' பெரிய வெற்றியைப் பெற்றது. 20-ஆம் நூற்றாண்டில் கோடியே அதிகமாக விற்ற கவிதைத் தொகுப்பு. ஆனால் அவருக்குக் கிடைத்த சம்பளம் மிகக் குறைவு. சிலி நாட்டில் சாண்டியாகோ

பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த அவர் பசியால் அவதிப்பட்டார். தன் ஒல்லியான உடலை மறைக்க ஒரு பெரிய கோட் மற்றும் பெரிய தொப்பி அணிந்து கொண்டார்.

வெளிநாட்டுத் தூதரகப் பணி

இலத்தீன் அமெரிக்காவில் எழுத்தாளர்களுக்கு அதிகாரிகள் மரியாதை கொடுத்தனர். பல்கலைக்கழகத்தில் இருந்த உயர்குடிக் கிளாஸ்மேட் நெரூடாவை வெளிவிவகார மந்திரியைச் சந்திக்கச் செய்தார். அவர் நெரூடாவின் கவிதைகளைப் படித்திருந்தார். உடனே வெளிநாட்டுப் பணி ஒன்றை வழங்கினார். பல நகரப் பெயர்களைச் சொன்னார். நெரூடாவுக்கு ஒன்றுமே தெரியாது; "ரங்கூன்" என்ற பெயரை மட்டும் கேட்டார். அதையே அவர் தேர்ந்தெடுத்தார்—அந்த இடம் எங்கே இருக்கிறது என்பதே தெரியாமல்.

1927-இல் அவர் பர்மா (இன்றைய மியான்மர்) நோக்கிப் புறப்பட்டார். முழுவதும் புதிதான, அந்நியமான உலகம். பின்னர் இரண்டு வருடங்கள் ரங்கூனிலும், பின்னர் இலங்கை மற்றும் ஜாவா (இந்தோனேசியா) தூதரகப் பணியிலும் இருந்தார்.

1927 நவம்பர். ரங்கூனில் சிலி தூதரக அதிகாரியாக இருந்த இளம் நெரூடா, தனது நண்பர் ஆல்வரோ ஹினஜோசாவுடன் வங்காள விரிகுடாவைக் கடந்து மதராஸ் வந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்துமூன்று.

அவர் சென்னைக்கு வந்தபோது இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டிருக்கலாம். (அடுத்த ஆண்டு 1928 கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலும் அவர் கலந்துகொண்டிருக்கிறார்).

மதராஸ் அவருக்கு ஒரு நகரமாக மட்டும் தெரியவில்லை; அது முற்றிலும் புதிய உணர்வுகளின் உலகமாக இருந்தது. மெரினாவின் நீண்ட கடற்கரை, வெப்பமான சூரியன், ரிக்ஷா, இந்தியப் பெண்களின் வண்ணமயமான ஆடைகள், தெருக்களில் தெரியும் வறுமை—எல்லாமே அவரது கவனத்திற்குள் வந்தன.

பாப்லோ ஆசியாவில் இருந்தபோது அவருடைய மனநிலையில் என்ன இருந்தது என்பதைச் சொல்லும் முக்கிய ஆதாரம்—அர்ஜென்டினா விமர்சகர் ஹெக்டர் ஈண்டிக்கு அவர் எழுதிய கடிதங்கள். இளம் வயதில் தொலைதூர தேசத்தில் இருந்தது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. கடிதங்களில் அவர் தனது உள்ளக் குழப்பங்களை வெளிப்படுத்தினார். அவரை வெகுவாகப் புண்படுத்தியது—அங்குள்ள குறுகிய மனப்பான்மையுள்ள குடியேற்ற அதிகாரிகள், "உள்ளூர் மக்கள் இருக்கும் இடங்களுக்கு, போகாதீர்கள்" என்று எச்சரித்தார்கள். நெரூடா அப்படியான இனவெறியை வெறுத்து தனிமையைத் தேர்ந்தெடுத்தார்.

அதிக வேலை இல்லாததால் ஸ்பானிஷ், பிரெஞ்சு கவிதைகளையும், ப்ரூஸ்ட் நாவல்களையும் நிறையப் படித்தார். தொடர்ந்து கவிதைகளும் எழுதினார். ரெசிடென்ஸ் ஆண் எர்த் என வந்த கவிதைகள் அவரது முன்னைய காதல் கவிதைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை; தனிமை, குழப்பம் நிறைந்த கனவுபோன்ற உவமைகள்.

ரங்கூனில் அவர் ஜோஸி ப்ளிஸ் என்ற பர்மியப் பெண்ணுடன் வாழ்ந்தார். அவள் மிகுந்த பாசமும் பயங்கரமான பொறாமையும் கொண்டவள். சில நேரங்களில் கத்தியுடன் அவரைச் சுற்றி நடந்து கொல்வேனா இல்லையா என சிந்தித்ததை நெரூடா நினைவுகளில் எழுதியுள்ளார். இவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கும் நேரத்தில், அவருக்குத் திடீரென இலங்கைக்கு மாற்று ஆணை வந்தது. நெரூடா இரவில் ஓடி தப்பினார். அவரை விட்டு செல்லும் துயரத்தில் தி விடோவர்ஸ் டாங்கோ என்ற புகழ்பெற்ற கவிதையை எழுதினார்.

இலங்கையின் வெல்லவட்டை பகுதியில் கடற்கரைக்கு அருகே ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து, 'ப்ராம்பி' என்ற உதவியாளரை வைத்துக் கொண்டார். நாய், "கிரியா" என்ற முயல்-தேள் ஆகியவை குடும்பமாக இருந்தன. அங்குள்ள மீனவர்கள், கடற்கரை, கிராமப்புற நடைப்பயணங்கள் அனைத்தும் அவருக்குப் புதுவித அதிசய உலகமாக இருந்தது.

ஆனால், பிரிட்டிஷ் அதிகாரிகளின் அகந்தை இங்கும் அவரை எரிச்சலடையச் செய்தது. ஒரு நாள் நாட்டுப்புற இசை கேட்டுக் கவரப்பட்டு தாமதமாக விருந்துக்குச் சென்றபோது, "உள்ளூர்க்காரர்கள் இசை பாடுவார்களா?" என்று அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

இலங்கையில் அவர் லயனல் வென்ட், ஜார்ஜ் கீட் உள்ளிட்ட செழித்து வந்த யூரேஷியக் கலைஞர்கள் குழுவுடன் நெருக்கமாக இணைந்தார். அவர்களது நவீன கலை-இலக்கிய உலகம் நெரூடாவை வளர்த்தது. ப்ரூஸ்ட், ஜாய்ஸ், எலியட், லாரன்ஸ் போன்ற ஐரோப்பிய நவீன எழுத்தாளர்களை முதன்முறையாக வாசிக்க வாய்ப்பு கிடைத்தது.

இலங்கையில் வன்முறையுடன் கூடிய ஒரு சம்பவத்தையும் தனது நினைவுகளில் விவரித்தார்—அதில் ஒரு ஏழைத் தமிழ்ப் பெண்ணை பாலியல் வற்புறுத்திய சம்பவத்தைத் தானே ஒப்புக்கொள்கிறார். இதுவே பின்னாளில் அவரது நற்பெயருக்கு பெரிய களங்கம் ஆகியது.

கொழும்பில் அவர் நிலையான வாழ்க்கையை வாழ்ந்தபோது, திடீரென ரங்கூன் பெண் ஜோஸிப்ளிஸ் மீண்டும் வந்தார். அவள் வீட்டு முன்பு கூடாரம் போட்டு, பிரச்சினை செய்து, கத்தி எடுத்தார். இறுதியில் அண்டை வீட்டுக்காரர் ஒருவரின் உதவியால் அவளைத் தாய்நாட்டுக்குத் திரும்புமாறு சமாதானப்படுத்தினார். கப்பலில் ஏற்றும்போது அவள் காலில் விழுந்து அழுத காட்சியை நெரூடா மறக்க முடியவில்லை என்று எழுதினார்.

1930க்குப்பின் அவர் ஸ்பெயினில் தூதரக அதிகாரியா குடியேறிய போதுதான் அவர் வாழ்க்கையின் மிகப் பெரிய திருப்பம் உண்டானது.

அதுவரை காதல் இயற்கை மற்றும் தனி மனித அனுபவங்களை மட்டுமே வெளிப்படுத்திவந்த அவரது கவிதைவெளி போர் அரசியல், வறுமை, துரோகம், கோபம் என சமூக பிரச்சினைகளை உள்ளடக்கியதாக இங்குதான் மாறத் துவங்கியது.

அப்படி அவர் மாறக் காரணம், ஒரு கவிஞனின் மரணம்.

அந்தக் கவிஞர் பிரெர்ரிக் கார்சியா லோர்கா

உலகப் புகழ்பெற்ற ஸ்பானியக் கவிஞரான லோர்காவைச் சந்தித்த கிஅணத்திலிருந்து அவரது கவிதை உலகில் அரசியலும் பிரவேசிக்க வித்துவங்கியது

1936 ஜூலையில் ஸ்பானிஷ் உள்நாட்டுப் போர் தொடங்கியது. லோர்கா குடியரசு ஆதரவு அறிவுஜீவியாகவும், இடதுசாரி கலாசார வட்டாரத்துடன் நெருக்கமானவராகவும் பார்க்கப்பட்டார்.1936 ஆகஸ்ட் 16 அன்று Granada-வில் தேசியவாதப் படைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, ஆகஸ்ட் 18 அல்லது 19, 1936 இரவில், லோர்கா சுட்டுக் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரது உடல் கண்டுபிடிக்கப்படவில்லை. (அதனால் அவரது மரணத்தின் சரியான இடம் மற்றும் சில விவரங்கள் இன்றும் வரலாற்று விவாதத்திற்குரியவை.)

லோர்கா இறந்த செய்தி நெரூடாவைப் பேரிடியாகத் தாக்கியது. அதன் பிறகு அவரது அரசியல் நிலைப்பாடு மேலும் தீவிரமானது. அவர் ரிபப்ளிக்குக்கு ஆதரவாக செயல்பட்டதால், சிலி அரசு அவரது கன்ஸ்யூலர் பதவியை நீக்கியது. பின்னர் அவர் ஸ்பெயினை விட்டு வெளியேறினார்.

லோர்காவின் மரணம் நெரூடாவின் கவிதைக்கு ஒரு தீர்மானமான திருப்புமுனையாக அமைந்தது.

நான் பூக்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும்போது, என் நண்பன் கொல்லப்பட்டிருக்கிறான். இனி நான் பூக்களை மட்டும் எப்படி எழுத முடியும்?

லோர்காவின் கொலைக்குப் பிறகு, 1936 செப்டம்பர் 24 அன்று, நெரூடா இறந்த போராளிகளின் தாய்மார்களைப் பற்றி ஒரு கவிதையை வெளியிட்டார். "Explico algunas cosas". "I Explain. Few Things"கவிதையின் தொடக்கத்தில் வாசகர் நெரூடாவிடம் கேட்பது போல:

"உங்கள் பழைய பூக்கள் எங்கே?

உங்கள் மழை எங்கே?

உங்கள் பழைய கவிதை உலகம் எங்கே?"

என்று கேட்கிறது.

அதற்குப் பதிலாக நெரூடா:"நான் உங்களுக்கு என்ன நடந்தது என்று சொல்கிறேன்."என்று போரின் நடுவுக்குள் அழைத்துச் செல்கிறார். மாட்ரிட்டில் அவர் வாழ்ந்த வீடு. பூக்கள், குழந்தைகள், நண்பர்கள், கவிஞர்கள் நிறைந்த வீடு. பின்னர்:குண்டுவீச்சு.தீ.ரத்தம்.மரணம்.

அதாவது, கவிதையின் அழகான உலகத்தை போர் வந்து நொறுக்குகிறது. அந்தக் கவிதை நெரூடாவின் தனிப்பட்ட கவிதை உலகம் ஏன் அரசியல் கவிதையாக மாறியது என்பதற்கே ஒரு விளக்கம்.

ஸ்பெயின் அனுபவத்திற்குப் பிறகு நெரூடாவின் அரசியல் ஈடுபாடு இன்னும் ஆழமானது.அவர் சிலி கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்தார்; செனட்டராகவும் இருந்தார். அதற்குப் பிறகு நெரூடா இன்னொரு எதிர்பாராத மாற்றத்தைச் செய்தார். அவர் பெரிய அரசியல், வரலாற்று விஷயங்களை மட்டும் எழுதவில்லை. ஒரு வெங்காயத்தைப் பற்றியும் கவிதை எழுதினார்.

ஒரு தக்காளியைப் பற்றியும், உப்பைப் பற்றியும், சாக்ஸைப் பற்றியும், இவை Odas elementales. Elemental Odes தொகுப்புகளின் உலகம். இங்கே நெரூடாவின் கவிதை:

"பெரிய வரலாற்றிலிருந்து சிறிய பொருட்களின் அற்புதத்திற்குத் திரும்புகிறது."

ஒரு சாதாரண, பொருளை எடுத்துக்கொண்டு அதில் இருக்கும் மனித வாழ்க்கையின் அழகைக் காட்டுகிறார். இது அவரது கவிதையின் இன்னொரு அற்புதமான மறுபிறப்பு. நெரூடாவின் மிகப்பெரிய சாதனை என்னவென்றால், தனிப்பட்ட காதல் கவிதையையும் சமூகக் கவிதையையும் ஒன்றுக்கொன்று எதிரானதாக அவர் பார்க்கவில்லை.

அவரிடம் காதலியின் உடல் ஒரு நிலப்பரப்பாகிறது. கடல் ஒரு நினைவாகிறது. திராட்சை ஒரு வரலாறாகிறது. ரொட்டி ஒரு மனித உரிமையாகிறது. தொழிலாளியின் கை ஒரு கவிதையின் பொருளாகிறது. இதனால் அவரது கவிதை "நான்" என்பதிலிருந்து "நாம்" என்ற பரந்த மனித அனுபவத்துக்குச் செல்கிறது. அவரது மிகப் பெரிய படைப்புகளில் ஒன்று கேண்டோ ஜெனரல்(1950). இது ஒரு தனி மனிதனின் கவிதை அல்ல. லத்தீன் அமெரிக்காவின் வரலாறு, நிலம், பழங்குடி மக்கள், காலனித்துவம், சுரண்டல், புரட்சி ஆகியவற்றை மிகப்பெரிய காவியத் தோற்றத்தில் பதிவு செய்யும் படைப்பு.

மச்சு பிச்சுவைப் பற்றிய அவரது கவிதைகள் குறிப்பாக புகழ்பெற்றவை. பழமையான கற்களையும் இறந்த நாகரிகத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் கவிஞன், இறந்த மனிதர்களின் குரலை மீண்டும் கேட்க முயல்கிறான்.

நெரூடாவின் அற்புதமான தன்மை. மிகச் சாதாரணமான பொருட்களையும் பிரபஞ்ச அளவுக்கு உயர்த்துவது. வெங்காயம், தக்காளி, ரொட்டி, உப்பு, சாக்ஸ், கடல், பூனை, மது...இவையெல்லாம் அவரது கவிதையில் உயிர்பெறுகின்றன.அவரது 'ஓட்ஸ் டூ காமன் திங்ஸ்' தொகுப்பில் அன்றாடப் பொருட்களுக்கே கவிதை எழுதுகிறார்.அதனால் அவரது கவிதை நமக்குச் சொல்வது:கவிதைக்கு அசாதாரணமான பொருள் தேவையில்லை.

அசாதாரணமான பார்வைதான். நெரூடா ஒரு சிறிய உணர்வைக் கூட மிகப்பெரிய காட்சியாக மாற்றக்கூடியவர். அவரது கவிதைகளில் ஓசை மிக முக்கியம். சில நேரங்களில் குறுகிய வரிகள். சில நேரங்களில் நீண்ட, மூச்சு விடாமல் செல்லும் வரிகள்.மீண்டும் மீண்டும் வரும் சொற்கள். ஒலியின் ஏற்றத் தாழ்வுகள்.இதனால் அவரது கவிதையை வாசிப்பதைவிட கேட்பது போல உணர முடிகிறது. பிற்பாடு வயது அதிகரித்தாலும் நெரூடாவின் கவிதை காய்ந்து போகவில்லை. காதல், நினைவு, உடல், கடல், வீடு, மரணம் ஆகியவை மீண்டும் மீண்டும் வந்தன. ஆனால் இப்போது அந்தக் காதல் ஓர் இளைஞனின் காதல் அல்ல. அது வாழ்ந்த வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் மனிதனின் காதல். அவருடைய கவிதையில் தனிப்பட்ட நினைவுகளும் உலக வரலாறும் ஒன்றாகக் கலக்கத் தொடங்கின. 1969-இல் சிலி கம்யூனிஸ்ட் கட்சி நெரூடாவை அதிபர் வேட்பாளராக முன்மொழிந்தது.ஆனால் அவர் தனது நண்பரான சல்வாடர் ஆலெண்டி-க்கு ஆதரவாக விலகினார். ஆலெண்டி வெற்றி பெற்று 1970-ல் ஆட்சிக்கு வந்தார்.

நெரூடா பின்னர் பிரான்சுக்கான சிலி தூதராக நியமிக்கப்பட்டார். 1971-ல் பாப்லோ நெரூடா வுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது அவர் வெறும் காதல் கவிஞராக இல்லை.

அவர்:

காதலின் கவிஞர்

போரின் சாட்சி

லத்தீன் அமெரிக்காவின் குரல்

அரசியல் கவிஞர்

சாதாரண பொருட்களின் கவிஞர்

மனித நினைவின் கவிஞர்

என்ற பல முகங்களைக் கொண்டிருந்தார்.அவருடைய நோபல் பரிசு மேற்கோள் அவரது கவிதை ஒரு கண்டத்தின் 'டெஸ்டினீ அண்ட் ட்ரீம்ஸ்'-ஐ உயிர்ப்பிப்பதாகக் குறிப்பிட்டது. 1973 —அவரது நண்பரும் சிலியின் ஜனாதிபதியுமான சல்வாடர் ஆலெண்டி, செப்டம்பர் 11 இராணுவப் புரட்சியில் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். நெரூடா அப்போது தீவிரமாக நோயுற்றிருந்தார்.அவரது வீடுகள் இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்டன என்று நெரூடா ஃபவுண்டேஷன் என்னும் அமைப்பு பதிவு செய்துள்ளது.

செப்டம்பர் 23, 1973. சாண்டியாகோவில் நெரூடா இறந்தார்.

அவரது மரணம் ஆலெண்டி-வின் வீழ்ச்சிக்கு வெறும் 12 நாட்களுக்குப் பிறகு நிகழ்ந்தது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்.

தகவமைத்துக் கொள்ளுதலே வாழ்க்கை

நாவல் : ஸ்மைல் ப்ளீஸ்
ஆசிரியர் : சுப்ரபாரதிமணியன் | வெளியீடு : NCBH



- விசித்திரக்கவி (எ) லோகேஷ்வரன்

சுப்ரபாரதிமணியன் அவர்கள் எழுதிய 'ஸ்மைல் ப்ளீஸ்' என்கிற தலித் நாவலை ஓர் மழைக்கால இரவொன்றில் மின்மினிப் பூச்சிகள் வட்டமிடும் தருணத்தில் வாசிக்கத் துவங்கிய ஓரிரு பக்கங்களில் புரிந்துகொண்டேன். தீண்டாமை இந்நாட்டில் எப்படி பரவிக் கிடந்தது என்பதையும் தலித்தினர் மீது இந்த சமுதாயம் பல்வேறு கால கட்டங்களில் தொடர்ந்து காட்டி வரும் துன்புறுத்தல்களையும் அதனால் அவர்கள் படுகிற வேதனைகளையும் தனக்கே உரித்தான மெல்லிய சொற்களால் வாழைப்பழத்தில் ஊசியினை ஏற்றுவது போல் வாசகர்களின் இதயத்தில் ஏற்றுகிறார்.

நாவலின் நாயகனான கிருஷ்ணனை அறிமுகம் செய்த விதத்திலிருந்து கதைத் தொடங்குகிறது. மறைமுகமாக அவன் மீது செலுத்தப்படும் சாதிய ஆதிக்கமும் அவன் எதிர்கொள்ளும் மனோபக்குவத்தையும், வாழ்க்கையின் வேகத்திற்கும் அது ஏற்படுத்தும் காலம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் மனிதனே தன் வாழ்க்கையின் பரிபூரணத்தை வாழ்ந்து கழிக்க முடியும் என்பதை ஆசிரியர் இந்நாவலின் வழியாகக் கடத்துகிறார்...

கிருஷ்ணனின் பாட்டனார் கம்யூனிஸ்ட் தோழர் என்பதாலோ அவரின் வளர்ப்பு கிருஷ்ணன் என்பதாலோ கிருஷ்ணன் தான் கடக்கும் ஒவ்வொரு மனிதரையும் காலத்தினையும் அவற்றிலிருந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ள மறைமுகமாகப் போராடியிருக்கிறான்...

செகந்திராபாத் மோண்டோ மார்க்கெட் மற்றும் க்ளாக் டவர் ஹைதராபாத்திலிருந்து கேரளாவுக்கும் நம்மைப் புகைப்படக்கருவியோடு ஆசிரியர் அழைத்துப் போகிறார்...

என்னைப் பொருத்த வரையில் கதையோடு கதையின் களத்தையும் அச்சு பிசகாத வண்ணம் தன் சொற்களாலும் கூறிய சிந்தனையாலும் வெளிப்படும் நாவல்களே காலத்தின் ஓட்டத்தில் நிலைப்பவை. அத்தகைய தன்மையினை இந்நாவலுக்குத் தந்திருக்கிறார் ஆசிரியர்...

செகந்திராபாத் மோண்டோ மார்க்கெட் மற்றும் க்ளாக் டவர் ஹைதராபாத்திலிருந்து கேரளாவென மனிதர்களோடு எங்கிலும் உரையாடும் இடங்களில் எல்லாம் சமூகத்தை நோக்கிய சின்ன சின்ன விமர்சனமும் அறிவுப்பூர்வமாக தன் எழுத்து மூலமாக கிண்டலும் செய்துபோகிறார். அவர் தன் எழுத்து மூலமாக விவரிக்கும் ஒவ்வொரு சூழ்நிலையின் அமைப்பும் நாவலை வாசித்து முடித்த பின்னும் நினைவுகளில் மின்னுவதே இந்நாவலின் வெற்றியாகிறது.

நாயகனின் மனப்போக்கை தான்தோன்றிக் குணம் கொண்ட தன் நண்பர்கள் மற்றும் இயலாமைகளுக்கு இடையில் சிதையாமல் கடத்தியிருப்பது வாசகர்களின் மனதில் பெரும் வரவேற்பைப் பெரும் என்பதில் எனக்கு ஐயமேதுமில்லை..

இதை போன்ற பல உணர்வுபூர்வமான படைப்புகள் தந்து கொண்டிருக்கும் ஆசிரியர் சுப்ரபாரதிமணியன் மற்றும் என்சிபிஎச் நிறுவனத்திற்கும் என் அன்பும் நன்றிகளும்...

●

நியூ செஞ்சுரி புத்க நிறுவனத்தின் வெளியீடுகளான ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் புதிய நூல்கள்




ரூ 145/-




ரூ 130/-



ரூ 125/-



ரூ 135/-



ரூ 165/-




ரூ 120/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.



குணங்குடி மஸ்தான் சாகிபின்
இறைத்தேடலும் சமய ஒருமைப்பாடும்



பேராசிரியர் உ. அலிபாவா

'இஸ்லாமியச் சித்தர்' என்றும், சூஃபி ஞானி என்றும் அழைக்கப்படும் குணங்குடி மஸ்தான் சாகிபு இராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு அருகில் 16 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் ஹிஜ்ரி 1207 இல் (கி.பி. 1792) நயினார் முகம்மது சாகிபிற்கும், பாத்திமா என்பாருக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். தந்தை, பாட்டனார் எனக் குடிவழிப் பெருமையுடையவர் இவர்.

மஸ்தான் சாகிபு ஆர்வத்துடன் திருக்குர்ஆன் ஓதிச் சமய சாத்திரங்களையும் இலக்கண, இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்து விளங்கினார்.

திருமணம் செய்யப் பெற்றோர் விரும்பியபோதும் மஸ்தான் சாகிபு விரும்பவில்லை. சிற்றின்பத்திற்கிடமான மனைவி பேரின்பக் கடலான பரம்பொருளை அடைவதற்குத் தடையாக இருப்பாள் என்று கருதினார். இறையருளை அடைதற்குரிய மெய்யறிவு பற்றிய உயர் கல்வியினைப் பெற விழைந்தார். அவ்வாறே செய்தார்.

நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்த மஸ்தான் சாகிபு ஹிஜ்ரி 1228இல் துறவறம் மேற்கொண்டார் என்பர். பின்னர் சூஃபி ஞானியாக முற்பட்டார். பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தினார்.

'நான்' என்பதை அழித்து இறைவனுடன் ஒன்றிவிடும் அத்துவித நிலையை விரும்பினார். இறைக்காதலால் கவரப்பட்ட மஜ்தூப் ஆகவும், அந்தத் தெய்வீகப் போதையில் வெறியேறிய பித்தராகவும் உலக நடை நீங்கித் தவத்தில் ஈடுபட்டார். திருச்சிராப்பள்ளி, நாகூர் முதலிய பல்வேறு ஊர்களுக்குச் சென்ற மஸ்தான் சாகிபு இறுதியில் சென்னை சென்றார். சென்னையில் பாவா லெப்பைக்குரிய தோப்பில் வந்து தங்கினார்.

"சென்னையில் மஸ்தான் சாகிபைத் தொண்டியைச் சேர்ந்தவர் எனக் கருதினர். ஆதலின் இவர் தங்கித் தவம் புரிந்த பகுதியைத் தொண்டியார் பேட்டை என்றழைத்தனர். இதுவே தண்டையார் பேட்டை என்று வழங்கலாயிற்று" என்பர். இங்கு வாழ்ந்தபோதும் மஸ்தான் சாகிபு பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். மஸ்தான்

சாகிபு தச்சு வேலை செய்து அதனால் வரும் ஊதியத்தை ஏழை எளியவர்களுக்கு அளித்துள்ளார்" என்பார் மு.றா.மு. அப்துற்றகீம்.

மஸ்தான் சாகிபு தவச் சாலையை அடைந்து இறை வணக்கத்தில் ஈடுபட்டார். தொழுதும் நோன்பு நோற்றும் இறை உணர்வில் மூழ்கியிருந்தார். மஸ்தான் சாகிபின் தவச்சாலை, வாழ்க்கைச் சுமையால் மனம் வருந்தும் மக்களுக்கு அமைதி தரும் நிலையமாக விளங்கியது. மக்கள் இரவும் பகலும் திரண்டனர். அவர்களின் விருப்பங்கள் நிறைவேறி வந்தன. காணிக்கைகள் வந்த வண்ணமிருந்தன. மஸ்தான் சாகிபு அவற்றை ஏழை எளியோர்க்கு வழங்கினார். தவச்சாலைக்கு வருவோர் எல்லோர்க்கும் சமயப் பாகுபாடில்லாமல் அருளும் பொருளும் கொடுத்து வந்தார்.

இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார். நாற்பத்தேழு வயது நிரம்பிய போது இருவகை இறப்பும் இறந்து சுடரும் ஒளியும் போலப் பூரணத்தோடும் பரிபூரணம் அடைந்தார். ஹிஜ்ரி 1254 ஜமாதியுல் அவ்வல் மாதம் 14ஆம் தேதி திங்கட்கிழமை வைகறைப்போதில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். இவர் தவம் செய்து வந்த இடத்திலேயே இவரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆநந்தப்பத்து, முகியித்தீன் சதகம், முகியித்தீன் ஆண்டவர் கொச்சகம், அகத்தீசன் சதகம், மகுமூது நபியாண்டவர் துதி, தவமே பெறவேடுமெனல், குறையிரங்கியுரைத்தல், தவராஜ மகிமை சாற்றல், வானருள் பெற்றோர் மனநிலை உரைத்தல், ஆனந்தக் களிப்பு, நிராமயக் கண்ணி, பராபரக் கண்ணி, றகுமான் கண்ணி, எக்காலக் கண்ணி, கண்மணி மாலைக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீஸ்வரக் கண்ணி, கீர்த்தனைகள், ஆனந்தக்களிப்பு(2), எனப் பாடல்கள் எழுதியுள்ளார்.

இறையியல் சிந்தனை

இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் புலவரான குணங்குடி மஸ்தான் சாகிபு படைத்துப் பாதுகாக்கும் இறைவனுக்கு, ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று இஸ்லாம் வலியுறுத்தும் கோட்பாட்டையே போற்றிப் பாடுகின்றார்.

எல்லாவற்றையும் படைத்துப் பாதுகாத்து எல்லா உயிர்களுக்கும் வேண்டுவனவற்றையெல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மைக்குணம் கொண்டவன் இறைவன். அவனே எண் திசைகளிலும் நிறைந்து காணப்படுகின்றான். எல்லார்க்கும் அமுதளிப்பது போல் கல்லினுள்ளிருக்கும் தேரைக்கும் இறைவனே அமுதளிக்கிறான் என்று மஸ்தான் சாகிபு இறைவனின் காக்கும் இயல்பினைக் குறிப்பிடுகின்றார்.

இறைவனுக்குப் படைக்கும் தொழில் இயல்பானது. அடியவர்க்கு விரும்புவனவற்றை அளிப்பதில் கற்பகம் போன்றவன் என்றும் குறிப்பிடுகின்றார்.

இறைவன் இணையற்றவன். அவன் வல்லவர்களுக்கெல்லாம் வல்லவன். அவனையன்றி வேறு வல்லவன் இல்லை. இறைவனுக்கு ஈடாக வேறு எவரும் எதுவும் இல்லை. இறைவனுக்கு உவமை சொல்ல முடியாது. எல்லை நிலை சொல்ல முடியாத வல்லமை உடைய ஏகபராபரன் அவன். எங்கும் நிறைந்து இருப்பவன். உண்மையானவன். அவனைத் தவிர வேறு உண்மையான தெய்வம் இல்லை என்பதை உணர வேண்டுகிறார்.

இறைவனைத் தவிர யாராலும் மனிதர்க்கு உதவ இயலாது. இறைவனை மஸ்தான் சாகிபு பெண்ணாகவும் தம் பாடல்களில் காண்கிறார். பெண்மை ஈர்க்கும் சக்தியுடையது. அதேபோல் இறைவனும் ஈர்க்கும் சக்தியுடையவன். அதனால் தான் தன்னை ஆணாகவும் இறைவனைப் பெண்ணாகவும் கருதிப் பாடுகிறார். என்னை விட்டால் எத்தனையோ மாப்பிள்ளைமார் உனக்கு உண்டு. உன்னை விட்டால் வேறு பெண் எனக்கு உண்டோ மனோன்மணியே என்று கேட்கிறார்.

இதேபோல் இறைவனையன்றி வேறு எதுவுமே தனக்கு இல்லை என்று மஸ்தான் சாகிபு பாடுவது, இறைவனைத் தவிரப் புறந்தொழக் கூடாது என்கின்ற அவரது உணர்வையும் வெளிப்படுத்துகிறது.

இறைவனையன்றி ஓர் அணுவும் அசையாது. அவனே எல்லாப் பேறுகளிலெல்லாம் பெரும் பொருள். சர்வ பரிபூரணப் பொருள். அனைத்திலும் பெரியவன்.

இறைவன் வாக்கு மனம் எல்லாவற்றையும் கடந்தவன். எதற்கும் எட்டாதவன். அறிவுக்கு அப்பாற்பட்டவன். பரிபூரணம், வேதம் கடந்தவன். இரவு பகலற்றவன். பிறப்பு இறப்பு இல்லாதவன், முதலும் முடிவும் இல்லாதவன். போக்குவரவற்றவன். நேற்று இன்று நாளை என்று எல்லாக் காலத்திலும் எங்கும் நிறைந்து இருக்கக் கூடியவன்.

எல்லை நிலை சொல்ல முடியாத வல்லமை உடையவன். எங்கும் எப்போதும் நிறைந்து இருக்கும் ஞானோதயம் என்றெல்லாம் குறிப்பிடும் மஸ்தான் சாகிபு எங்கும் நிறைந்த இறைவனின் இயல்பினைப் பல பாடல்களிலும் குறிப்பிடுகிறார்.

'உயிர்க்குயிராய் என் உள்ளுள் உலாவிய நீ' என்று இறைவன் தன்னில் கலந்துள்ள நிலையைக் கூறுகிறார். எல்லாப் பொருளும் தானாய் இருக்கிறான் இறைவன், அவன் அருள் ஒளி. ஏக உருவானவன். எங்கும் நிறைகின்ற

பொருள். இறைவனையன்றி வேறு எதுவும் இல்லை. எல்லா இடங்களிலும் இறைவனைத் தவிர வேறு இல்லை என்றும் கூறுகிறார்.

இறைவனின் எங்கும் நிறைந்த இயல்பை ஊனாகி, ஊனில் உயிராகி, எவ்வுலகுமாகி, ஒன்றாகி, இரண்டாகி, உள்ளாகி, வெளியாகி, ஒளியாகி, இருளாகி, ஊருடன் பேருமாகி, கானாகி மலையாகி விலங்குமாகி, கங்குல்பகலாகி, மதியாகி, இரவியாகி, வெளிகண்ட பொருள் எவையுமாகி, நானாகி, நீயாகி, அவனாகி, அவளாகி, நாதமொடு பூதமுமாகி என்று இறைவனின் எல்லாமுமாகிய நிலையைப் பாடுகிறார்.

இறைவனின் பல்வேறு பெரும் பண்புகளுள் மேலானதாகிய அருட் பண்பினை மஸ்தான் சாகிபு பெரிதும் போற்றுகிறார். இறைவனை அருள்மயமாகவும், 'ஆனந்தம் சேர்க்கும் அருளாகவும் கங்கற்ற பேரருட் கங்கையாகவும்'; பேரருட் செல்வமாகவும், அருள் வெள்ளமாகவும், அருள் விரிவாகவும் வருணிக்கிறார்.

அருள் மிகுந்த இறைவன் மன்னிக்கும் பண்பாளனாகத் திகழ்கிறான். அன்பில் சிறந்த அன்னைபோல் பிறர் மன்னிக்க முடியாத குற்றத்தையும் இறைவன் மன்னித்தருள்வான். 'எத்தனை குற்றங்கள் அடியேன் செய்திருந்தாலும், பொறுத்தருள்வது இறைவனுக்கு அழகாகும்' என்று பாடும் மஸ்தான் சாகிபு மனித குலத்தின் ஆபத்தையும், அடிமை செய்யும் பாவத்தையும் நீக்கியருள வேண்டுகிறார்.

இஸ்லாமியக் கொள்கையின்படி இறைவன் எல்லாம் அறிந்தவனாவான், மஸ்தான் சாகிபு இறைவனை அறிவு மயமாகப் பாடுகிறார். இறைவனை இன்பப் பெருக்கு என இன்பமாகவும் கொண்டு பாடியுள்ளார். இறைவனின் ஆற்றல் பண்பையும் மஸ்தான் சாகிபு போற்றிப் பாடுகிறார். இறைவன் எவ்விதக் குறையுமற்றவன், மாசினின்றும் நீங்கிய தூய்மையாளன், நிறைவுடையவன் என்றும் மஸ்தான் சாகிபு எடுத்துரைக்கிறார்.

இறைவனின் தூய்மைப் பண்பை விளக்கிய மஸ்தான் சாகிபு அவனின் பரிபூரணமான நிறைவுப் பண்பையும் பூரணமே, பரிபூரணானந்தமே, காரணிக்கும் பூரணமே என்றெல்லாம் விளக்குகிறார்.

வாழ்வியல் சிந்தனை

சர்வ சமய சமரச நோக்குடைய இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் புலவரான குணங்குடி மஸ்தான் சாகிபின் பாடல்கள் எளிமையும் இனிமையும் உடையவை. அற்புதமான வாழ்வியல் நெறிமுறைகளைச் சுட்டக்கூடியவை.

நற்பண்பு மனிதனை உயர்த்தும்; தீயபண்பு கீழான நிலைக்குத் தள்ளும். அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய எல்லா நல்ல செயல்பாடுகளும் நற்பண்புகளாகும். மனிதர்களுடைய துர்க் குணங்கள் எல்லாம் போய் நற்குணங்கள் வரவேண்டும் என்று விரும்புகிறார் மஸ்தான் சாகிபு.

அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு என்பதை, 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார் வள்ளுவர். அன்பு எல்லோரிடமும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அன்பு இருந்தால் இவ்வுலகில் எல்லாவற்றையும் பெறலாம் என்கிறார்.

மனத்தளவில் குற்றம் இல்லாதவனாய் இருந்து யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாது, இயன்ற அளவு எல்லோர்க்கும் நற்காரியங்களைச் செய்வதே அறம். அறம் செய்வதற்கு வழங்காத கையை உடையவர்களைத் திட்டுகிறார். நற்செயல்களைச் செய்வதும் அறத்தின்பாற்பட்டதே. அதனால் அச்செயல்களைச் செய்ய வேண்டும். மனிதனுக்கு எல்லாவற்றையும் விட மேலானது, தேவையானது ஒழுக்கமாகும். எனவே அதனைக் கைக்கொள்ள வேண்டும் என்கிறார் மஸ்தான் சாகிபு.

மனித வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நன்னடத்தைகள் பல உள்ளன. அவற்றைப் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வு சிறப்புறும். இவற்றுள் தன்னைப் போல் அயலானையும் நேசித்தல் சிறந்த நன்னடத்தைகளுள் ஒன்றாகும். இதனை மஸ்தான் சாகிபு பின்பற்ற வேண்டுகிறார்.

உண்மையே மனிதனை வாழ்க்கையில் உயர்த்தும். எல்லா நிலைகளிலும் துணை நிற்கும். உண்மையைக் கடைப்பிடிக்காத கொடியவர்களை மஸ்தான் சாகிபு கண்டிக்கிறார்.

உழைப்பு மனிதனைச் சிறப்படையச் செய்யும்; வறுமையைப் போக்கும். அதனால் உழைப்பைப் பேண வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளாமல் தாழ்மையுடனும் பணிவுடனும் நடந்துகொள்பவனுக்கு மேலும் மேலும் உயர்வுகிட்டும். பிறர் நலம் பேண வேண்டும். பிறரை வஞ்சித்து வாழக் கூடாது. நாவடக்கம் வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் மனிதன் நீதி நேர்மைக்குப் புறம்பாகச் செயல்படக் கூடாது.

மனிதர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் அவர்களுக்கு எந்தத் தீங்கும் இல்லை. மனிதர்கள் தங்கள் செயல்களில் நடக்க வேண்டிய நல்வழியே. நேர்வழி. மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நன்னடத்தைகளில் தலையாயது நேர்வழி என்கிறார் மஸ்தான் சாகிபு.

மனிதனை மனிதன் நேசித்தலே மனித நேயம். அதிகாரத்தாலும் பணத்தாலும் மேலோங்கி இருப்பவர்கள் தங்களுடன் இருக்கும் சக

மனிதர்களை மதிப்பதில்லை. இதனை மஸ்தான் சாகிபு கடிந்துரைக்கிறார்.

ஒருவன் பொறுமையைக் கைக்கொண்டால் அவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் வெற்றி பெறலாம். பார்க்கும் போது மனம் மகிழாமல் முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அன்று. சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் உறவாக இருந்தால்தான் சமுதாயம் முன்னேற்றமடையும். எந்தத் துன்பமும் இராது. பிறருக்குத் தீமை செய்யக் கூடாது. தீயோருடன் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது. அநியாயம் செய்து வாழ்பவர்களின் வாழ்க்கை நிரந்தரமாக இருக்காது. மனிதர்கள் பாவம் செய்தல் கூடாது என்றெல்லாம் மஸ்தான் சாகிபு மனிதவாழ்க்கை மேம்பாட்டுக்கான வழிகளைக் கூறுகிறார்.

பொய் சொல்லுதல் கூடாது. பொய் சொல்லி வாழ்பவனின் வாழ்வு தாழ்வடையும். வஞ்சகம் செய்து வாழ்தல் இழிவானது. தான் என்கின்ற ஆணவம் மனிதனிடம் இருக்கக் கூடாது. மற்றவர்களின் பொருட்களை ஏமாற்றி மோசடி செய்யக்கூடாது. எல்லாச் செயல்களிலும் உண்மையாக ஈடுபடவேண்டும். மாறாக, நடிக்கக் கூடாது. பிறருக்குக் கெடுதலும் துரோகமும் செய்யக் கூடாது என்றும் மஸ்தான் சாகிபு வலியுறுத்துகிறார்.

வீண் பேச்சுப் பேசித் திரிபவனுக்கு வாழ்க்கையில் எந்தவிதமான முன்னேற்றமும் இருக்காது. வீண் பேச்சுப் பேசுவதும் தவறு. வீணர்களாக இருப்பதும் தவறு என்கிறார் அவர்.

பிறருக்கு நன்மை செய்து வாழ்வதற்குப் பதிலாகத் தீமை செய்து வாழ்வதும், பிறரது பொருளை அல்லது உழைப்பைச் சுரண்டி வாழ்வதும் நேரான பாதையல்ல.

சமுதாயத்தில் எல்லா நிலைகளில் வாழக்கூடிய மக்களும் சுயநலத்தைத் தான் பேணுகின்றனர். தன்னலம் பாராமல் பொதுநலம் பேணி வாழ மஸ்தான் சாகிபு வலியுறுத்துகிறார். சமுதாயத்தில் வாழும் மனிதர்களை அழிக்கும் செயல்களில் சோம்பலும் ஒன்றாகும். சமூகப் பொறுப்பு மிக்க புலவர்கள் எவரும் சோம்பலைப் பழிக்கத் தவறியதில்லை. மஸ்தான் சாகிபும் சோம்பலைப் பழித்துரைக்கிறார். வீணாகப் பொழுது போக்குபவர்களைக் கண்டிக்கிறார்.

மனித உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். யாரையும் புண்படுத்துதல் தகாது. தன்மானத்துடன் வாழ வேண்டும். நன்றியுணர்வுடன் இருப்பதுடன் பிறர் செய்த உதவிகளை நினைத்துப் பார்க்க வேண்டும். பழிவாங்கும் உணர்வு இருத்தல் ஆகாது. கோபம் கொள்ளுதல் கூடாது. பொறாமை கூடாது, பிறரைத் துன்புறுத்தக் கூடாது முதலான வாழ்வியல் சிந்தனைகளையும் குணங்குடி மஸ்தான் சாகிபு தம் பாடல்களில் முன்வைக்கிறார்.

சமரசச் சிந்தனை

இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் தமிழ்க் கவிஞர்களுள் மிகச் சிறந்தவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. சமயம் சார்ந்த மெய்யுணர்வுப் புலவரான இவர் சமரச நோக்குடையவராகவும் விளங்குகிறார்.

சூஃபி நெறிப் பாவலரான மஸ்தான் சாகிபு தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்ப சூஃபி நெறியைப் போற்றிப் பாடியுள்ளார். சைவ சித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் எனும் மூன்று உண்மைகள் உள்ளன. இதனை மஸ்தான் சாகிபு தமது பாடல்களில் எடுத்தாள்கிறார். இறை, ஆன்மா, உலகம் பற்றியும் கூறுகிறார்.

மஸ்தான் சாகிபு எல்லா மதங்களையும் சமரச நோக்கில் பார்க்கின்றார். மக்கள் அறியாமல் உன் தெய்வம், என் தெய்வம் என்று சண்டையிடுகின்றனர். ஆனால், எல்லாத் தெய்வங்களும் ஒன்றுதான். அவரவர் தெய்வமும் அவரவர் சமயமும் அவரவர்களுக்கு உரியவை. ஆகையால் யாருடைய சமயத்தையும் யாருடைய தெய்வத்தையும் குறைத்து மதிப்பிடலாகாது என்று சமயப் பொறையை வலியுறுத்துகிறார் மஸ்தான் சாகிபு.

மத பேதங்களைக் கூறிச் சமயத் தர்க்கம் புரிபவர்களை மதி கெட்டவர் என்று கடுமையாகச் சாடி, மதவெறியற்ற மதம் வேண்டும் என்று விரும்புகிறார்.

சமயப் பொதுமை பற்றிப் பாடிய மஸ்தான் சாகிபு இறைவனை அடையும் நெறிமுறைகளைப் போற்றுகிறாரே தவிர எந்தச் சமயத்துக் கடவுளரையும் குறிப்பிட்டுத் தாழ்த்திக் கூறவில்லை. எந்த ஒரு சமயத்தையும் குறைவாகக் கூறவில்லை. பிற சமயத்தவர் இறைவனைக் குறிக்கப் பயன்படுத்தும் பெயர்களையும் தம்முடைய பாடல்களில் ஆளுகிறார்.

சைவ சமயம் கூறும் அனைத்தும் கடந்த நிலையை மஸ்தான் சாகிபும் பாடுகிறார். இஸ்லாமிய மார்க்கச் சட்டப்படிப் படைக்கும் இறைவன் வேறு, படைப்பாகிய ஆன்மா வேறு. இரண்டும் கலப்பதை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் சூஃபிகள் இறைவனுடன் ஆன்மா கலப்பதாகக் கூறுவர். ஆன்மா ஆசாபாச மாசுகளை அகற்றித் தன்னை மறந்து இறைவனில் திளைக்கும் போது இறைவனில் ஒன்றி விடுகிறது. தன்னை இழந்த நிலையில் ஆன்மா, தான் மெய்ப்பொருள் என்னும் உணர்வைப் பெறுகிறது.

இவ்வுணர்வு சிறுபொழுதே தோன்றும் என்றும், தொடர்ந்து இருக்கவும் செய்யும் என்றும் மஸ்தான் சாகிபு குறிப்பிடுகின்றார்.

சர்வ சமய சமரசம் பாடும் மஸ்தான் சாகிபு இறைக் கோட்பாட்டிலும் இறைவன் ஒருவனே, அவன் உருவமற்றவன், நிகரற்றவன், முற்றும் அறிந்தவன், வல்லவன், அருளாளன், அன்பாளன், இன்பமானவன், கடந்தும் கலந்தும் உள்ளவன் என்று இறைவனின் தன்மைகளை விதந்து உரைக்கிறார்.

எல்லாவற்றையும் கடந்துள்ள இறைவன் அனைத்திலும் கலந்துள்ளான் என்பது சைவ சித்தாந்தமும் சூஃபி நெறியும் போற்றும் கொள்கையாகும். இதனையே மஸ்தான் சாகிபும் விளக்குகிறார். இதனுடன் எங்கும் நிறைந்துள்ள இறைப் பண்பினையும் போற்றிப் பாடுகின்றார்.

தமிழ்நாட்டில் இறை வழிபாட்டில் மலர் தூவி, மாலை சூட்டி அர்ச்சனை நிகழ்த்துவது உருவ வழிபாட்டில் காணப்படும் மரபாகும். மலர் தூவி இறைவனை வழிபடுவது இஸ்லாமிய மரபன்று. எனினும், இத்தமிழ் மரபைப் போற்றிப் பராபரக் கண்ணியில் மஸ்தான் சாகிபு,

எப்பொருளுந் தானா யிலங்குமுனைப் பூசை செய்ய

புட்பம் எடுக்கவுந்தான் போமோ பராபரமே!

என்று பாடுகின்றார்.

மலரில் மணம் கலந்திருப்பது போன்று இறைவன் எங்கும் கலந்திருப்பதை மலர் கொண்டு விளக்கும் பாங்கு மஸ்தான் சாகிபிடம் காணப்படுகிறது.

இறைவன் ஒருவன் என்பதை வலியுறுத்தும் மஸ்தான் சாகிபு படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய எல்லாத் தொழில்களையும் அவனே இயற்றுகிறான் எனும் கருத்தைத் தம் பாடல்களில் இழையோடச் செய்கிறார்.

உலகப் படைப்புப் பற்றியும் ஆன்மா முன்னேறுவதற்குத் தடைகளாக இருப்பன பற்றியும் அவற்றைக் கடந்து முன்னேறும் வழிகளைப் பற்றியும் மஸ்தான் சாகிபு சைவ சித்தாந்தத்தை அடியொற்றியே கூறுகிறார். அருள் வடிவாகிய இறைவன் மதத்தின் பேரால் பகை வளர்த்து இரத்தம் சிந்தும் வெறியர்களுக்கு அகப்படமாட்டான் என்கிறார். மதபேதம் பேசித் திரியும் மதி கெட்டவர்க்கு எட்டாத வான் கருணை வெள்ளம் தான் இறைவன் எனவும் கூறுகிறார்.

பகை வளர்த்துப் பிரிக்கும் மதங்கள் அத்தனையையும் விட்டுவிட்டு 'ஒன்றே குலம்' என உயிர்களையெல்லாம் இணைக்கும் உன் அன்பு மதத்தை எனக்கு அருள் புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார்.

தூய அருள் நெறி எங்கும் பரவ வேண்டும் என்றும், மதபேதமற்ற அன்புலகம் தோன்ற வேண்டும் என்றும் மஸ்தான் சாகிபு வேண்டுகிறார். இதற்குத் தம் பாடல்கள் உதவ வேண்டும் என்றும் விரும்புகிறார்.

ஏழைஅடி யேன்அறி விலாமல்உள ருந்தமிழ்க்கு

இரங்குவதும் எக்கா லமோ

தீதுமத பேதங்கள் அற்றுமே எங்குமிது

செல்வதுவும் எக்கா லமோ **(மு.ச.89)**

என்று பாடும் மஸ்தான் சாகிபின் பாடல்களைப் பிற சமயங்களைச் சார்ந்த அன்பர் பலரும் வேறுபாடு இன்றிப் படித்தனர். படிக்கின்றனர். இதே போல் பலரும் அவருக்குச் சீடராகவும் இருந்தனர். இவையெல்லாம் அவரது ஏக்கம் ஓரளவுக்கு நிறைவேறி இருப்பதையே காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் வசித்து வரும் இந்து, முஸ்லீம் மக்களின் சமூக உறவுக்கு இத்தகைய பாடல்கள் பெரிதும் காரணமாக இருந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது.

சில துறைகளில் சில காரணங்களுக்காகப் பரிபாஷையைப் பயன்படுத்துவர். ஆன்மீகத் துறையினரும் பரிபாஷையைப் பயன்படுத்துவர். சூஃபி ஞானிகளும் பயன்படுத்துவர். குணங்குடி மஸ்தான் சாகிபும் பரிபாஷையைப் பயன்படுத்துகிறார்.

சிவம், சத்தி, உமை, மனோன்மணி, அம்பிகை, வாலை, பரை, கேசரி, சாம்பவி, தட்சிணாமூர்த்தி, நந்தி, துளவமணிமார்பன், சிற்றம்பலம் ஆகிய பிற சமயக் கடவுளர் பெயர்களைக் குணங்குடி மஸ்தான் சாகிபு தம் பாடல்களில் பரிபாஷைகளாகப் பயன்படுத்துகிறார்.

இது அவரது சமயப் பொறையைக் காட்டுகிறது. சமரச மனப் போக்கையும் பறைசாற்றுகிறது.

குணங்குடி மஸ்தான் சாகிபு இஸ்லாம் தந்த இலக்கியவாதி; தத்துவ ஞானி; அவர் தமிழுக்குக் கிடைத்த இன்னொரு தாயுமானவர். அவர்தம் பாடல்கள் இஸ்லாமியக் கருத்துகளை உள்ளடக்கியவை. ஆயினும், சமரசப் பார்வை உடையவை. இச்சிறப்புக் கருதியே அவர் பாடல்கள் சமய வேறுபாடின்றிப் போற்றப்படுகின்றன. அவற்றில் சைவ சமய அரிய பரிபாஷைகளும் காணக்கிடைக்கின்றன. இவை சமய ஒற்றுமைக்கு வழி வகுக்கின்றன.


●

தலைவர், தமிழியல்துறை


பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

திருச்சிராப்பள்ளி. 620 024


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்



₹ 245/-



₹ 190/-




₹ 145/-



₹ 190/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



சேட்டுக்கழித்தல் எனும் பள்ளத்துப் பொங்கல்

பெ. கோவிந்தசாமி
முனைவர் சி. முத்துகந்தன்

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் திருமணம் என்பது ஆண் - பெண் ஒன்றிணையும் ஒரு முக்கியச் சடங்கின் நிகழ்வாகும். ஒரு மனிதன் அவன் வாழும் இனக்குடியிலிருந்து முழுமனிதன் என்னும் நிலையைப் பெறவேண்டுமெனில், அது திருமணத்தின் மூலமாகவே நிறைவேறுகின்றது. அதனால்தான் இவர்களின் குடிமரபுகளின்படி, திருமணம் ஆனவர்களுக்கு மட்டுமே நடுகல் நடும் மரபும் வழக்கமும் இருந்து வருகின்றன. தமிழரின் தொன்மையான நடுகல் வழிபாட்டை உயிர்ப்புடன் இன்றுவரை வைத்திருக்கிறார்கள். திருமணம் ஆகாமல் ஒருவர் இறந்து விட்டாலும் சடங்குகள் எதுவும் செய்யாமல் புதைத்தோ எரித்தோ விடுகின்றனர். இங்குத் திருமணம் என்பது சமூக உயர்விற்கு வழிவகுக்கும் பண்பாட்டு எச்சமாக மிளிர்கின்றது. "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்ற (குறள்:942) திருக்குறளின் மூலம், ஒருவர் முதலில் உண்ட உணவு செரித்ததை அறிந்து

உண்டால், உடலுக்கு மருந்தும் தேவையில்லை என்று திருவள்ளுவரும் மேற்கூறியதன் சுருக்கமாக "மீதூண் விரும்பேல்" என்று (ஆத்திசூடி:90) பிற்கால ஔவையாரும் உணவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றனர். ஒரு மனிதன் உயிர்வாழ உணவும் நீரும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதேபோல், ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் நீரும் நெருப்பும் உணவும் சடங்குகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவ்வகையில், கொங்கு நாட்டில் அருந்ததியர் (சக்கிலியர்) இனக்குடியினரின் "சேட்டுக்கழித்தல்" என்னும் சடங்கியல் நிகழ்வும் அதனுடன் தொடர்புடைய "பள்ளத்துப் பொங்கல்" என்ற உணவின் தன்மைப்பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.

ஐந்திணை தொழிற்குடியினர்

தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டே வாழ்ந்துவரும் தொல்குடிகளில் சிறுகாரோடர், தோட்டி, உறைகாரர், பகடை, தோல் வினைஞர், தோல் துன்னர், செம்மார் மற்றும் பறம்பர் போன்ற இனக்குடிகளிலிருந்து தோன்றிய பிரிவினர் சக்கிலியர். இவர்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடமும் தன் இனத்தைச் சேர்ந்தவர்களிடமும் தமிழும் தெலுங்கும் கலந்த ஒரு கலவையான தமிழ் மொழியினைப் பேசுகின்றனர். இம்மொழி இவர்களுக்கென்று தனித்துவமான பண்பாட்டு முறையில் காணப்படும் பழங்குடியினரின் மொழியைப் போலவே, சிறப்புத்தன்மை வாய்ந்ததாகும். இவற்றில் ஏறத்தாழ எண்பது விழுக்காட்டுச் சொற்கள் தமிழும் இருபது விழுக்காட்டுச் சொற்கள் கொச்சையான தெலுங்கு மொழிச் சொற்களும் காணப்படுகின்றன. அதேவேளை, எழுத்து வடிவம் இல்லாத் தொல்குடியினரின் மொழியாகும். ஒரு மொழி பலராலும் பேசப்படும் பொழுது, பேசும் இடம், செய்யும் தொழில் மற்றும் பேசுவோரின் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் அதன் இயல்புகள் வடிவங்களில் சிலமாற்றங்கள் காணப்படுவது இயல்பு நிலையிலுள்ள ஒன்றாகும். சான்றாக, பழங்குடியினர் மொழிகள், வட்டாரமொழிகள் ஆகியவை ஒரு மொழியின் அடிப்படையில் ஓர் இனக்குழுவினரை இனவரையறை செய்தல் என்பது தவறான முடிகளைத் தரும். அதற்குச் சரியான சான்று சக்கிலியர் இனக்குழுவினர் ஆவர்.

சங்ககாலத்தில் தோல் தொடர்பான பணிகளைச் செய்துவந்த ஐந்திணையிலும் வாழ்ந்து வந்த தொழிற்குடியினரே சக்கிலியர் என்போர். இவர்கள் கங்கையும் கடாரமும் கொண்ட முதலாம் இராஜேந்திர சோழனின் ஆட்சிக்காலத்தில் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ரிஷபேஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டின் சான்றுகள்படி, ஏறத்தாழ ஆயிரத்தி முப்பதாம் (1030) ஆண்டின் தொடக்கத்தில் அப்பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். அதேபோல், சக்கிலியர் என்னும் சொல்லும் முதன்முதலாக இக்கல்வெட்டில்தான் காணவும் கிடைக்கின்றது. சக்கிலியர் என்னும் சொல் நேரிடையாக ஒரு பிரிவினரைக் குறிக்கும் வகையிலும் குறிப்பாக இவர்கள் தோலில் செருப்புத்தைக்கும் தொழிற்குடியினர் என்பதையும் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது.

சடங்குகள்

ஓர் இனக்குழுவினரது வாழ்வில் காணப்படும் தொன்றுதொட்டு நீண்டநெடிய ஓர் அறுபடாத இனவழிப் பண்பாடாகச் சடங்குகள் அமைகின்றன. ஏன்? எதற்கு? எப்படி? என்ற அடிப்படையில் கேள்வி எதுவும் இல்லாமல், வழிவழியாக முன்னோர்கள் செய்துவந்ததைப் பின்னால் வரும் சந்ததியினரும் கடைப்பிடித்து வருகின்றனர். இவர்கள் சடங்குகளைச் "சாங்கியம்" என்னும் வடமொழிச் சொல்லால் குறிக்கின்றனர். மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி (2002) சடங்கு என்பது நிகழ்த்தப்படுவது (ritual is performed); அழகியல் வெளிப்பாட்டுடன் ஓர் அதீதப் புலப்பாட்டினை வெளிப்படுத்துவது (aesthetically marked and weightened mode of communication). இதில் பரஸ்பர உறவுடைய இரண்டு கூறுகள் உண்டு. ஒன்று: சடங்கென்பது ஒன்றைச் செய்து இன்னொன்றைப் பெறுவதற்காக நிகழ்த்தப்படுவதாகும். இரண்டு: சடங்கென்பது 'ஒன்றைச் செய்து இன்னொன்றை அடைவது' (performance of something, to get another thing) என்னும் ஏற்பாடாக இருப்பதால் இதில் 'நிகழ்த்தப்படுதல்' அடிப்படையாக அமைகின்றது என்பார். அவ்வகையில், "சேட்டுக்கழித்தல்" என்னும் சடங்கியலும் ஒன்றை இழந்து, ஒன்றைப் பெறுவதற்குச் செய்யப்படும் சடங்காகும். அதேவேளை இதுபோன்று மறைமுகமாகச் செய்யும் சடங்குகளை மேனாள் பழங்குடியினர் ஆய்வு நடுவத்தின் இயக்குநர் சி.மகேசுவரன் (2023) "கமுக்கச் சடங்குகள்" என்பர்.

சேட்டுக்கழித்தல்

"சேட்டுக்கழித்தல்" சடங்கு என்பது ஓர் ஆணுக்கு மட்டுமே நிகழ்த்தப்படும் சடங்காகும். இதில், திருமணம் செய்து கொண்ட ஓர் ஆண் அல்லது திருமணம் செய்துகொள்ளும் வயதுள்ள ஓர் இளைஞர் மட்டுமே பங்கேற்கின்றனர். உடலும் உள்ளமும் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதன் அடிப்படையில் செயல்படுத்தும் சடங்காகவும் அதுமட்டுமின்றி, இனிமேல் இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடவும் மாட்டேன் என்ற உறுதிமொழியோடு சத்தியம் செய்யும் சடங்காகவும் சக்கிலியர் பண்பாட்டில் இணைந்து காணப்படுகின்றன. ஓர் ஆண்மகன் நீண்ட நாட்களாகச் சரியாக உணவு எடுத்துக்கொள்ளாமல் கவலை கொண்டவனாகவும் உடல்நிலை சரியில்லாமல் பித்துப்பிடித்தவன் போலவும் காணப்படுவான். அவன் நாள்தோறும் உடல்நலம் மெலிந்துகொண்டு வருவதைப் பெற்றோர்கள் கவலை கொண்டு, அவனிடம் நீ எதாவது? தவறு செய்திருந்தால், சொல்லிவிடு என்று கேட்பார்கள். அவன் தன் பெற்றோர்களிடம் சொல்வதற்கு வெட்கப்பட்டு, எதுவும் சொல்லாமல் இருப்பான். வேறுவழியின்றி, அவனுடைய பெற்றோர்கள் ஊரிலுள்ள பெரியோர்களான ஊர்ப் பெரியதனக்காரர், கொத்துக்காரர், கோல்காரர் மற்றும் பகடையார் போன்றோர்களிடம் தன் மகனின் நிலையினை எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் நால்வரும் ஒன்றாக இணைந்து, இவனிடம் நடந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லிவிடு என்று மிரட்டியும் இல்லையெனில், அன்போடு கேட்டும் உண்மைத் தன்மையினைத் தெரிந்துக்கொள்கின்றனர். அதன்பின்னர் அவனின் பெற்றோர்களிடம் உங்கள் மகனுக்குச் "சேட்டுப்பிடித்து" உள்ளது. அதனை இறக்கினால் அவன் பழைய நிலைக்குத் திரும்புவான் என்றனர். இவர்களும் தன்மகனின் மேலுள்ள பாசத்தால், பூசைக்கு ஏற்பாடுகள் செய்யுங்கள் என்று ஒரு பெரிய தொகையினையும் வழங்குவார்கள். அவர்களும் பூசைக்குத் தேவையானவற்றை எல்லாம் தயார்செய்து, ஓரிரு நாளில் தகவல் கொடுப்பார்கள். இதனைத் தகவலாளி செங்கோட்டையன் மற்றும் கண்ணுப்பையன் மூலமாக அறியமுடிகிறது.

படையலுக்குரிய பொருட்கள்

கருப்பு நிறமுள்ள கெடாய்க்குட்டி, ஒரு கருப்புத்துண்டு, ஒரு சிகப்புத்துண்டு, ஐந்து புதுவேட்டித் துண்டு, மது வகையில் எதாவது ஒன்று, எலுமிச்சைப்பழம், கருகமணி, மாட்டு மூத்திரம் (கோமீயம்) அல்லது மஞ்சள் தண்ணீர், மாட்டுசாணி மற்றும் ஆவாரந்தழை ஆகியவற்றைத் தயார்நிலையில் வைத்துக்கொண்டு, பூசைக்குத் தேவையான பொருட்களுடன் நள்ளிரவில் பன்னிரண்டு மணிக்குமேல், ஊரின் எல்லை அல்லது சுடுகாட்டில் பூசை செய்ய முற்படுகின்றனர். இதில், வேறொருவரும் கலந்துக்கொள்ள அனுமதியில்லை. பண்டைத் தொல்குடிகளிடம் கள் என்பது முக்கியப் படையல் பொருட்களில் ஒன்றாகச் சங்ககாலம் முதல் சமகாலம் வரையிலும் சடங்குகளில் காணப்படுகின்றது. தமிழர்களின் வாழ்வியலை எடுத்துக்கூறும் இடங்களில் எல்லாம் பலவகையான பானங்களைக் குடிக்கும் பழக்கம் நீண்ட நாட்களாக அவர்களிடையே இருந்ததை அறியமுடிகின்றது. அதேசமயம், இன்று பெரும்பாலானோரிடையே தேநீர்க் குடிக்கும் பழக்கம் இருப்பதுபோல், மதுக்குடிக்கும் வழக்கமும் உணவு வகைகளில் ஒன்றாகவே இருந்துள்ளது. அதனால்தான் சக்கிலியரும் இன்று படையல் பொருட்களில் முக்கிய உணவாகக் கள் மற்றும் இறைச்சி வகைகள் இடம்பெறச் செய்கின்றனர்.

கெடாய் வெட்டுதல்

நள்ளிரவு நேரத்தில் ஐந்து நபர்கள் மட்டுமே அவ்விடத்திற்குச் சென்று, முதலில் கோல்காரர் ஏழு கன்னிமார் கற்சிலைகளைக் கிழக்குநோக்கி நட்டு வைத்து, அதன் எதிர்திசையில் ஒரு கருப்பசாமி கற்சிலை ஒன்றையும் நட்டு, கன்னிமார் கற்சிலைக்குச் சிவப்புத்துணி, கருகமணி, மஞ்சள் குங்குமம் ஆகியவற்றையும் எதிரிலுள்ள கருப்பசாமிக்குக் கருப்புத்துணியும் அணிவித்து மரியாதை செய்யும் வகையில் சடங்கின் தொடக்கம் நடைபெறுகின்றது. அதன்பின்னர், சேட்டுப்பிடித்து உள்ளவனை வடக்குநோக்கி அமரவைத்து, கெடாய்க்குட்டியைக் கொண்டுவந்து ஒரே வெட்டில் கொத்துக்காரர் வெட்டி, அதன் இரத்தத்தை அங்கிருந்த கன்னிமார் மற்றும் கருப்பசாமி ஆகியவற்றின்மீது தெளித்துவிட்டு, தலை மற்றும் கால்களை மட்டும் கருப்பசாமி அருகில் வைத்துவிட்டனர். பகடை கெடாய்க்குட்டியின் வாய்க்குள் ஒரு காலை மட்டும் எடுத்துச் சொருகி வைத்துவிட்டு, முண்டத்தை மட்டும் கோல்காரர் கையில் கொடுத்து, சமைத்து வருமாறும் கொத்துக்காரர் கூறினார். அவரும் தயார்நிலையில் கல்லடுப்பு மூட்டியும் வைத்திருந்தார். அஃதாவது, இங்குப் பொதுவாக இரத்தப்பலி என்பது

ஆண் விலங்குகளை மட்டுமே பலியிட்டு வழிபடுவது தொல்குடிகள் மரபாக உள்ளன. பெண் எனப்படுபவள் உயிரின் இனப்பெருக்கத்திற்கு உரியவள் என்பதாலும் தொன்றுதொட்டு தாய்வழிப் பண்பாட்டின் எச்சமாக இருப்பதாலும் பெண் விலங்குகளைப் பலியிடுவதைத் தவிர்க்கும் மரபை இவர்களிடமும் காணமுடிகின்றது.

பள்ளத்துப் பொங்கல்

ஐவரும் கொண்டுசென்ற மதுவினைக் குடித்துவிட்டு. கொஞ்சம்நேரம் கழித்து, ஊரின் பெரியதனக்காரர் சேட்டு என்னும் மனநோய் பிடித்தவனை அழைத்து, கன்னிமார் கற்சிலைக்கு முன் உட்காரவைத்துச் சாணியைக் கீழேபோட்டு, வட்டவடிவில் குழிப்பறித்து அதில் மூத்திரத்தை ஊற்றி, ஆவாரந்தழையில் நனைத்து அவன் தலையில் அடித்து, நீ எந்த "முண்டகராஞ" (விதவைப் பெண்) விடம் பாலியல் தொடர்பு வைத்துக்கொண்டாய் என்று கேட்டார். அவனும் கொஞ்சம் மதுபோதையில் எந்தக் கைம்பெண்ணிடம் இருந்தானோ அந்தப் பெண்ணின் பெயரை மூன்று முறை சொல்கிறான். மறுபடியும் மாட்டு மூத்திரச் சாணியில் முக்கியெடுத்த ஆவாரந்தழையில் அடித்து ஒவ்வொரு முறையும் கேட்டார். அவனும் பதில்சொல்லிக் கொண்டே வந்தான். நால்வரும் ஒவ்வொருவராகக் கேட்டு, சேட்டு என்னும் தீட்டைப் போக்கினார். அஃதாவது, இங்குக் கணவனை இழந்த பெண்களிடம் பாலியல் தொடர்பு வைத்துக்கொள்வது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி ஆவாரந்தழையில் அடித்து இறங்குகின்றனர். அதேவேளையில் ஆவாரந்தழை என்பது இங்கு முன்னோரின் குலக்குறி என்றும் தகவலாளி பெருமாள் சன்னையன் கூறுகின்றார்.

கொஞ்சம் நேரம் கழித்து ஐவரும் அருகிலுள்ள கிணற்றிலோ, அமுத்துப்பைப்பிலோ குளித்துவிட்டு மீண்டும் சடங்கு நடக்கும் இடத்திற்கு, புதுவேட்டித் துண்டும் கட்டிக்கொண்டு வருகின்றனர். சூடம் ஏற்றி இனிமேல் இதுபோன்ற தவறை நான் ஒரு போதும் செய்யமாட்டேன் என்றும், ஒரு கைம்பெண்ணின் வாழ்வு கெடுமாறு எந்தவொரு செயலிலும் ஈடுபடமாட்டேன் என்றும் தரையில் விழுந்து கும்பிடுகிறான். அதன்பின்னர், அனைவரும் அங்குச் சமைத்து வைத்திருக்கும் ஆட்டுக்குட்டியின் கறியை சாங்கியத்திற்குக் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, மீதியுள்ள உணவை மண்சட்டியுடன் தலையை மூன்றுமுறை சுற்றி உடைத்து எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல், அவரவர் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். மறுநாள் காலையில் தலையோடு தண்ணீர் வார்த்துக்கொண்டு, குலத்தெய்வக் கோயிலுக்குச் சென்றுவந்தால், அவனைப் பிடித்திருந்த சோம்பலும் மனநோயும் நீங்கி, எப்போதும் போலவே அவனும் சுறுசுறுப்பாக இருப்பான். இச்சடங்கானது முற்றிலும் நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படுவதாகும். இதனைச் சக்கிலியரின் வட்டார வழக்கில் "வக்கப் பொங்கல்" (பள்ளத்துப் பொங்கல்) என்று அழைக்கின்றனர். அஃதாவது, ஒருவன் நீண்ட நாட்களாக, உடல்நலம் சரியில்லாமல் பித்துப்பிடித்தவன் போல் இருந்தாலோ அல்லது விதவைப் பெண்களிடம் தகாதவுறவு வைத்துக்கொண்டு இருப்பது தெரியவந்தலோ, இவனுக்குச் சீக்கிரம் வக்கப்பொங்கல் வைக்கவேண்டும் என்று இன்றும் கேலியும் கிண்டலும் செய்யும் வழக்கம் இவர்களிடம் இன்றும் காணப்படுகின்றது.

கறுப்பு – சிவப்பு

மேற்கூறிய சடங்கில் கறுப்பு - சிவப்பு வண்ணங்களைப் பயன்படுத்தி உள்ளனர். இது, தமிழினக்குடிகள் இடையே மிக நீண்ட இலக்கிய மரபினைக் கொண்டு காணப்படுகின்றது. தொல்காப்பியரும் "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள, நிலத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப" (தொல்.சொல்.855-856) என்பர். அதாவது, கறுப்புச் சிவப்பு என்பன கோபத்தை உணர்த்தும் சொற்களாகவும் வரும் என்பது தொல்காப்பிய இலக்கணமாகும். மேலும், தொ.பரமசிவன் (2001) "நிறங்கள் மனித உணர்வுகளைப் புலப்படுத்தும்" தன்மையுடையது என்பார். அதேபோல்தான், சிவப்பு வண்ணங்களில் உள்ள கன்னிமார் கற்சிலைகள் பெண்களின் குறியீடாகவும் - அதாவது, கோபத்தின் வெளிப்பாடாகவும் இருக்கின்றன. மேலும் கறுப்பு வண்ணம் என்பது ஆண்களின் குறியீடாகவும் இச்சடங்கில் காட்டப்பட்டுள்ளது. ஆணின் தவறைச் சரிசெய்யவே இங்கு ஆட்டின் கெடாய்க்குட்டியைப் பலியிட்டு அதன் இரத்தத்தைக் கன்னிமார் கற்சிலைகளின்மேல் தெளித்து, கோபத்தைக் குறைத்து, மன்னிப்பு கேட்கும் குறியீட்டின் வடிவமைப்பிலேயே சடங்கு நிகழ்த்தியுள்ளனர். இதேபோல்தான், "மாட்டுச்சாணம்" என்பது வளமையின் குறியீடு என்பதாலும் அதனை ஒரு வழிபாட்டுப் பொருளாகவும் பல்வேறு

சுபநிகழ்வுகளிலும் மற்றும் துக்க நிகழ்வுகளிலும் பயன்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆவாரந்தழை" என்பது சக்கிலியர் இனக்குழுவினரின் குலக்குறியாகக் காணப்படுகின்றது. சக்கிலியர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது மனைவியின் தாலிக்கயிற்றை அறுத்துப் பசும்பால் வைத்துள்ள குவளையில் போட்டபின்பு, அதனைக் கொண்டு போய் மீண்டும் ஆவாரஞ்செடியில் கட்டி வைக்கின்றனர். மேலும், இறந்தவரின் உடலைச் சுடுகாட்டிலோ இடுகாட்டிலோ வைத்து, நீர்நிறைந்த மண் கலையத்துடன் பிணத்தை மூன்றுமுறை வலஞ்சுற்றி வரும்போது, இடக்கையில் கலயத்தைப் பிடித்துக்கொண்டு, வலக்கையால் ஆவாரந்தழையினைச் சுழற்றிக்கொண்டே, இறுதியில் கலையத்தைக் கீழேபோட்டு உடைத்து விடுவதோடு, ஆவாரந்தழையினைப் பிணத்தின் கால் மாட்டிலே வைத்து விடுகின்றனர். இங்கு ஆவாரஞ்செடி என்பது வளமையின் குறியீடு என்பதோடு இல்லாமல், வறட்சியான காலங்களில் வளர்வது போலவே, கணவன் இல்லாத காலத்திலும் வாழ்வது எப்படி என்பதையும் ஆவாரஞ்செடி எடுத்துக்காட்டுகின்றன.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணையும் போலவே, நிலம் சார்ந்த ஒழுக்கமான செயல் அல்ல என்பதை இங்கு நினைவூட்டும் வகையில் இச்சடங்கு அமைந்துள்ளது. இருப்பினும், சேட்டுக்கழித்தல் என்னும் சடங்கின் முக்கிய நோக்கம் திருமணம் செய்துகொண்டு முறையாகப் பாலுறவில் ஈடுபடவேண்டும் என்னும் கற்பு நெறியினை ஆணுக்கும் பெண்ணுக்கும் எடுத்துக்காட்டுகின்றது. அதுமட்டுமின்றி, கணவனை இழந்த பெண்களிடம் பாலியல் உறவு வைத்துக்கொள்வது தவறு என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமில்லாமல், கணவனை இழந்த பெண்ணின் குடும்பச் சூழலையும் கணவன் இல்லாமல் இவள் எப்படிக் கருவுற்றாள் என்னும் பழிச்சொல்லும் வந்துவிடக்கூடாது என்னும் உயர்ந்த நிலையில், அவளை முறையாகத் திருமணம் செய்துகொண்டு ஒழுக்க நெறியோடு வாழவேண்டும் என்ற அறிவுறுத்தலின்படி "சேட்டுக்கழித்தல் எனும் பள்ளத்துப் பொங்கல்" சடங்கு இடம் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

துணைபுரிந்த நூல்கள்

1. பரமசிவன், தொ. 2002. "தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்", நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
2. ……, 2001. "பண்பாட்டு அசைவுகள்", காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
3. பாரதி, பக்தவச்சல. 2002. "தமிழர் மானிடவியல்", மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
4. ……, 2021. "சங்ககாலத் தமிழர் உணவு: பண்டைய அடிசல் முறைகள்", காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
5. ……., 2020. "சங்ககால உணவு மனிதகுல வரலாற்றில் பண்டைத் தமிழரின் உணவாதார வகிபாகங்கள்", கல்லளைப் பதிப்பகம், புதுச்சேரி.
6. மகேசுவரன்., சி. 2023. "பண்பாட்டு ஆய்வியல்" (பண்பாட்டியல் குறித்த முழுதளாவியப் பார்வை), பாரதி புத்தகாலயம், சென்னை.
7. கோவிந்தசாமி., பெ. 2026. "பர்கூர் மலை: தொல்லியலும் இனவரைவியலும்", நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

தகவலாளர்கள் பட்டியல்

1. செங்கோட்டையன் த/பெ செல்லமுத்து (வயது-62), வெள்ளையம்பாளையம், அந்தியூர் வட்டம், ஈரோடு.
2. கண்ணுப்பையன் த/பெ சின்னான் (வயது-70), ரெட்டிப்பாளையம், வெள்ளித்திருப்பூர் ஊராட்சி, ஈரோடு.
3. பெருமாள் த/பெ சன்னையன் (வயது-71), எலச்சிபாளையம், பர்கூர் ஊராட்சி, ஈரோடு.
4. மாதையன் த/பெ பெருமாள் (வயது-65), பெஜ்ஜிலெட்டி, பர்கூர் ஊராட்சி, ஈரோடு.

●

கட்டுரையாளர்கள்:


பெ. கோவிந்தசாமி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
கிழக்குத் தாம்பரம், சென்னை-600059.

நெறியாளர்:
முனைவர் சி. முத்துகந்தன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
கிழக்குத் தாம்பரம், சென்னை. 600059.


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
புதிய வெளியீடுகள்



ரூ 865/-




ரூ 550/-



ரூ 460/-



ரூ 225/-



ரூ 450/-



ரூ 445/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.



பெயரில் மட்டுமின்றி, செயலிலும் மாணிக்கமாக வாழ்ந்த மாமனிதர்!

சா.ஜெயராஜ்

"திருடன் திருடன்..." என்று கூவியவாறு துரத்துகிறார் ஒரு காவலர். அவர் எதிர்பார்த்ததை போலவே, பொதுமக்கள், காவலரிடம் இருந்து தப்பிக்க முனைந்தவரை விரட்டிப் பிடித்து, காவலரிடம் ஒப்படைத்தனர்.

"கட்சி வேலை தொடர்பாக தென்காசிக்குச் சென்று அதன் அருகேயுள்ள குற்றாலத்திற்கு ப. மா. 12.06.1950 அன்று சென்றிருந்தார். ஐந்தருவி செல்லும் சாலையிலிருந்து இலஞ்சி கிராமத்திற்குச் சாலை ஒன்று பிரியும். அப்பிரிவுச்சாலையில் சந்து ஒன்று உண்டு. அதன் வழியாக தோழர் ப.மா. சென்று கொண்டிருந்த போது பிடிபட்ட தோழர் ப. மாணிக்கத்தை அடித்துத் துவைத்து விட்டனர் காவல்துறையினர்" என்று தன் கட்டுரையில் விவரிக்கிறார், பேரா. ஆ.சிவசுப்பிரமணியன்.

அந்தக் கட்டுரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள. "தோழர் ப. மாணிக்கத்தின் தியாக வாழ்வு" என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. தோழர் ப. மாணிக்கம் அவர்களின் தொடக்கக்கால வாழ்வை இப்பகுதியில் பார்ப்போம்

1922 அக்டோபர் மாதம் 26ஆம் நாள் கடலூரில் பிறந்தார் ப. மாணிக்கம். தந்தையார் திரு. பக்கிரி சாமி பிள்ளை; தாயார் திருமதி மகமாயி அம்மாள்.

இவர் எப்படி கம்யூனிஸ்ட் ஆனார்?

1930-இல் இவருக்கு வயது 8. அப்போது காங்கிரஸ் இளைஞர் இராமச்சந்திரன் என்பவர் திருக்கோயிலூரில் நடந்த போராட்டத்தில் காவல்துறையின் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்து போனார்.

1931இல் பகத்சிங் தூக்கிலிடப்பட்டார் என்கிற செய்தி கடலூரில் பரவி அதை எதிர்த்து கடையடைப்பு உள்ளிட்ட போராட்டங்கள் நடைபெற்றன.

1932இல் காங்கிரஸ் கட்சியின் தடையை மீறி கடலூரில் திருமதி அஞ்சலையம்மாள் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். காவல்துறை தாக்குதல் நடத்திக் கூட்டத்தைக் கலைத்து, திருமதி அஞ்சலையம்மாள் அவர்களைக் கைது செய்கிறது.

தனது 8,9,10 வயதுகளில் நடந்த இந்த மூன்று நிகழ்ச்சிகளும் ப. மாணிக்கம் அவர்களை

மிகவும் பாதித்து, பிரித்தானிய ஆட்சியின் மீது வெறுப்பையும் நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்து விட்டன.

இளம் வயதில் உருவான இந்த எண்ணம் திடமாக வளர்ந்ததன் விளைவாகத் தான், ப. மாணிக்கம் பொதுவாழ்வில் அடியெடுத்து வைக்கிறார்.

இவ்வாறு ப. மாணிக்கம் அவர்களின் தியாக வாழ்க்கை வரலாற்றை விரித்துக் கூறும் இந்த நூலில் அவரே தன்னைப் பற்றியும், பி.சீனிவாச ராவ், ப. ஜீவானந்தம் கே.பாலதண்டாயுதம், ஏ.எஸ்.கே ஆகிய ஆளுமைகளைப் பற்றியும் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தோழர் மாணிக்கம் அவர்களைப் பற்றி பிற ஆளுமைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

மேலும், ஜனசக்தி பொன்விழா மலர், 1987 இல் வெளிவந்த ஐம்பது ஆண்டுகளின் லட்சியப் பயணம் என்னும் தலைப்பிலான கட்டுரை, தாமரை- உலகத் தமிழ் மாநாட்டு மலர்- 1995 இல் உலகத் தமிழ் மாநாடு - 1995 என்னும் தலைப்பிலான கட்டுரை, புதுவை சுதந்திரம் - சிறப்பு மலர் - 1985 இல் வெளிவந்த பிரஞ்சிந்திய விடுதலை இயக்கம் என்னும் தலைப்பிலான கட்டுரை என ஆகிய ப. மாணிக்கம் அவர்களின் எழுத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

தஞ்சைப் பகுதியில் நிலவுடைமையாளர்களால் சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடந்த விவசாயிகளின் உள்ளங்களில், 'அடித்தால் திருப்பி அடி...' என்ற உரிமை நிறைந்த வீர முழக்கத்தை அடிக்கோடிட்டு எழுதிய தோழர் பி .சீனிவாச ராவ் அவர்களைப் பற்றிய கட்டுரையில். சீனிவாச ராவ் 1930இல் தமிழ்நாட்டுக்கு வந்தது, அதே ஆண்டில் சென்னை ஜார்ஜ் டவுனில் அந்நியத் துணிகள் விற்பனைக்கு எதிராகப் போராடியதன் விளைவாகத் தாக்கப்பட்டு சுய நினைவை இழந்தது, சிறையில் சென்னை மாகாண முதலாவது அமைப்பாளரான அமீர் ஹைதர் கான் அவர்களைச் சந்தித்து, கொள்கையில் தன்னை மேம்படுத்திக் கொண்டது தொடங்கி, சீனிவாச ராவ் அவர்களின் மொத்த அரசியல் பணியையும் மிகச் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

சீனிவாச ராவ் அவர்களின் போராட்டங்கள், சிறைத் துன்பங்கள் எனப் பல முக்கியமான நிகழ்வுகள் இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"1975 செப்டம்பர் 30இல் அவர் மறைவின் 14 ஆவது நினைவு நாளன்று, அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்ற போது திருத்துறைப்பூண்டியில் இரண்டு லட்சம் பேர் திரண்டனர். அந்த நாளில் விவசாயத் தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் நிறைந்த அந்தப் பேரணியினர் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்வதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்." இவ்வாறு மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார்.

இது அப்போது உருவெடுத்த விவசாயிகளின் அரசியல் எழுச்சி ஆகும்.

அடுத்து, ப.ஜீவானந்தம் அவர்களைப் பற்றிய கட்டுரையில், சாதி அமைப்பு மற்றும் சாதிப்பாகுபாட்டின்பால் ஜீவாவுக்கு இருந்த வெறுப்பின் விளைவாக, சுயமரியாதை இயக்கத்தின்பால் அவர் ஈர்க்கப்பட்டது, புரட்சியாளர் பகத் சிங் எழுதிய. 'Why became an Atheist?' என்ற புத்தகத்தைத் தமிழில் 'நான் ஏன் நாத்திகனானேன்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிட்டதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளால் 1931இல் கைது செய்யப்பட்டது உள்ளிட்ட பல செய்திகளைக் கொண்டது ப. மா. எழுதியுள்ள இந்தக் கட்டுரை.

காங்கிரஸ் கட்சியின் உள்ளே இருந்து கொண்டே கம்யூனிஸ்டாகச் செயல்படத் தொடங்கிய ஜீவா, இரண்டாம் உலகப் போரை எதிர்த்ததற்காக 1939இல் கைதுசெய்யப்பட்ட நிகழ்வு, அவர் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது, காந்தி ஜெயந்தி விழாவில் உரையாற்றியதற்காக திருவனந்தபுரம் சிறையில் அடைக்கப்பட்டது, இளைஞர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் போன்றவற்றைக் கட்டியமைத்து திருவிதாங்கூர் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டியது, கோவை மில் தொழிலாளர் சங்கத்தை நிறுவி 30,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்களைத் திரட்டி வேலைநிறுத்தம் செய்தது உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார், ப. மா.

அடுத்து, தோழர் கே. பாலதண்டாயுதம் அவர்களைப் பற்றிய கட்டுரை.

தோழர் பாலன் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது நடந்த நிகழ்ச்சி ஒன்று.

அதில், பகத்சிங்கைப் போல தியாக உணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில், தங்கள் கால்களில் விலங்கிட்டும், கால்களில் ஆணி அடித்து, இரத்தக் காயத்துடனும் வெகுதூரம் நடந்து தியாக சோதனைப் போட்டி நடத்தினர். அதில் பாலன் வெற்றி பெற்றுள்ளார்.

அடுத்து, "பாலன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்ற போது, துணைவேந்தர் சீனுவாச சாஸ்திரியின் அநீதிக்கு எதிராக பாலன் மாணவர்களைத் திரட்டி கடுமையான போராட்டம் நடத்தியிருக்கிறார். 1938ஆம் ஆண்டில் இந்தப் போராட்டம் சுமார் இரண்டு மாதக் காலம் தொடர்ந்து நடைபெற்ற இந்தப் போராட்டம் இந்திய மாணவர் வரலாற்றிலும் நீண்டதொரு போராட்டமாகும். இப்போராட்டத்தில் பாலன் மட்டும் பழிவாங்கப்பட்டுள்ளார். பொது இலட்சியத்திற்காக தியாகம் செய்தார். அவருக்கு அப்போது 20 வயது."

இந்தச் செய்திகளுடன் பாலனின் தலைமறைவு வாழ்க்கை, சிறை வாழ்க்கையைப் பற்றியும் ப. மா. இந்தக் கட்டுரையில் எழுதியுள்ளார். 1949ஆம் ஆண்டில் அடக்குமுறை அதிகரித்த போது, பாலனுடன் சேர்ந்து, மலிவாகக் கிடைத்த கோதுமைத் தவிட்டைப் பனைவெல்லம் சேர்த்து சாப்பிட்டு உடலில் பட்ட சிக்கலையும் ப. மாணிக்கம் எழுதியுள்ளார்.

அடுத்த கட்டுரையில், ஏ.எஸ்.கே அவர்களின் சிறை வாழ்க்கையைப் பற்றியும், மார்க்சின் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை தொடங்கி, 1960 இல் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் வெளியிட்ட அறிக்கை வரை விரிவான அரசியல் விளக்கங்களைக் கொண்ட 'கம்யூனிசம்' என்ற மாபெரும் சிறப்பு வாய்ந்த நூலை, எஸ் கே எழுதியதையும் தோழர் மாணிக்கம் பதிவு செய்துள்ளார்.

'ஜனசக்தி' இதழின் பொன்விழா மலர் - 1987 இல் ப.மா. எழுதிய கட்டுரையும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

அதில், "ஜனசக்தி 1937 நவம்பர், இல் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் வாரப் பத்திரிகையாகத் தொடங்கப்பட்டது" என்று தொடங்கி, இடையில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"1937 முதல் 1942 வரை, ஜனசக்தி, நாட்டின் விடுதலை இயக்கத்திற்கும், உழைப்பாளி மக்கள் தங்களின் உரிமைகளைப் பெற நடத்திய போராட்டங்களுக்கும், ஜமீன் இனாம் ஒழிப்பு - விவசாயிகள் இயக்கங்களுக்கும் உறுதுணையாக நின்றது. தமிழகத்தில் மாணவர்கள் இயக்கம் வளர அன்று பெரிதும் உதவியது 'ஜனசக்தி' தான். தமிழக அரசியலில் இடதுசாரிக் கருத்துகள் பரவவும், கோவை, மதுரை, சென்னை போன்ற நகரங்களில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டங்களுக்குத் துணை நின்றது. ரயில்வே தொழிலாளர் இயக்கம் புதுப்பித்து வளரவும் விரிவடையவும் துணை நின்றது ஜனசக்தி பத்திரிகையே" என்று ஜனசக்தி ஐம்பது ஆண்டுகள் தமிழ் மண்ணுக்கு என்ன தொண்டு செய்தது என்று விரிவாக எழுதி இருக்கிறார், மாணிக்கம்.

இவற்றுடன், உலகத் தமிழ் மாநாடு, 1995 பற்றியும், பிரஞ்சிந்திய இயக்கம் பற்றியும் இவர் எழுதியுள்ள கட்டுரைகள் வாசகர்களுக்கு முதன்மையான செய்திகளைத் தருகின்றன.

நூலின் பிற்பகுதியில் மூத்த தோழர் அமரர் இரா. நல்லகண்ணு எழுதிய, "தோழர் ப.மாணிக்கத்தின் தியாக வாழ்வு" என்னும் கட்டுரை இடம்பெற்றுள்ளது.

அதில், "இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட போது, மாணிக்கம் இரண்டாண்டு காலம் தலைமறைவாக இருந்த வேளையில் தனது தந்தையின் இறுதிச் சடங்குக்குக் கூடப் போக முடிய வில்லை என்றும், நெல்லைச் சதி வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக சிறையில் இருந்த போது தோழர் மாணிக்கம் தனது ஒரே சகோதரியின் திருமணத்திற்கும் செல்ல முடிய வில்லை" என்றும் கூறியிருக்கிறார் தோழர் நல்லகண்ணு.

நெல்லைச் சதி வழக்கில் மூன்று ஆண்டுகளும், சீனத் தகராறையொட்டி ஓராண்டுக்கு மேலாகவும் தோழர் ப.மாணிக்கம் சிறையிலிருந்ததைக் குறிப்பிட்டுள்ள நல்லகண்ணு,

"நெல்லை, இராமநாதபுரம், மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த முன்னூறுக்கும் மேற்பட்ட தோழர்கள் மதுரை மத்திய சிறையில் விசாரணைக் கைதிகளாகவும், ஆயுள் தண்டனைக் கைதிகளாகவும் இருந்தோம். கொடிய அடக்குமுறைக்குள்ளான நேரம். குடும்பங்களைப் பிரிந்த இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், வேலையிலிருந்து நீக்கப்பட்ட படித்த இளைஞர்கள் என அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த தோழர்களையும் அரசியல் நெருக்கடியான நேரத்தில் ஒருங்கிணைத்து வழிநடத்திச் சென்றதில் தோழர் ப. மாணிக்கம் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்தித்து ஆறுதல் கூறுவார். அதே நேரத்தில் அரசியல் தெளிவும் நம்பிக்கையும் ஊட்டுவார்.

உள்கட்சி வாழ்வில், தனிநபர்களின் தவறுகளை எடுத்துக் கூறும் அதே வேளையில் பழிவாங்குதலுக்கு இடமளிக்காமல் கூடுமானவரை திருத்துவதற்கு முயற்சி செய்வார்.

கட்சி அமைப்புகளை உருவாக்குவதிலும், மாவட்ட அலுவலகங்களையும் மாநில அலுவலக வேலைகளை முறைப்படுத்துவதிலும் அக்கறை எடுத்து வழிகாட்டி வந்தார், என்று தோழர் மாணிக்கம் அவர்களின் ஆளுமையை விவரிக்கிறார்.

எளிமையான அரசியல் ஆளுமையாக வாழ்ந்து அண்மையில் அமரரானவர் தோழர் இரா. நல்லகண்ணு. அவரே மாணிக்கம் தோழரின்

இயல்பாளுமையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"தலைமறைவு, அடக்குமுறை, சிறைத்தண்டனை இவ்வளவையும் அனுபவித்துக் கொண்டு இம்மியளவும் சபலங்களுக்கு ஆளாகாமல், கட்சிப் பணியாற்றிய கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ப.மாணிக்கம். ஆடம்பர அரசியல் அவருக்கு அறவே பிடிக்காது.எளிமையும் மன உறுதியும் கொள்கைத் தெளிவும் உள்ளவர்."

ப.மாணிக்கம் அவர்களின் சிறப்புகள் என்று முனைவர் மே.து.ரா. எழுதியிருப்பது:

1. அமைப்புகளை உருவாக்கும் திறன்,
2. அணிகளைப் பயிற்றுவிக்கும் பாங்கு,
3. கொண்ட கொள்கைகளில் தெளிவு,
4. பெரும்பான்மையை ஏற்றுக்கொள்ளும் பக்குவம்,
5. எடுத்த முடிவுகளைச் செயல்படுத்துகின்ற உறுதி,
6. மக்கள் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல்,
7. செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுக்கக்கூடிய ஆக்கம்,
8. சிக்கல்களை விவரித்து மையப் போக்குகளைத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற புரிதல்,
9. விவாதங்களுக்கிடையில் திரண்ட கருத்துகளை இணைத்து இலக்கை வரையறுத்துக் கூறும் அறிவு,
10. தன்னை முன்னிலைப்படுத்தாத துணிவு,
11. இயக்க நலனை முன்னிறுத்தும் சால்பு,
12. விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை,
13. பிறர் திறமைகளைக் கண்டு போற்றும் பண்பு,
14. எதிர்காலத்துக்குத் திட்டமிடும் தொலைநோக்குப் பார்வை,
15. அடுத்த தலைமுறையைப் பயிற்றுவிக்கும் கடமையுணர்வு.

